
'நமக்கு நாமே'
தமிழரசு
நவம்பர் 16-30, 1997 ரூ.3


வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டம்





## இந்த இதழில்...


★ மக்கள் உரிமை காப்போம் - முதலமைச்சர் கலைஞர் ... 2

★ அள்ளித்தந்த வெள்ளித் தாரகை - கவியரசர் இளந்தேவன் ... 10

★ செந்தமிழ்ச் செல்வி -டாக்டர் (திருமதி) வெ.கனகசுந்தரம் ... 12

★ திண்டுக்கல் மாவட்ட சுதந்திரப் போராட்டத் தியாகிகள் ... 17

★ அண்ணா பிறந்த நாளில் ஏழைகளுக்கு இலவச பட்டா ... 24

★ பழம் பாடல்-புதுப்பார்வை ... 25

★ கூட்டுறவு இயக்கம்- அது ஜனநாயக அமைப்பின் உயிர்நாடி ... 27

★ வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத்திட்டம் ... 31

★ கோட்பாட்டில் கனிந்த கூட்டுறவுக் கனிகள் ... 33

★ சிந்தனைச் சிறகுகள் -கவிஞர் ஈரோடு தமிழன்பன் ... 38

★ மக்கள் சாசனம் ... 41

★ 'நமக்கு நாமே' திட்டம் (மதுரை மாவட்டம்) ... 42

★ புயல் ... 47



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு
கார்த்திகை
நவம்பர் 16-30, 1997
மலர்:28 இதழ் : 10
விலை ரூ.3




- முதலமைச்சர் கலைஞர்

The task of the protection and promotion of Human Rights is a complex one, and requires the co-operation of all sections of society; political parties, non-governmental organisations, lawyers, judges, public-servants, teachers, police, media-persons, and others.

I appeal to all of you, to observe human rights in your homes, at the work place, in your neighbourhood and everywhere. The goal is to create a culture of Human Rights across the length and breadth of the country.

- இந்த வாசகங்களுக்கு உரியவராக மேடையிலே அமர்ந்திருக்கின்ற நீதிபதி வெங்கடாசலய்யா அவர்களை நான் உங்கள் சார்பிலும் தமிழக அரசின் சார்பிலும் வரவேற்கின்றேன்.

**மனித உரிமை**

அவர் என்ன சொல்கிறார் என்றால் - ''மனித உரிமைகளைக் காப்பாற்றுவது என்பதும், மேம்படுத்துவது என்பதும், கடினமான ஒன்றுதான்; அதற்குச் சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளிலிருந்தும் ஒத்துழைப்புத் தேவை. அரசியல் கட்சிகள், அரசு சாரா நிறுவனங்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், காவல்துறையினர், பத்திரிகையாளர்கள் மற்றும் இன்னோரன்ன எல்லாப் பிரிவினரின் ஒத்துழைப்பும் தேவை. உங்கள் வீடுகளில் மனித உரிமைகளை அனுசரியுங்கள்; நீங்கள் பணியாற்றும் இடங்களிலே மனித உரிமைகளை அனுசரியுங்கள்; உங்கள் அக்கம் பக்கத்தாரிடமும், மற்றும் எல்லா இடங்களிலுமே மனித உரிமைகளை அனுசரியுங்கள் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நமது இலட்சியம், நமது நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் மனித உரிமை கலாச்சாரத்தை உருவாக்கிட வேண்டும் என்பதுதான்''.

இந்த அரிய வாசகத்தை வெளியிட்ட நம்முடைய அன்பிற்குரிய நீதிபதி வெங்கடாசலய்யா அவர்கள் தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவராகப் பொறுப் பேற்று ஆற்றிவரும் அரிய பணிகளுக்காக, நான் என்னுடைய பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் உங்கள் சார்பாக மீண்டும் ஒருமுறை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் எத்தனையோ அலுவல்களுக்கிடையே இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறார் என்று நான் சொல்ல மாட்டேன். ஏனென்றால், இதுதான் அவருடைய அலுவலே. எனவே, அந்த அலுவலுக்காக இன்றைக்கு இங்கே வருகை தந்திருக்கிறார்.

**மகரிஷிகளின் பெயரால்**
**மனித உரிமை மீறல்கள்**

பொதுவாக இன்றைய சமுதாய அமைப்பு, பல்வேறு சூழல்கள் இவைகளை மாத்திரம் வைத்து மனித உரிமைக்கு ஊனம் எப்படி ஏற்பட்டது என்று கணக்கிடுவது சரியல்ல. ஆண்டாண்டு காலமாக இந்தியாவிலே - ஏன் உலகத்தில் - குறிப்பாகத் தமிழகத்திலே மனித உரிமைகளைப் பறிக்கக் கூடிய காரியங்கள், செயல்கள் கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால், சாதிகளின் பெயரால்-உயர்வு, தாழ்வு என்ற ஆதிக்கத்தின் பெயரால் ஏற்பட்டு வருகின்றன. அவைகள் இன்றைக்கு நிலைத்து நிற்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதனால்தான் சம்பூகன் என்ற ஒரு தாழ்ந்த சாதிக்காரன் தவம் செய்ய முடியாமல் அவன் தலையே வெட்டப்பட்டது. அதனால் தான், ஏகலைவன் என்கின்ற ஒரு வேடன், துரோணரிடம் வில்வித்தை கற்றுக்கொள்ள முடியாமல்-அவருக்குத் தெரியாமல், அவருடைய சிலையை வைத்து வில்வித்தை கற்றுக்கொண்டான். கற்றுக் கொண்டவன் அதோடு நில்லாமல் குரு காணிக்கை செலுத்த துரோணரைச் சந்திக்கச் சென்றான். துரோணர், ஒரு வேடன் தனக்கு மாணவனாக அமைந்ததை ஏற்றுக்கொள்ள மனமின்றி, குருதட்சிணையாக அவனுடைய கட்டை விரலையே கேட்டார் என்பதெல்லாம் மனித உரிமைக்கு மாறான செயல்கள்-அந்தக் காலத்திலேயே மகரிஷிகளின் பெயராலேயே நடை பெற்றிருக்கின்றன, என்பதற்கு ஒரு சான்று.

கர்ணன் ஒரு சத்திரியன் என்ற காரணத்தினால் அவனுக்கும் வில்வித்தை, வாள் வித்தை கற்றுக் கொடுக்க மறுக்கப்பட்டது. அவன் சத்திரியன் அல்ல; உயர்ந்த சாதிக்காரன் என்று பொய் சொல்லித்தான் வில்வித்தை கற்றுக்கொள்ள முடிந்தது என்பது புதிய கதையல்ல; பழைய புராணக் கதை.

**நந்தனாருக்கு இழைக்கப்பட்ட அநீதி**

நந்தனார் தாழ்த்தப்பட்ட சாதியிலே பிறந்தார் என்பதற்காக, சிதம்பரத்திலே ஆண்டவனைத் தரிசிக்க அவருக்கு உரிமை இல்லாமல் போனது. அதை-அந்தப் புராண வடிவிலே பார்த்தால்கூட, ஆண்டவன் நடராஜருக்கும் நந்தனாருக்கும் இடையிலே இருந்த ஒரு பெரிய நந்தியைப் பார்த்து, நந்தனார், "சற்றே விலகியிரும் பிள்ளாய், சந்நிதானம் மறைக்குது" என்றுதான் கேட்டாரே

தவிர, ஆண்டவன் ''நந்தியைப் பற்றிக் கவலைப்படாதே நந்தா, நீ தாராளமாக உள்ளே வா'' என்று நந்தனை அழைக்கவில்லை. காரணம், நந்தன் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன். எனவே, அக்கினியிலே குளித்துத்தான்-தூய்மைப்படுத்திக் கொண்டுதான் - ஆண்டவனைத் தரிசிக்க முடியுமென்று அக்கினியிலே அவன் குளித்து விட்டுச் சென்றான் என்கிறார்கள். அக்கினியிலே குளித்த பிறகு சென்றானா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது.

இத்தகைய வர்ண பேதங்கள் நம்முடைய நாட்டில் கடவுளின் பெயராலும், சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும் திணிக்கப்பட்டுவிட்டன. ஆண்டவனுடைய படைப்புத்தான் எல்லா மக்களும் என்று-எல்லா மதங்களும் சொல்கின்றன. அது இந்து மதமானாலும், இஸ்லாமிய மதமானாலும், கிறித்துவ மதமானாலும் எல்லா மதங்களும்-மக்கள் அனைவரும் ஆண்டவனின் படைப்புத் தான் என்று சொல்கின்றன. ஆனால் அதற்கு மாறாகச் சில காரியங்கள் நடை பெற்றுவிடுகின்றன.

ஆண்டவன் தலையிலே பிறந்தவன் உயர்ந்த சாதிக்காரன்; தோளிலே பிறந்தவன் அதற்கு அடுத்த சாதிக்காரன்; தொடையிலே பிறந்தவன் மூன்றாம் சாதிக்காரன்; காலிலே பிறந்தவன் நான்காம் சாதி, ஐந்தாம் சாதி என்று ஆண்டவனின் உடம்பிலேயே இத்தனை சாதிகளும் இருந்ததாகச் சொல்லி, ஆண்டவனையே நாம் இழிவுபடுத்திக் கொண்டிருக்கின்றோம்.



## பகுத்தறிவு கொண்டு சிந்தித்தோமா?

அந்தக் கட்டுக்கதையை உண்மை என்று ஒத்துக்கொண்டாலுங்கூட, ஆண்டவன் உடம்பிலே தலையிலே பிறந்தவன் ஒரு சாதி, காலிலே பிறந்தவன் ஒரு சாதி, தொடையிலே பிறந்தவன் ஒரு சாதி என்று எப்படி வேறுபட்டு இருக்க முடியும் என்பதை நாம் பகுத்தறிவு கொண்டு இதுவரை சிந்தித்தோம் இல்லை.

பலாமரத்தில் கிளையிலும் காய் காய்க்கிறது. அடி மரத்திலும் காய் காய்க்கிறது; வேரிலும் காய் காய்க்கிறது. அத்திமரத்தில் நுனிக்கிளையிலும், இலைக்கு அருகிலும் காய் காய்க்கிறது. அடி மரத்திலும் காய் காய்க்கின்றது. வேரிலும் காய் காய்க்கின்றது. அதற்காக வேரிலே காய்த்த காய் புடலங்காய் என்றோ, அடிமரத்திலே காய்த்த காய் பாகற்காய் என்றோ, மரத்தின் நுனியிலே காய்த்த காய் வேப்பங்காய் என்றோ அல்லது அதுதான் மாங்காய் என்றோ யாரும் சொல்வதில்லை. இப்படி ஒரு மரத்திலே எந்தப் பகுதியிலே காய் காய்த்தாலும் எல்லாம் அந்த மரத்தின் காய் என்பதைப் போல-பலாக்காய் என்பதைப் போல-அத்திக்காய் என்பதைப்போல-ஆண்டவனின் உடலிலே எந்தப் பகுதியிலே பிறந்திருந்தாலும் எல்லோரும் மனிதர்கள்தான் என்கின்ற அந்த எண்ணம் வராமலே தடுக்கப்பட்டுவிட்டது. இது புராண காலம்.

## தந்தை பெரியார் போராடினார்

இந்திய நாட்டின் விடுதலை இயக்கம் தொடங்கி, அந்த விடுதலை இயக்கத்திலே பல பெரியவர்கள் உத்தமர் காந்தியடிகளுடைய தலைமையில், பண்டித நேருவின் வழிகாட்டுதலில், மூதறிஞர் ராஜாஜி போன்றவர்கள் வழிகாட்டுதலில், விடுதலை இயக்கம் நடைபெற்ற அந்தக் காலத்திலேகூட - சேரன்மாதேவியைத் தவிர்க்க முடியவில்லை.

சேரன்மாதேவி குருகுலத்தில் உயர்ந்த சாதிக்காரர்களுக்கு ஒரு இடத்திலே சாப்பாடு, உயர்ந்த சாதிக்காரர்கள் அல்லாதவர்களுக்கு இன்னொரு இடத்திலே சாப்பாடு என்ற பிரிவினை ஏற்பட்ட போதுதான், அந்த இயக்கத்திலே தன்னை, தமிழகத்தின் தளகர்த்தராக ஈடுபடுத்திக் கொண்டிருந்த தந்தை பெரியார் அவர்கள்-மாண்புமிகு நீதிபதி சாமிதுரை குறிப்பிட்டதைப் போல-இந்த மனித உரிமைக்காகப் போராட வேண்டுமென்ற உணர்வைப் பெற்றது-சேரன்மாதேவியிலே நடைபெற்ற இந்தக் கொடுமையைக் கண்ட பிறகுதான்!

அது மாத்திரமல்ல; நான் அறிந்து-நான் திருவாரூர் பள்ளியிலே பயின்று கொண்டிருந்த அந்தக் காலக்கட்டத்தில் 1942-ஆம் ஆண்டிலே கூட கும்பகோணத்திலே ஒரு கல்லூரியில் என்னுடைய நண்பர்கள் தவமணிராசன், கருணானந்தம் போன்றவர்கள் பயின்று கொண்டிருந்த அந்தக் கல்லூரியில் தண்ணீர் குடிப்பதிலே கூட-''இந்தப் பானையிலே உயர்ந்த சாதிக்காரர்கள்தான் தண்ணீர் மொண்டு குடிக்கலாம்; உயர்ந்த சாதிக்காரர்கள் அல்லாதவர்கள் அந்தப் பானையிலே தண்ணீர் எடுக்கக்கூடாது'' என்று - அறிவுரை கூறுகின்ற கல்லூரியிலே கூட இப்படிப்பட்ட ஒரு

பேதம் 42-ஆம் ஆண்டு வரை இருந்தது. அதை எதிர்த்து ஒரு பெரிய போராட்டம் கும்பகோணத்தில் அந்தக் கல்லூரியில் நடைபெற்றது.

அந்தப் போராட்டத்தை பெரியார், அண்ணா போன்றவர்கள் எல்லாம் ஆதரித்து, அந்தக் கொடுமை குடந்தைக் கல்லூரியிலே அகற்றப்பட்டது.

இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், 47-ஆம் ஆண்டிலே நமக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டதென்றாலும் கூட, இன்னமும் மனித உரிமை முற்றிலுமாகக் கிடைக்கவில்லை-மனித சுதந்திரம் கிடைக்கவில்லை.

**சுதந்திரம் கிடைத்த பிறகும்கூட சாதிக் கொடுமை**

உதாரணம் சொல்ல வேண்டுமேயானால்- டாக்டர் அம்பேத்கர் அவர்கள் எழுதிய புத்தகம்- "டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கரின் எழுத்துக்களும், பேச்சுக்களும்" என்ற புத்தகத்தில், ஐந்தாவது தொகுப்பில், மார்ச் 1952-இல் "சண்டே டைம்ஸ்" இதழில் வெளிவந்த ஒரு கட்டுரையை அண்ணல் அம்பேத்கர் அவர்கள் எடுத்து வெளியிட்டிருக்கின்றார்கள். எந்த அளவிற்கு, சுதந்திரத்திற்குப் பிறகுகூட, சாதிக்கொடுமை தலைவிரித்தாடியது என்பதை, அதிலும் குறிப்பாகத் தமிழகத்திலே நடைபெற்ற ஒரு சம்பவத்தை டாக்டர் அம்பேத்கரின் நூலிலே வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

> ***மாணவர்களின் இளம் உள்ளங்களில் மதச் சார்பற்ற தன்மையை, மனித நேயத்தை, சாதி-சமய வேறுபாடுகளைக் களையவேண்டுமென்ற உணர்வை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு பள்ளியிலும், கல்லூரியிலும் மாணவர்கள் சாதி சமயமற்ற நிலையை உருவாக்க மனிதநேய உறுதிமொழியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு அறிவுரை கூறப்பட்டு, தமிழ்நாட்டுப் பள்ளிகளிலே இன்றைக்கு அந்தப் பணி ஒழுங்காக நடைபெற்று வருகிறது***

சுவாமி ஆனந்த் தீர்த் என்பவர் அகில இந்திய அரிஜன சேவா சங்கத்தின் மண்டல அதிகாரியாகப் பொறுப்பேற்றிருந்தவர். தமிழ்நாட்டிற்கு வருகிறார், மனித உரிமை எப்படியிருக்கிறது, சுதந்திரம் எப்படியிருக்கிறது என்பதை ஆராய்ந்து அறிந்து கருத்து வெளியிடுவதற்காக வருகிறார். வந்தவர், தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் மேலூருக்கு அருகேயுள்ள மேலவளவு கிராமத்திற்கு (இப்போது அதிகமாகப் பேசப்படுகிறதே, மேலவளவு, அந்தக் கிராமம் தான்) செல்கிறார். அங்கே நடைபெற்ற கொடுமை பற்றி அவர் கூறுகிறார்.

டீக்கடைகளிலே உயர்ந்த சாதிக்காரர்களுக்கு ஒரு குவளை என்றும், தாழ்ந்த சாதிக்காரர்களுக்கு ஒரு குவளை என்றும் தனித்தனியாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு தாழ்ந்த சாதி வாலிபன், உயர்ந்த, சாதிக்காரர் களுக்கான குவளையை எடுத்து, அதிலே தேநீர் கொடு என்று கேட்டதற்காக, அவர் அடிக்கப்படுகிறார்; உதைக்கப்படுகிறார். அதை எதிர்த்து சுவாமி ஆனந்த் தீர்த் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குத் தொடுக்கிறார். அவ்வளவு பெரிய கொடுமைக்கு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விதிக்கப்பட்ட தண்டனை வெறும் பத்து ரூபாய் அபராதம்தான். இதைப்பார்த்து மனம் கொதித்துப்போன சுவாமி ஆனந்த் தீர்த், இரண்டு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த வாலிபர்களைத் தன்னோடு அழைத்துக்கொண்டு மற்றொரு கிராமத்திற்குச் சென்று, அங்கே, தானே முன்னின்று தேநீர் கேட்கிறார். தர மறுக்கிறார்கள்; தர மறுப்பது மாத்திரமல்ல. அந்த இரண்டு வாலிபர்களை மட்டுமல்லாமல், சுவாமி ஆனந்த் தீர்த்தையும் அடித்து உதைத்து விரட்டுகிறார்கள். அந்தக் கிராமத்தைப் பற்றி சுவாமி ஆனந்த் தீர்த் எழுதியதை அம்பேத்கர் தன் புத்தகத்திலே அப்படியே குறிப்பிட்டிருக்கிறார். அதை சுவாமி ஆனந்த் தீர்த் வாசகத்திலேயே படிக்கிறேன்:

"It is the usual practice to foist cases on the Harijans and to get the police to take immediate action. When it was discovered that the Harijans had sustained serious injuries, the villagers realised that they would get into trouble. It is learnt that Shri Poosari Kakkan, the 80 years old father of Shri P.Kakkan,M.P. (அப்போது 1952-ஆம் ஆண்டு கக்கன் எம்.பி.யாக இருக்கிறார்) who is working as the village Thotti, was therefore asked to give a false complaint that some articles in the Harijan temple, were found missing since the previous evening and a report was sent to the police by the village munsif, that these articles were recovered from the Harijan youths, Shri Poosari Kakkan and his relation, another village Thotti named Etti Kakkan are said to have brought these articles and given to the village munsif".

அதாவது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தோழர்கள் கோவிலிலிருந்து திருடிவிட்டார்கள் என்று சொல்லப்பட்ட அந்தப் பொருட்களை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கக்கன் அவர்களின் தந்தையார் பூசாரி கக்கனும், இன்னொரு உறவினரான எட்டி கக்கனும்-அந்தப் பொருட்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வாலிபர்கள்தான் திருடினார்கள் என்பதற்குச் சாட்சியாக - அந்தப் பொருட்களைக் கொண்டுபோய் இவர்களே கிராமத் தலைவரிடம் கொடுத்தார்கள் என்று அறிவித்திருக்கிறார் என்றால் அதற்குக் காரணம்-அப்படி அறிவிக்காவிட்டால், அந்தப் பொய்வழக்கிற்குத் துணை போகாவிட்டால், கக்கனுடைய தந்தைக்கே ஆபத்து வரும் என்ற அளவிற்கு அச்ச உணர்வு 52-ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலே

இருந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான் இதை நான் இங்கே எடுத்துக் காட்டுகிறேன்.

### மனித உரிமைகள்பற்றிக் கருத்தரங்கு

இப்படிப்பட்ட சூழ்நிலைகள் தமிழகத்திலே மாத்திரமல்ல, இந்தியாவிலே மாத்திரமல்ல; அகில உலகத்திலும் இந்த மனித உரிமைகள் பறிக்கப்படுகின்ற கொடுமைகள் இருந்த காரணத்தினால்தான், இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் மனித உரிமைகள் குறித்த கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றிருக்கின்றது. அந்தக் கருத்தரங்கிலே வலுவான எண்ணங்கள் எல்லாம் வெளியிடப்பட்டு, உலக யுத்தத்தின்போது கடுமையான அடக்குமுறைகளையும், மனித உரிமை மீறல்களையும் அனுபவித்த மக்கள் மனித உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று உறுதி பூண்டார்கள்.

1968-ஆம் ஆண்டு டெக்ரான் மாநகரத்தில் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமை மாநாடு தனது பிரகடனத்தில் "மனித உரிமையையும், அடிப்படை உரிமைகளையும் பிரிக்கமுடியாது. சமூக, பொருளாதார, கலாச்சார உரிமைகளை ஒருவர் அனுபவிக்காமல் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளை அடைய முடியாது" என்று வலியுறுத்தியுள்ளது. அதைத் தொடர்ந்துதான் பல நாடுகளிலே மனித உரிமை ஆணையங்கள் உருவாயின.

> "எங்கே இதயத்தில் தூய்மை நிலவுகிறதோ,
> அங்கே குணத்தின் அழகு பரிமளிக்கும்;
> எங்கே குணத்தின் அழகு பரிமளிக்கிறதோ,
> அங்கே-வீட்டில் அமைதியும் ஆனந்தமும் தவழும்;
> எங்கே அமைதியும் ஆனந்தமும் வீட்டில் தவழுகிறதோ,
> அங்கே-நாட்டில் ஒழுங்கு நிலவிடும்.
> எங்கே நாட்டில் ஒழுங்கு நிலவுகிறதோ,
> அங்கே-பூமியெங்கும் அமைதி நிலவும்".

குறிப்பாக நம்முடைய இந்தியாவில் 1993-ஆம் ஆண்டு அக்டோபர் 12-ஆம் தேதியன்று "தேசிய மனித உரிமை ஆணையம்" நீதிபதி ரெங்கநாத் மிஸ்ரா அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்தின் உறுப்பினர்களிலே ஒருவராக இருந்தவர் நம்முடைய தமிழக ஆளுநராக இன்றைக்கு இருக்கின்ற செல்வி பாத்திமா பீவி அவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த தேசிய மனித உரிமைகள் ஆணையத்திலிருந்து பல மாநில அரசுகளுக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. எப்போது? 93-ஆம் ஆண்டு டிசம்பர் 14-ஆம் தேதி வந்திருக்கின்றது. அனுப்புபவர், ஆணையத்தின் முதன்மைச் செயலாளர், ஆர்.வி.பிள்ளை என்பவர். பெறுகின்றவர்கள், எல்லா மாநில மற்றும் யூனியன் பிரதேச முதன்மைச் செயலாளர்கள்.

### மாநிலங்களுக்கு வந்த கடிதம்

அந்தக் கடித வாக்கியம் என்னவென்றால்-"ஐயா, இந்த மாதம் 6-ஆம் தேதி நடைபெற்ற தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத்தில் காவல்நிலையங்களில் நடைபெறும் மரணங்கள், கற்பழிப்புகள் ஆகிய பிரச்சினைகள் ஆராயப்பட்டன. இதைப்போன்ற சம்பவங்கள் அதிகரித்து வரும் வேளையில் அவைகளை மறைக்கவோ, அல்லது திரித்துக் காட்டவோ காலப்போக்கில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதால் மாவட்ட மாஜிஸ்திரேட்டுகளுக்கும், காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும் அத்தகைய சம்பவங்கள் நடந்த 24 மணிநேரத்திற்கிடையே அல்லது இந்த அதிகாரிகள் இதுபற்றித் தெரிந்துகொண்ட உடனே அதுபற்றி அறிக்கை ஒன்றை ஆணையத்தின் முதன்மைச் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டுமெனப் பணிக்கப்பட வேண்டுமென்று ஆணையம் முடிவு செய்துள்ளது. அத்தகைய அறிக்கைகளைக் காலதாமதமின்றிச் சமர்பிக்கத் தவறினால் இந்தச் சம்பவத்தை மூடி மறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கருத அது வழிவகுக்கும். இந்த அடிப்படையில் காவல்நிலைய மரணங்கள் அல்லது கற்பழிப்புகள் நடைபெற்ற உடனே அதுபற்றிய அறிக்கைகளைக் கீழே ஒப்பமிட்டிருப்பவருக்கு அனுப்பிவைக்கும்படி மாவட்ட மாஜிஸ்திரேட்டுகள், காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது" என்று முதன்மைச் செயலாளர் கடிதம் எழுதியிருக்கிறார்.

இங்கே நம்முடைய நீதிபதி சாமிதுரை அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போலவும், நீதிபதி நயினார்சுந்தரம் அவர்கள் எடுத்துக்கூறியதைப் போலவும், இந்தியாவிலே இந்த மாநில மனித உரிமைகளின் ஆணையம் ஒரு ஆறு அல்லது ஏழு, அதிகம் போனால் எட்டு மாநிலங்களிலே தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே "மே" - May என்ற அந்தச் சொல்லைப் பயன்படுத்தி அதை அமைக்காமலேயே இருந்துவிட்ட ஒரு சூழ்நிலை கடந்த ஆட்சியிலே இருந்தது. உங்களால் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 1996-ஆம் ஆண்டு மே திங்கள் 13-ஆம் தேதி நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறோம்.

மே திங்கள் 23-ஆம் நாள் அன்று, அன்றைய ஆளுநர் டாக்டர் எம்.சென்னாரெட்டி அவர்கள் உரை நிகழ்த்தி இந்த அரசின் கொள்கைகளை எடுத்துரைத்தார். அந்த உரையிலே மனித உரிமைகளைப் பற்றி இந்த அரசின் கொள்கையைக் கூறும்போது:

"நமது மாநிலத்தில், குறிப்பாகப் புறநகர்ப் பகுதிகளில் சமூக விரோத ஆதிக்க சக்திகளால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டு வன்முறைக் குற்றங்கள் பெருகி, மக்களுக்குக் காவல்துறை மீதிருந்த நம்பிக்கை தளர்ந்துள்ள சூழலை இந்த அரசு

மிகுந்த கவலையுடன் கவனித்து 'வேலியே பயிரை மேயும்' வேதனையைத் தடுத்து நிறுத்தவும்-குற்றங்கள் புரிய ''அரசியல்'' என்பது ஒரு பாதுகாப்பான இடம் என்ற அவலநிலையை அறவே போக்கவும்-காவல்துறை என்பது மக்களுக்கு நல்லுறவுத் துறையாகவும், பாரபட்சமற்ற நடுநிலைத் துறையாகவும் மாற்றப்பட நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்படும். மனித உரிமைகள் மீறல் பற்றிய புகார்களை விசாரணை செய்ய 'மாநில மனித உரிமைகள் ஆணையம்' அமைக்கப்படும்'' என்று குறிப்பிட்டிருந்தது.

அதன்படி, தமிழ்நாட்டில் இந்த ஆணையம் 20.12.1996 அன்று அரசால் அறிவிக்கப்பட்டபடி அமைக்கப்பட்டது. மாநில மனித உரிமை ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்து அரசு 17.4.97 அன்று ஆணை பிறப்பித்தது. தலைவராக, ஓய்வுபெற்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி நயினார்சுந்தரம் அவர்களும், உறுப்பினர்களாகத் திரு.சாமிதுரை, திரு.ரத்னசாமி, திருமதி சுசீலா அம்மையார், திரு.அப்துல் கனி ஆகியோரும் அதிலே அங்கம் வகிக்கிறார்கள்.

இந்த ஆணையம் வேலூர், சேலம், மதுரை, திண்டுக்கல், ஈரோடு ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு முதற்கட்டமாகச் சென்று பார்வையிட்டு அந்தப் பகுதிகளில் உடல் ஊனமுற்றோர், நலிந்தபிரிவு மக்கள், மற்றும் அடிமட்டத்திலே உள்ளவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை ஒன்றை அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அந்த அறிக்கையின் மீது அரசு உரிய மேல்நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

இதைத்தவிர, பொதுமக்களிடமிருந்தும் புகார் மனுக்கள் மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கு வந்து கொண்டுள்ளன. அவற்றின் மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோரிடமிருந்தும் அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன. இதுவரை 726 மனுக்கள் மாநில உரிமை ஆணையத்தால் பெறப்பட்டுள்ளன. அவைகள், தொடர்புடைய துறைகளுக்குத் தக்க நடவடிக்கைகளுக்காக அனுப்பப் பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### மக்களிடம் மனமாற்றம் தேவை

சாதி-சமய சச்சரவுகள் குறித்தும் அதனால் மனித உரிமைகளுக்கு ஏற்படுகின்ற பங்கம் குறித்தும் இங்கே எடுத்துரைத்திருக்கின்றார்கள். அந்த வகையில் ஒரு அணுகுமுறை-ஆர்ப்பாட்டமான அணுகுமுறையோ, ஆவேசமான அணுகுமுறையோ இல்லாமல் அமைதியான அணுகுமுறை இந்தக் கலவர எண்ணங்கள் அகலவும், ஒருவருக்கொருவர் உறவு மனப்பான்மை உருவாகவும், நட்பு - அதே நேரத்தில் மனித நேயம், சாதி-சமய வேறுபாடற்ற தன்மை, மதச்சார்பற்ற நிலைமை இவைகள் எல்லாம் ஏற்படவும் மிகமிக முக்கியமான தேவை அரசு இயற்றுகின்ற சட்டங்கள் என்பது ஒரு புறமிருந்தாலும், அந்தச் சட்டங்களைப் பயன்படுத்துவது என்பது ஒரு புறமிருந்தாலும், அதைக் கூர்மையாகப் பயன்படுத்துவது என்பது ஒரு புறமிருந்தாலும், 'மனமாற்றம்' மிகமிக முக்கியம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அந்த மனமாற்றத்தை ஏற்படுத்துவதற்காகத்தான் நான் நீதியரசர் வெங்கடாசலய்யா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவரே ஏடுகளிலே படித்திருக்கக்கூடும்; அதன் வாயிலாக அறிந்திருக்கக்கூடும்.

மாணவர்களின் இளம் உள்ளங்களில் மதச் சார்பற்ற தன்மையை, மனித நேயத்தை, சாதி-சமய வேறு பாடுகளைக் களையவேண்டுமென்ற உணர்வை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு பள்ளியிலும், கல்லூரியிலும் மாணவர்கள் சாதி சமயமற்ற நிலையை உருவாக்க மனிதநேய உறுதிமொழியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு அறிவுரை கூறப்பட்டு, தமிழ்நாட்டுப் பள்ளிகளிலே இன்றைக்கு அந்தப் பணி ஒழுங்காக நடைபெற்று வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மனிதநேயத்தை வளர்ப்பதற்கு மனிதச் சங்கிலி

அதுமாத்திரமல்ல; ஆங்காங்கு - குறிப்பாக நான் செல்கின்ற ஊர்களில்-நான் கலந்துகொள்கின்ற நிகழ்ச்சிகளில்-அந்த நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்ளச் செல்லும்போதோ அல்லது நிகழ்ச்சிகளை முடித்துவிட்டுத் திரும்பும்போதோ-ஒரு 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் என்று **''மனிதச்சங்கிலி''**-அதிலே பெரியவர்கள், ஆடவர், பெண்டிர், மிக முக்கியமாக மாணவர்கள், மாணவிகள் என்று கைகோத்துக்கொண்டு நின்று தங்களுடைய மனிதநேயத்தை, மதச்சார்பற்ற தன்மையைத் தமிழ்நாட்டிலே - இன்றைக்கு விளக்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த இளம் வயதிலேயே, அவர்களுடைய இளம் உள்ளத்திலே இந்தக் கொள்கை, இந்த உணர்வு பசுமரத்தாணி போல் பதிவதற்கு மனிதச் சங்கிலி பயன்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதைப் போலவே சமத்துவபுரம்-இங்கே குறிப்பிட்டார்கள் நீதிபதி அவர்கள்-தமிழ்நாட்டில் முதற்கட்டமாக 50 இடங்களில் உருவாகின்றது. ஒவ்வொரு இடத்திலும் நூறு வீடுகள். அதில் 40 வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்காக. மீதமுள்ள 60 வீடுகள்-ஆதிதிராவிடர் அல்லாத மற்ற இனமக்களுக்காக! அதிலே அய்யர்களுக்கும் வீடு உண்டு என்பதைக் குறிப்பாகச் சொல்கிறேன். இப்போது நான் ஆரம்பித்துவைத்துள்ள இரண்டு மூன்று சமத்துவ புரங்களில் நாற்பது வீடுகள் ஆதிதிராவிடர் களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்று அல்லது நான்கு வீடுகளில் பிராமண சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வசிக்க முனைந்து அவர்களும் முன்வந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இப்பொழுது இருக்கின்ற பிரச்சினையே - சாதிகளை உருவாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்படும் பிராமணர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே சண்டையில்லை. பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் தாழ்த்தப் பட்டவர்களுக்கும் இடையேதான் இப்போது தமிழ்நாட்டில் சண்டை. இதுதான் வேடிக்கை!

அவர்கள் மோதிக்கொள்கிறார்கள். நான் கூற விரும்புகிறேன். நான் எழுதிய ''ஒரே ரத்தம்'' என்ற புதினம்-15 ஆண்டுகளுக்கு முன் நான் எழுதியது. அது

**சாதிகளை ஒழித்து மனித உரிமைகளை நிலைநாட்டக் கலப்புத்திருமணங்கள் மிகமிக முக்கியம். ஏற்கெனவே தமிழக அரசு-ஏழைப்பெண்கள் எட்டாவது வரை படித்திருந்தால் அவர்களுக்குத் திருமணத்திற்காகப் பத்தாயிரம் ரூபாய் நிதி வழங்கும் என்று கூறி - இந்த இரண்டாண்டுகளில் மாத்திரம் 46 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. 46 ஆயிரம் திருமணங்களுக்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.**

திரைப்படமாகக் கூட வெளிவந்திருக்கின்றது. அந்தப் படத்தில் உயர்சாதிக்கார வாலிபன் ஒருவன் முற்போக்குக் கருத்துக்களைச் சொல்வான். "சாதி கூடாது, மதம் கூடாது, எல்லாரும் ஓர் குலம்-ஒன்றே குலம், ஒருவனே தேவன்-என்ற கருத்தைச் சொல்வான். ஆனால் பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் மோதிக்கொள்வார்கள். அவர்களுக்கிடைய நுழைந்து அந்த உயர் சாதிக்கார வாலிபன் "மோதிக்கொள்கிறீர்களே, நியாயமா?" என்று கேட்டுவிட்டு கூறுவான் - "ஐயா, புராண காலத்திலே புலியும் மானும் ஒரே துறையிலே தண்ணீர் குடித்ததாகக் கதை எழுதுவார்கள். இந்தக் காலத்திலே புலியும் மானும்கூட ஒரே துறையிலே தண்ணீர் குடிக்க வேண்டாம். மானும் மானுமாவது ஒரே துறையிலே தண்ணீர் குடிக்கக்கூடாதா?" என்று கேட்பான். இதை 15 ஆண்டுகளுக்கு முன்பே நான் எழுதியிருக்கிறேன். அதனால்தான் சமத்துவபுரங்களை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்குத் தோன்றியது இயல்பான ஒன்று.

ஏனென்றால் என்னுடைய வீடே, கிட்டத்தட்ட ஒரு சமத்துவபுரம்தான். என்னுடைய வீட்டிலே நாடார் சாதி உண்டு, நாயுடு சாதி உண்டு, என்னுடைய மருமகள் ஆதிதிராவிடப் பெண்; அதைப்போலவே நான் ஒரு ஆதிதிராவிட வாலிபனுக்கு என் பேத்தியையும் திருமணம் செய்துகொடுத்திருக்கிறேன். எனவேதான் என்னுடைய வீடே ஏறத்தாழ ஒரு சமத்துவபுரமாக இருக்கின்ற காரணத்தால், சமத்துவபுரங்களைத் தமிழ்நாட்டிலே ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டிருக்கின்றது.

அது மாத்திரமல்ல; சாதிகளை ஒழித்து மனித உரிமைகளை நிலைநாட்டக் கலப்புத்திருமணங்கள் மிகமிக முக்கியம். ஏற்கெனவே தமிழக அரசு-ஏழைப்பெண்கள் எட்டாவது வரை படித்திருந்தால் அவர்களுக்குத் திருமணத்திற்காகப் பத்தாயிரம் ரூபாய் நிதி வழங்கும் என்று கூறி - இந்த இரண்டாண்டுகளில் மாத்திரம் 46 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. 46 ஆயிரம் திருமணங்களுக்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

அஃதன்னியில், மதுரையிலே நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் நான் அறிவித்திருக்கிறேன். அதன்படி ஒரு திருமணம், கலப்புத்திருமணமாக இருந்து - அந்தக் கலப்புத் திருமணத்தில் ஆணோ அல்லது பெண்ணோ ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தால், அவர்களுக்குச் சிறப்பு நிதியாக 20 ஆயிரம் ரூபாய் தரப்படுமென்று அறிவித்து, அதையும் இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்பதை எடுத்துக்காட்டி இப்படி மன வளம்பெற வேண்டும். சட்டம், ஒழுங்கு, நியாயம், தண்டனை-இவைகள் எல்லாம் ஒருபுறம் இருந்தாலும்கூட-இவைகளையெல்லாம் மீறிய வகையிலே நாம் ஒற்றுமைப்பட-மனித உரிமையை நிலைநாட்ட - மனமாற்றம் தேவை.

அதனால்தான் கூறுகிறேன்:

Where there is purity of heart,
there is beauty of character;
Where there is beauty of character,
there is harmony in the home;
Where there is harmony in the home,
there is order in the nation;
where there is order in the nation,
there is peace on the earth.

This is possible only if human rights culture is developed at the family and the society level.

அதாவது :

**"எங்கே இதயத்தில் தூய்மை நிலவுகிறதோ,**
**அங்கே குணத்தின் அழகு பரிமளிக்கும்;**
**எங்கே குணத்தின் அழகு பரிமளிக்கிறதோ,**
**அங்கே-வீட்டில் அமைதியும் ஆனந்தமும் தவழும்;**
**எங்கே அமைதியும் ஆனந்தமும் வீட்டில் தவழுகிறதோ,**
**அங்கே-நாட்டில் ஒழுங்கு நிலவிடும்.**
**எங்கே நாட்டில் ஒழுங்கு நிலவுகிறதோ,**
**அங்கே-பூமியெங்கும் அமைதி நிலவும்".**

குடும்ப அளவிலும், சமூக அளவிலும் மனித உரிமைகளின் கலாச்சாரம் வளர்க்கப்படும் போதுதான், பூமியிலே அமைதி நிலவும் என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

சென்னை கலைவாணர் அரங்கில்,
**5.11.1997** அன்று,
**'மனித உரிமைக்கருத்தரங்கை'த்**
தொடங்கிவைத்து ஆற்றிய உரை.

# மாண்புமிகு மத்திய இணையமைச்சர்

# திரு. என்.வி.என்.சோமு மறைவு

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு **என்.வி.என்.சோமு** அவர்கள் **14.11.1997** அன்று காலை **9.30** மணியளவில் மரணமடைந்தார். பாதுகாப்புத்துறை இணையமைச்சரான அவர், அருணாசலப் பிரதேசத்தில், இந்தியா-சீனா எல்லைப் பகுதியைப் பார்வையிட்டுவரச் செல்கையில், டாவ்ஹாங்கில் இருந்து 'சீட்டா ஹெலிகாப்டரில்' புறப்பட்ட போது, ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள லங்கர் என்னுமிடத்தில் அந்த ஹெலிகாப்டர் சந்தித்த கோர விபத்தே, நம் குலை நடுங்கச் செய்திடும் இந்தச் சாவுக்குக் காரணம். கடல் மட்டத்திலிருந்து **4000** மீட்டர் உயரே இந்தக் கொடிய சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

நொறுங்கி விட்ட ஹெலிகாப்டரிலிருந்து, மீட்கப்பட்ட அவரது உடல் அன்று நள்ளிரவுக்குமேல் சென்னைக்கு விமானம் மூலம் கொண்டுவரப்பட்டது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும் ஏராளமான பொதுமக்களும், அரசியல் கட்சியினரும், எண்ணற்ற தொழிற்சங்கத் தோழர்களும், தாய்மார்களும் தமது உடன் பிறப்பை இழந்தது போல உள்ளம் நைந்துபோய்க்கண்ணீர் வடித்தனர்.

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் சார்பில் மேதகு தமிழக ஆளுநர் செல்வி எம்.பாத்திமா பீவி அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

மாண்புமிகு முதல்வரும், மாண்புமிகு மாநில அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு மத்தியத் தொழிலமைச்சர் திரு முரசொலிமாறன், மாண்புமிகு மத்தியப் பெட்ரோலியத்துறை இணை அமைச்சர் திரு டி.ஆர்.பாலு ஆகியவர்களும், த.மா.கா. தலைவர் திரு ஜி.கே.மூப்பனார் போன்ற முக்கிய அரசியல் பிரமுகர்களும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு மு.க.ஸ்டாலின் ஆகியோரும் அவர் உடலுக்கு மலர் வளையம் வைத்தார்கள் . மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இல்லம் சென்று துக்கம் விசாரித்தார்கள்.



மறுநாள் 15.11.97 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் **திரு. குஜ்ரால்,** மாண்புமிகு மத்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் **திரு. முலாயாம் சிங் யாதவ்,** முன்னாள் பிரதமர் **வாஜ்பாய்** ஆகியோரும் சென்னைக்கு வந்து திரு என்.வி.என்.சோமு அவர்களின் உடல் மீது மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மாபெரும் மக்கள் வெள்ளத்தில் அமைச்சர் திரு. என்.வி.என்.சோமு அவர்களது உடல், பீரங்கி வண்டியில் வைக்கப்பட்டு, சென்னையில் உள்ள ஓட்டேரி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு 21 குண்டுகள் முழங்க, இராணுவ மரியாதையுடன் சிதைக்கு அவரது மகன் டாக்டர் திருமாறன் எரியூட்டினார்.

அவரது குடும்பத்தார்க்கு **'தமிழரசு'** ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# வாசகர் இதயம்

அழகு தமிழில் அற்புதக்கவி அமைத்துத் 'தூய்மைச் சிறகு'களை அளித்துள்ளார் கவியரசு வைரமுத்து; அதனை வெளியிட்டு எம்மை மகிழ்வித்த 'தமிழரசு'க்கு நல்வாழ்த்து.

*- இடிமுரசார், சென்னை-5.*

*(இதே போல் பல கடிதங்கள் வந்துள்ளன.)*

சேலம்-பெரியார் பல்கலைக்கழகம் தொடக்கவிழாவை நேரிலேயே பார்ப்பது போலிருந்தது அதுகுறித்த கட்டுரை. பெரியாரின் சமுதாயச் சிந்தனைகளை வளர்க்கும் அவ்வாறான கலைஞர் தொடர்பான கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

*-அ.பா.சேகர், நா.கா ர்.*

மிகவும் பயனுள்ள செய்திகளை வெளியிடுகிறீர்கள், சின்னசின்னச் செய்தித்துணுக்குகள், மருத்துவக் குறிப்புகள் போன்றவற்றையும் அச்சிட்டு எங்களைப் பயன்பெறச் செய்யவும்.

*-காஜா கஸ்தூரின், கூத்தாநல்லூர்.*

ஜாலியன் வாலாபாக் கட்டுரையை வெளியிட்டு, இந்த 50வது சுதந்திர ஆண்டில் அக்கொடுமையை நினைவூட்டிய 'தமிழரசே' உனக்கொரு ஜெய்ஹிந்த்.

*- கே.கருப்பையன், பட்டீஸ்வரம்.*

'சாதனை பல செய்வதில் தளபதியாக விளங்குகிறார் கலைஞர்' என்று மேதகு ஆளுநர் பேசியதை வெளியிட்டிருந்தீர்கள். என்போன்றோர்க்கு அது ஒரு நல்ல டானிக்காக இருந்தது. வளரட்டும் இந்தப் பணி. கலைஞரின் அரிய முயற்சியால் உருவாக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம் பற்றியும், அரிய ஆட்சிப்பணி பற்றியும், அவரவர் ஊர்ப்பிரச்சினை-தீர்வு குறித்தும் இதழ்தோறும் தொகுத்தளிக்கும் தங்கள் பணி வெல்லட்டும்.

*- எஸ்.கிருஷ்ணமூர்த்தி, சென்னை-44.*

காந்தியடிகள் 14 தடவை தமிழகத்திற்கு வந்து சென்றிருக்கிறார் என்கிற முழுவிவரத்தைத் தெளிவுபடுத்தியிருந்தீர்கள். நன்றி. உள்ளபடியே படித்துப் பாதுகாக்க வேண்டிய அரிய அற்புத ஏடான தமிழரசுக்கு நல்வாழ்த்து.

*- எஸ்.கவிதாசேகர், தென்கடப்பந்தாங்கல்.*

## ஊரக வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்படுவதில் இந்தியாவின் முன்னணி மாநிலம் தமிழகமே !

இந்த ஆட்சி 1996ஆம் ஆண்டில் அமைந்தபின் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், கடந்த ஆட்சிக் காலத்தில் முடிக்கப்படாமல் தேங்கிக்கிடந்த ஊரக வளர்ச்சிப் பணிகள் மொத்தம் 1,14,143 எனக் கண்டறியப்பட்டது. அந்தப் பணிகளில் தற்போது 99,956 பணிகள் இந்த அரசினால் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவைகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 73,004 தொகுப்பு வீடுகளும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த அரசினால் 1996-97, 1997-98 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் நிறைவேற்றப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட 3,40,548 பணிகளிலும் 1,22,526 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆக கடந்த 16 மாதங்களில் மட்டும் இந்த அரசினால் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டிமுடிக்கப்பட்ட 1,12,342 தொகுப்பு வீடுகள் உட்பட 2,22,482 ஊரக வளர்ச்சிப் பணிகள் இந்த அரசினால் நிறைவேற்றப்பட்டு அவை மக்களுக்குப் பயனளித்து வருகின்றன.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா குடியிருப்புத் திட்டம் முதலிய மத்திய அரசின் நிதியுதவி பெறும் ஏழு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு ஆரம்ப இருப்பு மற்றும் அனுமதிக்கப்பட்ட முதல் தவணைத் தொகையில், வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு 50 விழுக்காடும், ஏனைய திட்டங்களுக்கு 60 விழுக்காடும் செலவிடப்பட்டு, அதற்குரிய பணிகள் 31.12.97க்குள் நிறைவேற்றப்பட்ட பின்னரே இரண்டாம் தவணைக்குரிய கோரிக்கையை மத்திய அரசுக்கு அனுப்புதல் வேண்டும். ஆண்டின் முதல் பகுதியில் ஊரக வளர்ச்சித் துறையின் 7 முக்கிய திட்டங்களுக்காக ஆரம்ப இருப்பு நிதி ரூ.134.68 கோடி மற்றும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் முதல் தவணை ரூ.338.23 கோடி ஆகியவற்றைச் சேர்த்து மொத்தம் ரூ.472.91 கோடி நிதி இருந்தது.

இந்த நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஜூன் 14 மற்றும் 15, செப்டம்பர் 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் நடத்திய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடுகளில் அளித்த வழிகாட்டுதல்படி வேலைகளை துரிதமாக முடித்து, இப்பணிகளில் ஏறத்தாழ 65 விழுக்காடு தொகையாக ரூபாய் 312.52 கோடி செலவிடப்பட்டு இரண்டரை மாதங்களுக்கு முன்பாகவே அதற்குரிய பணிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு சாதனை படைத்துள்ள நிலையில், இரண்டாவது தவணைத் தொகை 244.41 கோடி ரூபாயை உடனடியாக விடுவிக்கக்கோரி மத்திய அரசுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டது. ஊரக வளர்ச்சித் துறைச் செயலரும், இயக்குநரும் இது குறித்து மத்திய அரசுடன் விவாதித்தனர். மத்திய அரசு தற்பொழுது 94.22 கோடி ரூபாயைத் தமிழகத்திற்கு விடுவித்துள்ளது. இந்த ஆண்டில் இது இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் நிகழ்த்தாத சாதனை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தில் இந்த ஊரக வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்படுவதில் மதுரை, வேலூர், கோயம்புத்தூர், ஈரோடு, கன்னியாகுமரி, தேனி, சேலம், திருநெல்வேலி, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் பாராட்டத்தக்க வகையில் செயல்பட்டுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# அள்ளித்தந்த வெள்ளித் தாரகை

- கவியரசர் இளந்தேவன்



☺ கலையைச் சுவைத்து,
கலையைக் குடித்து,

கலையில் வளர்ந்து,
கலையை வளர்த்த

கலைஞர் ஒருவர்
பெயர்-கலை வாணர்!

☺ கலை எனப் படுவது
வாழ்க்கையின் ராகம்!

சில நே ரங்களில்
வாழ்க்கையின் கூக்குரல்!

☺ கலைவா ணர்க்குக்
கலைதான் வாழ்க்கை

வாழ்க்கையின் பகுதி
கலையென எண்ணி
வாழ்ந்தவர் நடுவே
வாழ்க்கையே கலையென
வாழ்ந்தவர் அவர்தான்!

அவரது வாழ்வே
அருங்கலை வாழ்வு!

☺ நகைச்சுவை எனச்சிலர்
ஏதோ சொல்கையில்,
'நகைச்சு-வை! வேறுவழி
நமக்கில்லை' என்கிறோம்.

☺ நாடோடியாய்த் திரிந்த
நகைச்சுவை பெற்ற
நல்ல முகவரி
நம் கலை வாணர்!

☺ நாலும் தெரிந்த
தமிழினத் துக்கு
நகைச்சுவை உணர்வு
கொஞ்சம் குறைவுதான்.

சிரித்தால், பற்கள்
உதிருமோ என்று
உதட்டைப் பூட்டிய
உத்தமர் அநேகர்!

அவர்களை யெல்லாம்
சிரிக்க வைத்துச்
சிந்திக்க வைத்த
செம்மல் என்.எஸ்.கே.!

☺ தெருட்டத் தேறாக்
குருட்டுப் புலமையும்
மிரட்டி வந்த
புரட்டு வாதமும்
தமிழக மக்களின்
தலையிலே குதிக்கையில்
பகுத்தறிவுப் பகலவன்
தரையிலே உதித்தான்!

☺ அந்த-
ஈரோட்டு நெருப்பை
இதயத்தில் ஏந்தி
வெப்பத்தை விடுத்து
வெளிச்சத்தைத் தந்த
வெண்ணிலா இருவர்.

☺ அவர்களில் ஒருவர்
அறிஞர் அண்ணா
அடுத்த நிலா நம்
அருங்கலை வாணர்!

☺ ஒருநிலா நெஞ்சில்
மறுநிலா வாழ்ந்தது!



☺ சாப்பிட மட்டுமே
பயன்படும் வாய்க்கு

இன்னுமோர் பயனும்
இருப்பதைக் காட்டிய

நாஞ்சில் நாட்டு
நற்கலை வாணா!



☺ என்னே ஒற்றுமை!
கலைவா ணரது
கடைசி நிகழ்ச்சி
சேலத்தில் அண்ணாவின்
படத் திறப்புவிழா!

அண்ணா கலந்த
கடைசி நிகழ்ச்சி
சென்னையில் கலைவாணர்
சிலை திறப்புவிழா!

☺ அண்ணாவின் அரிய
எழுத்தும் பேச்சும்
மூடநம்பிக் கையின்
மூச்சை நிறுத்தின

கலைவாணரைக் கண்ட
மூடநம் பிக்கையோ
சிரித்துச் சிரித்தே
செத்துப் போனது!

பூக்களுக் கெல்லாம்
புன்னகை இயற்கை!
கலைவா ணர்க்கோ
நகைச்சுவை இயற்கை!

☺ கலைவா ணா!நீ
வாழ்க்கையிலே மட்டுமல்ல
வார்த்தையிலே கூட
மதுரத்தைக் கொண்டவன்தான்!

கிள்ளிக் கொடுத்த
புள்ளிகள் நடுவே
அள்ளிக் கொடுத்த
அதிசய மனிதா!

பகலிலும் தோன்றிய
பாசத்தா ரகையே!

வெள்ளித் திரையிலே
மின்னிய நீ எங்கள்
விழித்திரை தன்னிலே
மின்னிக்கொண் டிருக்கிறாய்!

(நவம்பர்-29 - கலைவாணர் பிறந்தநாள்)

இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்

# செந்தமிழ்ச் செல்வி

டாக்டர் (திருமதி) வெ.கனககசுந்தரம்

உலகம் சுருங்கிக்கொண்டே வருகின்றது. ஆம்! அறிவியல் வளரவளர நாளுக்குநாள் உலகம் சுருங்கிக்கொண்டே வருகின்றது. உலகம் சுருங்குவதற்கு இதழியல் இன்றியமையாத பணி செய்கின்றது. இதழியல் சமுதாயத் தகவல் தொடர்புச் சாதனங்களில் ஒன்றாக அமைகின்றது. ஆக்கப்பணிகளை விளைவிக்க உதவும் சக்திவாய்ந்த கருவியே இதழியல் எனலாம்.

மக்கள் தொடர்புக் கருவிகளில் இதழ்களின் பணி குறிப்பிடத்தக்கதாகும். வளர்முக நாடுகளில் மக்களுக்கு அறிவுவளர்ச்சி ஏற்படுத்துவதில் முக்கிய இடத்தை இதழ்கள் பெறுகின்றன. வானொலி, தொலைக்காட்சியின் பரவல், விரிவுபடுத்தப்படாத காலகட்டத்தில், மக்களின் கருத்துப்பரப்பு ஊடகத்தில் இதழ்கள் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தன.

பழந்தமிழ் நாட்டிலே பல்லறிஞர் குழுமிப் பயனுரை வழங்கல் பெருவழக்கம். இங்ஙனம் வல்லுநர் கூடி நல்லுரை நிகழ்த்துதற்குரிய பேரற நிலையங்கள் ஆங்காங்கு அமைக்கப்பெற்றிருந்தன. சிலப்பதிகாரம் முதலிய பண்டைத்தமிழ் நூல்களாலே இவற்றை அறிகின்றோம். இத்தகைய பேருரைக் கூட்டங்களுக்குப் 'பெரியநாடு' என்று பெயர் வழங்கியிருத்தலை 'இந்திர னோலக்கம் போல் இருந்தது பெரியநாடு' என்ற கம்பர் கவின்மொழியால் அறியலாம்.

இக்காலத்தே மேனாட்டினர் வாயிலாக நாம் பெற்ற நலங்களிலே பெருநலம் பயக்கும் அச்சுப்பொறியும் ஒன்று. இவ்வச்சுப்பொறி நமக்குக் கிடைத்த பின்னர், மிக அரிதின் முயன்று ஏட்டில் எழுதிப் படித்துவந்த கல்வியை மிக எளிதிற் பெறும் பயன்பெற்றோம். எண்ணிறந்த நூல்கள் இறந்தொழியாமை பேணினோம். இதுபோன்றே அவர்கள் கண்ட வெளியீடு (Journal) முறையினையும் காலவளவில் மேற்கொண்டோம்.

இதழியல் சிறு ஆல விதையைப் போல் தோன்றி இன்று பல விழுதுகளைக் கொண்ட பெரும் ஆல மரமாக வளர்ந்துள்ளது. அறிவியல் நுட்பங்களையும் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக மக்களோடு தொடர்பு கொள்கின்ற பல்வேறு வழிமுறைகளையும் சாதனங்களையும் உள்ளடக்கிய பரந்து விரிந்த துறையாக இதழியல் இன்று திகழ்கின்றது.

**வரலாறு, தோற்றம், சூழல்:**

இதழியல் வரலாறும் இந்திய விடுதலை வரலாறும் பின்னிப்பிணைந்த ஒன்றாகும். இந்திய விடுதலைக்கு உறுதுணைபுரிந்த ஒப்பற்ற கருவிகளுள் ஒன்று இதழியல். இந்திய சுதந்திர உணர்வால் இதழ்களும் இதழ்களின் வளர்ச்சியால் சுதந்திர உணர்வும் வளர்ந்த நிலையினை இந்தியாவில் காணமுடிகின்றது. இதழ்களை 'ஜனநாயகம் பரப்பும் தூதுவன்' என்பர்.

தென்னிந்தியாவில் புதிய போக்குகள் உருவாகத் தொடங்கிய காலம் அது. தம் இனமக்கள் கல்வி, வேலை வாய்ப்பு, பண்பாடு போன்றவற்றில் பின்னடைந்ததை மாற்றும் விதமாக இயக்கம் கண்ட நேரம் அது; இன உணர்வின் எழுச்சி தோற்றம் கொண்ட வேளை அது; இரட்டை ஆட்சி, மாகாண சுயாட்சி முறை புகுத்திய காலகட்டம். 1920ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசால் பிறப்பிக்கப்பட்ட புதிய அரசியல் சட்டமானது இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. இந்திய சுதேச மன்னர்களை இந்திய அரசுடன் தொடர்பு கொள்ளச் செய்ததும் மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையைப் புகுத்தியதும் சிறப்புக் கூறாகும்.

'மாகாண சுயாட்சி' என்பதுதான் மாண்ட்போர்டு சீர்திருத்தத்தின் முக்கியச் சீர்திருத்தமாகும். அதன் அடிப்படையில் ஒருகூறாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட மந்திரிகளால் நிர்வாகம் நடத்தப்படுமெனவும், பிறிதொரு கூறாக நிர்வாகச் சபையில் கவர்னர் பொறுப்பில் நடத்தப்படும் எனவும் இருகூறாகப் பிரிக்கப்பட்டு, இதுவே 'இரட்டை ஆட்சி' என்று வழங்கப்பட்டது.

அவ்வகையில் மாகாண ஆட்சியானது ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Department) என்றும், மாற்றப்பட்ட துறைகள் (Transfered Department) என்றும் பிரிக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறையில்தான் "பத்திரிகை' இடம்பெற்றது.

இப் புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டப்படி சென்னை மாகாணத்தில் 1920, நவம்பர் 30இல் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

**இன்டர்நெட்டில் தமிழ்நாடு சுற்றுலா**

உலகில் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப் பகுதிகள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலா போன்ற அனைத்து விவரங்களையும் 'இன்டர்நெட்' மூலம் அறிந்து கொள்ளத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. அதற்குரிய முகவரி (விலாசம்) பின்வருமாறு:

INTERNET WEB SITE ADDRESS
http: // www.tamilnadutourism.com

இத்தேர்தலில் காங்கிரசு இரட்டை ஆட்சி முறையை எதிர்த்துப் பங்கேற்பதைத் தவிர்த்தது. இனஉணர்வின் எழுச்சி காரணமாக ஆங்கிலேயர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டால் ஒரு குறிப்பிட்ட அரசு ஏற்பட்டுவிடும் என்ற அச்சமிகுந்த எண்ணம் மக்களிடையே ஆழமாகப் பதிந்திருந்தது. இந்த எண்ணத்தினாலும், இன உணர்வின் எழுச்சி காரணமாகவும் 'நீதிக்கட்சி' மக்களிடம் பெருஞ்செல்வாக்குப் பெற்று வளரமுடிந்தது. முதல் தேர்தலில் நீதிக்கட்சி, ஹோம்ரூல் இயக்கம், முஸ்லீம் லீக், சென்னை மாகாணச்சங்கம் ஆகியவை தேர்தலில் போட்டியிட்டன. 98 இடங்களில் 63 இடங்களை நீதிக்கட்சி பெற்றது.

1923இல் நடந்த இரண்டாவது பொதுத்தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்றது. மக்கள் இனஉணர்ச்சி கொண்டு அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றனர். நீதிக்கட்சி சமய மறுமலர்ச்சிக்கும் சமய சீர்திருத்தத்திற்கும் வழிகாண முயன்றது. இத்தகைய சூழலில்தான் மொழியையும் சமயத்தையும் இருகண்களாகக் கொண்டு 'செந்தமிழ்ச் செல்வி' திங்கள் இதழ் 1923ஆம் ஆண்டு தைத் திங்களில் தோற்றம் பெற்றது.

## இதழ் அறிமுகம்:

'செல்வி' பெண்பாற்பெயர்!

'செந்தமிழ்' பெண்பாற்பெயர்!

'செந்தமிழ்ச் செல்வி'யும் பெண்பாற்பெயர்!

அன்னை மொழிக்காவலுக்கும் வளர்ப்புக்கும் அமைந்த பெயரும் அன்னையின் பெயரே!

1923ஆம் ஆண்டு (துந்துபி ஆண்டு, தை) ஜனவரி-பிப்பிரவரி மாதத்திலிருந்து திங்கள் தோறும் வெளிவந்த செந்தமிழ்ச்செல்வி-தெள்ளிய ஆலின் சிறுபழத்தொரு விதையாகத் தோற்றம் கொண்ட செந்தமிழ்ச்செல்வி 1997ஆம் ஆண்டு செப்டம்பர்த் (ஆவணி)திங்களில் சிலம்பு 'க' பரல் 'க' என்னும் தோற்ற நிலையிலிருந்து . சிலம்பு 72, பரல் 1 என்னும் வளர்ச்சி நிலையை எட்டியுள்ளாள்.

தமிழ்மொழியில் வெளிவரும் தலைசிறந்த இலக்கிய இதழ்களில் ஒன்றாகச் 'செந்தமிழ்செல்வி' விளங்குகின்றது. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும் திங்கள்தோறும் வெளிவருகின்றது (The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly Ltd., Tinnervelly & Madras).

Published by V.Subbiah Pillai for the S.I.S.S.W.P.Society, Tinnevelly, Ltd., & Printed by Sivakami Vilasam Press, Madras.

சிலம்பு 72 பரல்-1 செப்டம்பர் 1997 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி-தென்னிந்திய தமிழ்ச்சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-108, அப்பர் அச்சகத்தில் திரு.இரா.முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : இரா.முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்.,

> தமிழகத்தில் உள்ள கல்லூரிகளில் மொத்தம் 205 குறியீட்டாளர்கள் (மார்க்கர்ஸ்) பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் தங்களை அரசு அலுவலர்களாக ஆக்கி, முறையான ஊதிய விகிதங்களை வழங்குமாறு நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். அவர்களின் கோரிக்கையிலே உள்ள நியாயத்தைக் கருத்திலே கொண்டு, அவர்கள் அனைவரையும் அரசுப் பணியாளர்களாக ஆக்கி, அதற்குண்டான பணச் சலுகையையும், பணிச் சலுகைகளையும் வழங்குவதற்கு முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

தாமரைச்செல்வர் வ.சுப்பையா பிள்ளை பதிப்பாசிரியராக இருந்து தாமும் மணிவிழாவும், முத்துவிழாவும் வயிர விழாவும் கண்டு, தம் வளர்ப்புச் செல்விக்கும் மணிவிழாக்காண வளர்த்தவர். தாமரைச் செல்வர் வ.சுப்பையா பிள்ளை இதன் நிறுவனர் ஆவர். தற்பொழுது இதன் ஆசிரியராக இரா.முத்துக்குமாரசாமி விளங்குகின்றார்.

**இதழ் தோன்றக் காரணம் :** 1. பிறமொழிகள் முளைப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தோன்றி முடியுடைவேந்தர் பலரால் வளர்க்கப்பட்டுச் சொல்வளத்தானும், பொருட்பெருக்கானும், ஓசையொழுக்கானும் ஒப்புயர்வின்றி ஒளிர்ந்த தமிழரசி அன்றிருந்த நிலையை எண்ணிப் பார்த்தமை காரணமாகத் தோற்றம் பெற்றது.

2. நம் அரும்பெறல் அன்னை, திருவள்ளுவர், நக்கீரர், நால்வர், ஆழ்வார், சேக்கிழார், கம்பர், மெய்கண்டார், சிவஞான முனிவர் முதலிய அறிவறிந்த மக்களைப் பெற்றும், இங்ஙனம் தனது வீறு குன்றியிருத்தலைக் கண்ணாரக் கண்டும் வாய்வாளாமை மேற்கொண்டிருத்தல் நன்றோ ? இவையிற்றைப் பல்லாற்றானும் எண்ணி எண்ணி ஏக்கமுற்றிருந்த சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் குறைகளை ஒருவாறு ஒழிக்கத் துணிந்து, 'செந்தமிழ்ச்செல்வி' என்னும் பெயரான் ஒரு மாதப் பத்திரிகையைத் தமது கழகத்தினின்று வெளியிட முற்போந்தனர்.

3. செந்தமிழ்ப் பாவையைத் தொழத் தகு தெய்வமாகச் செய்த சைவப் பெருமக்கள், தமிழ்ச் செல்வியைத் தமது கண்ணேபோல் ஓம்பிப் பலபல அரிய நூல்களையும் உரைகளையும் இயற்றிப் பண்டைக் காலத்தே வளர்த்தது போல இன்றும் சீராட்டிப் பாதுகாத்தலைத் தமது தலைமைக் கடனாகக் கொண்டனர். எனவே, 'செந்தமிழ்ச் செல்வி'க்குத் **தமிழ்** ஒருகண்ணும் **சைவம்** மற்றொரு கண்ணுமாகத் துலங்கும் என்பது சொல்லாமே அமையும்.

## இதழின் நுவற்பொருள்: அணுகுமுறை

ஒரேயொரு பொருள் பற்றி மட்டும் பத்திரிகை நடத்துதல் மேதக்கதேனும், அன்றைய நாட்டின் நிலைமையை நோக்கின் அது நடைபெறுதல் அரிதெனத் தோன்றியது. ஆதலின் **மொழி, சமயம்** என்னும் இரண்டு பொருள்களையும் தலைமைப்பொருள்களாக ஒருங்கு கோடல் இன்றியமையாததாயிற்று.

1. தமிழ்வகையில் பழஞ்சங்கச் செய்யுட்கள், புராணம், இதிகாசம், பிற்காலத்துச் சான்றோர் நூல்கள் முதலியவற்றிலுள்ள அரும்பொருட்டிறங்களைப் புத்தம் புதிய முறையில் ஆராய்தல்.

2. தமிழ்வரலாறு, தமிழ்ப்புலவர் வரலாறு, தமிழ்மன்னர் வரலாறு முதலியனவும் அவ்வப்போது எடுத்துரைத்தல்.

3. இதன்கண் தமிழ் நன்மக்களுக்குப் பெரும் பயன்தரும் பொருள்கள் பிறமொழிகளினின்று மொழிபெயர்த்து வெளியிடுதல்.

4. சொல் ஆராய்ச்சி, புதுக்கருத்துக்கட்கு ஏற்ற தமிழ்ச்சொல்லாக்கல் முதலியனவும் இதில் பேரறிஞரால் எழுதுதல்.

5. தமிழ்மொழியின் தனித்தன்மையை இனிதுவிளங்கச் செந்தமிழ்ச்சொற்களே இதனுள் பெரிதும் பெய்துரைத்தல்.

6. தமிழின் சீரிய நிலையை அரசியலாரும் கல்வித் துறையினரும் அறிந்து உரியன புரியுமாறு கிளர்ச்சி செய்தல்.

7. இது சமயத்திறத்தில் எம்மதமும் சம்மதமாகக் கொண்டு சைவசமய நூற்பொருட்களைத் தெள்ளத் தெளிய எவரும் உணருமாறு நன்கெடுத்து விளக்குதல்.

8. புறச்சமயங்களிலுள்ள உண்மைகளையும் சமயம் நேர்ந்துழிக் கோட்டமின்றி நடுநிலையில் நின்றுகூறல்.

9. பொருட்பேறுடைய உலகச் செய்தித் திரட்டையும் அடிக்கடி வெளியிடுதல்.

10. ஒழுகன்முறைச் (ஆசார) சீர்திருத்தம் பற்றி வாய்த்தபோதெல்லாம் தனக்குத் தோன்றியதை அஞ்சாது எடுத்துரைத்தல்.

11. படிப்போர் உள்ளத்தை மகிழ்வித்து, உணர்ச்சியை ஊட்டி, அறிவைப்பெருக்கும் கூற்றுக்களில் முனைந்து நிற்றல்; கண்ணுக்கு விருந்தாகக் காட்சிப்படம் பல கொண்டு திகழ்தல்.

12. எல்லாவற்றிற்கும் மேலாக, அரசியலைக் குறித்து யாதும் புகலாது மோன விரதம் பூண்டு நிற்றலை உறுதியாக இறுதிவரை கடைப்பிடித்தல்.

இந்தவகைப் பொருட்பார்வையினின்றும், அணுகுமுறையினின்றும் எந்தக் காரணங்கொண்டும் சற்றும்விடாது, விடாப்பிடியாக ஓர் இலக்கிய ஏடு என்னும் வரையறைக்கு உட்பட்டுச் 'செந்தமிழ்ச்செல்வி' செயலாற்றி வருவது பாராட்டத்தக்கதேயாகும்.

முன்னதாக நாட்டுநிலையும், அரசியல் சூழலும் ஒருவாறு சுட்டிக்காட்டப்பெற்றது. சூறாவளிச் சுழற்காற்று திக்கெட்டும் வீசவும் 'செந்தமிழ்ச்செல்வி' ஒருகோடு போட்டுக்கொண்டு கருமமே கண்ணாக, முன்வைத்த செயற்பாடுகளே சிந்தையாக, செயலாகத் துலங்கி வருவதை நோக்கவேண்டும்.

மக்கள் வளர்ச்சிக்கு-மறுமலர்ச்சிக்கு எத்தனையோ வகையில் இதழ்கள் உதவுகின்றன. கலை வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி என்று துறைதோறும் வளர்ச்சிக்கான உரமாக இருப்பவை இதழ்களே என்பர் அ.மா.சாமி.

செந்தமிழ்ச்செல்வி செய்திகளைத்தரும் களமாக இராமல் அறிவுவளர்ச்சிக்கு ஆதாரமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இதழ்கள் அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வூட்டல் என்ற மூன்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன என்பது உண்மை. உள்ளத்தை மகிழ்வித்து உணர்ச்சியை ஊட்டி அறிவைப்பெருக்கும் கூற்றுகளில் இவ்விதழ் முனைந்து நிற்பதை நோக்கலாம்.

## இதழமைப்பு

இதழ்களின் நோக்கங்களுள் ஒன்று பொதுமக்கள் உணர்வைப் புரிந்து அதற்குச் செயல் வடிவம் கொடுப்பது. 'செந்தமிழ்ச்செல்வி' - தமிழர்திருநாளாம் தைத்திங்களிலே-நிறைமலையாம் மறைமலையடிகளார் வள்ளுவர் திருநாளென வகுத்துத்தந்த நாளிலே பிறந்தாள். அவ்வாண்டு மெய்கண்டான் ஆண்டு 700 கிறித்தவ ஆண்டு 1923.

ஓம்

# செந்தமிழ்ச்செல்வி

*திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும் திங்கள் தோறும் வெளிவருவது*

| | | |
|---|---|---|
| சிலம்பு<br>க | மெய்கண்டான் ஆண்டு எள. தைத்திங்கள்<br>1923 ஜனவரி-பிப்ரவரி திங்கள் | பரல்<br>க |

பொதுவாக அமைப்பில் அட்டைப் படங்களுக்கு முதன்மை அளிக்கப்படுகின்றது. இதழ்களின் நுழைவு வாயிலாக அட்டைப் படம் இருக்கின்றது.



செந்தமிழ்ச்செல்வி இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

**(EDITORIAL BOARD MEMBERS)**

**தலைவர்:**

1. திருவாளர் கா.சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A.M.L., அட்வகேட், நியாய கலாசாலைப் பேராசிரியர், சென்னை.

2. திருவாளர் S.சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B.A.,L.T., பாடசாலை டிப்டி இன்ஸ்பெக்டர், சைதாப்பேட்டைப்பிரிவு.

3. திருவாளர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரவர்கள், தலைமைத் தமிழாசிரியர்,ஹீபர் கலாசாலை, திருச்சிராப்பள்ளி.

4. திருவாளர் துடிசைக்கிழார் அ.சிதம்பரரனாரவர்கள் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், பல்மனேரி.

5. திருவாளர் M.V.நெல்லையப்ப பிள்ளையவர்கள், B.A. பென்ஷன் தாசில்தார்,சிந்துபூந்துறை.

6. திருவாளர் வித்துவான் மு.கதிரேசச் செட்டியாரவர்கள், மகிபாலன்பட்டி.

தமிழ்ப் பேராசிரியர் மணி.திருநாவுக்கரசு முதலியார், அறிஞர் கா.சுப்பிரமணியபிள்ளை, அறிஞர் பா.வே.மாணிக்க நாயகர், நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி.மு.கதிரேசன் செட்டியார், டாக்டர் மா.இராசமாணிக்கனார், டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார், பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார், அறிஞர் காழி.சிவ.கண்ணுசாமி பிள்ளை, பெருஞ்சொல் விளக்கனார் அ.மு.சரவணமுதலியார், அறிஞர் மா.வே.நெல்லையப்ப பிள்ளை, வழக்கறிஞர் தூ.சு.கந்தசாமி முதலியார், சைவப் பெரியார் க.சச்சிதானந்தம் பிள்ளை, துடிசைக்கிழார் அ.சிதம்பரனார், பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார், சைவப்புலவர் ப.இராமநாதபிள்ளை முதலாய பெருமக்களை இதழாசிரியர் குழுவில் கொண்டு இலங்கியது.

# செந்தமிழ்ச்செல்வி

சிலம்பு-72; பரல்-1
செப்டம்பர் 1997
வள்ளுவர் ஆண்டு 2028
ஆவணி

**நிறுவனர்** : தாமரைச்செல்வர் வ.சுப்பையா பிள்ளை

**இதழாசிரியர் குழு:**

முனைவர் பொன் கோதண்டராமன்

முனைவர் தமிழண்ணல்

முனைவர் க.ப.அறவாணன்

---

**மக்கள் தொடர்புக் கருவிகளில் இதழ்களின் பணி குறிப்பிடத்தக்கதாகும். வளர்முக நாடுகளில் மக்களுக்கு அறிவுவளர்ச்சி ஏற்படுத்துவதில் முக்கிய இடத்தை இதழ்கள் பெறுகின்றன. வானொலி, தொலைக்காட்சியின் பரவல், விரிவுபடுத்தப்படாத காலகட்டத்தில், மக்களின் கருத்துப்பரப்பு ஊடகத்தில் இதழ்கள் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தன.**

---

முனைவர் கு.சுந்தரமூர்த்தி

பேராசிரியர் கே.எஸ்.சிவராமலிங்கம்

கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா.இளங்குமரன்

முனைவர் வீ.ப.கா.சுந்தரம்

கவிமாமணி வேலூர் மா.நாராயணன்,எம்.ஏ.,

**ஆசிரியர் :** இரா.முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ.பி.லிட்., நூற்றாண்டு விழா, கழக ஆட்சியர், தாமரைத்திரு வ.சுப்பையாபிள்ளை, 1897-1983

அவர்களின் திருவுருவப் புகைப்படம் அண்மையில் வெளிவந்த இந்த இதழின் முகப்புப் பக்கத்தை அலங்கரிக்கின்றது.

**பக்க எண்கள்** : ஆண்டு முழுவதற்கும் தொடர்ச்சியாகக் குறிக்கப்படுகின்றன. முதல் இதழ் முப்பத்திரண்டு பக்கங்களில் முடிந்துள்ளது.

முதல் இதழின் முடிவில் 'இந்துமத அறநிலையப் பாதுகாப்பு மசோதா' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை ('செந்தமிழ்ச்செல்வி' அநுபந்தம்-துந்துபியாண்டு தைத் திங்கள்) இணைக்கப்பட்டுள்ளது. முதல் முப்பத்திரண்டு பக்கங்கள் தமிழ் எண்களாகவே இருக்கின்றன. அநுபந்தம் i,ii,iii, எனத்தொடங்கி xvi-16 பக்கங்கள் தனியாக எண்ணிடப்பட்டுள்ளது.

அடுத்த இதழ் 33ஆம் பக்கத்துடன் தொடங்கியுள்ளது. ஓராண்டு முடிந்த பின்புதான், மீண்டும் முதல் பக்கத்தில் இருந்து பக்க எண்கள் தொடங்கும். அந்நாளில் ஆண்டுமுடிந்ததும், அத்தனை இதழ்களையும் மொத்தமாகக் கட்டடம் செய்து விற்கும் வழக்கம் இருந்தது. அதற்கு வசதியாக இவ்வாறு தொடர் எண் கொடுத்தார்கள். ஓர் இதழின் விலை ரூ.3-8-0 ஆக இருந்திருக்கின்றது. அந்நாளில் தனி இதழ் விற்பனை மிகவும் குறைவு. கையொப்பக்காரர்களே அதிகம். அவர்களை நம்பித்தான் இதழ்கள் நடந்தன. சந்தாதாரர்கள் கையொப்பக்காரர்களென்றும், ஆசிரியர், பத்திராசிரியர், பத்திராதிபர் என்றும் நல்ல தமிழ்ச்சொற்கள் அந்நாளில் பயன்படுத்தப்பெற்றன.

முதல் இதழில் பத்திராசிரியரின் வேண்டுகோளாக அமையும் பகுதியை நோக்கலாம்.

'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னினான் முடியும்' என்னுந் தித்திக்குந் திருவாசகமுளதாகலின், பொருட்பால் சுரந்தூட்டும் செவிலித்தாயர் பலர் வேண்டும். 'செல்வி' பாலுண்டு உடலுரம் பெற்று வளரத் தமிழரசரும், தமிழ்ச் செல்வரும், தமிழ் மடாதிபதிகளும் ஏனைய தமிழ்ப் பெருமக்களும் முன்வருவராயின் அரும்பெரும் புலவர் பலர் அவட்குப் புத்தாடை புனைவர்; அணி பல அணிகுவர் கண்டோர் கண்ணும் நெஞ்சும் கட்டுண்ணுமாறு நமது 'செல்வி' கவின் கனிந்து இலங்குவள்'

''பழைய சிலம்பு இதழ்களைக் கையில் எடுக்கும் பொழுது மனத்தில் ஒரு மகிழ்ச்சி தோன்றுவதை உணரலாம். இதற்குக் காரணம் இதழின் தொடக்கத்தில் காணப்படும் கடவுள் வணக்கப் பாடல்களும் அவற்றுக்குரிய சிறிய தெளிவான விளக்கக் குறிப்புக் களுமேயாம்...செல்வியின் இதழைப் பயிலும் ஒருவர் திங்கள்தோறும் ஒன்றிரண்டு திருமுறைப் பாடல்களைப் பொருளுடன் உணர்ந்து கொள்வதற்கு இம்முறையினால் வாய்ப்பிருந்தது. இது நாளடைவில் அவர்களுக்குத் திருமுறைகளை முறையாகப் பயிலவேண்டும் என்னும் அவாவினைத் தோற்றுவித்திருக்கும் என்பதில் ஐயமில்லை''

- என்பர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.

ஓராண்டுக் கட்டமைப்பில் முதலிலேயே 'உள்ளுறை' ஆண்டு முழுவதும் வெளிவந்த இதழ்களின் கட்டுரைத் தலைப்புகள் அகர வரிசையில் அமைந்திருப்பது சிறப்பாகும். அதிலும் (இக்குறியிடப்பட்டவைகள் இத்தொகுதியில் முடிவுபெறாது தொடர்வன என்றெழுதி யிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உள்ளுறையின் இறுதியில் 'மதிப்புரை' பகுதி அமைந்திருப்பதும் கவனிக்கத்தக்கது. சான்று : சிலம்பு-2.

குறிப்புக்கள்: 'உள்ளுறை'யை யடுத்து இஃதமையும், ஒரு நன்கொடை, ஆண்டுவிழாக்கள், அறிஞர்களின் மறைவு, மகாநாடுகள், சிவனடியார் திருக்கூட்டம், சைவசித்தாந்த சங்கத்தேர்வுகள்(பரீட்சைகள்)பேறறிஞர் களின் மாட்சிமை, வாழ்நாள் கையொப்பம், விழா வாழ்த்துகள் போன்றவை குறிப்புக்களில் பக்க எண்களோடு அமையும்.

## திருவுருவப் புகைப்படங்கள்

5,6 புகைப்படங்களோடு தொடங்கிய இதழ் வளர வளர படங்களின் எண்ணிக்கை மிக்கு அமையுமாறு வளர்ந்தது. சான்று: சிலம்பு 2:1. திருநெல்வேலி, ஸ்ரீகாந்தி மதியம்மை கோவில் பொற்றாமரைக்குளம் 2.திருநெல்வேலி தத்துவப் பிரகாசமண்டபம், 3.திருநெல்வேலி ஸ்ரீநெல்லையப்பர் கோவில் அறுகாற்பீடம் 4.திருநெல்வேலி விஷ்ணு நந்தி 5.சீகாழிக் கோயிற்றிருக்குளம் (உ-தோற்றம்) 6.திருநெல்வேலி, ஸ்ரீநெல்லையப்பர் கோவில் சந்நிதி.

## பத்தாண்டு வளர்ச்சி

முதல் பத்தாண்டுகளின் தொகுதிகளையே என்னால் முறையாகப் பார்க்க இயன்றது. திங்களுக்குத் திங்கள், ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி கூடுமாற்றைக் கண்ணுற முடிகின்றது.

இதழ் முளைக்கும்போதே நோக்கும்போக்கும் மிகச்சிறப்பாக வரையறுக்கப்பெற்றன. அந்நோக்கும் போக்கும் அரண்களாக அமைந்து, ஆற்றொழுக்காக அன்னைத் தமிழுக்கும் ஆக்கம் அளித்துள்ளமையைக் காணமுடிகின்றது. ஆண்டுதோறும் உயர்வடைந்து வந்தமையை உணரலாம். 32 பக்கங்களுடன் முதல் மூன்றாண்டுகள் முகிழ்த்த செல்வி நான்காம் ஆண்டில் 48 பக்கங்கள் கொண்டது. ஐந்தாம் ஆண்டில் திடீரென்று மேலொரு 16 பக்கங்கள் கூடப்பெற்று 64 பக்கங்களாக மேலோங்கிற்று.

அதுமட்டுமன்றி, பழந்தமிழ் மக்களின் சீரிய பழக்கவழக்கங்களின் விளக்கங்களை விளக்கப்படங்களுடன் ஒவ்வோரிதழின் இறுதியிலும் மேற்கொண்டு மிளிர்ந்தது.

ஆறாம் ஆண்டில், கடவுள் வணக்கத் தேவாரப் பாட்டுத் திங்கள் தோறும் வெவ்வேறு தேவாரங்களாய்ப் பலவானதோடு அவற்றிற்கெல்லாம் தெளிவான உரைகளும் எழுதப்பெற்றது. அவ்வுரைகள் தாமும் உரையிலக்கியத்திற்கு ஓர் ஆக்கமாகப் பல்வேறு முறைகளிலும் எழுதி எடுத்துக் காட்டிற்று. இவ்வாண்டில் மற்றுமோர் அரும்பெருஞ் சிறப்பினால் செந்தமிழ்செல்வி உயர்வடைந்தது. முன் ஆண்டில் ஏற்றுவந்த வரிவிளக்கப்படங்களெல்லாம் (Line Blocks) ஆறாம் ஆண்டில் பூச்சுவிளக்கப் படங்களாக (Half-tone-Blocks) அழகியதாய் ஏற்றுவந்தது.

அதுவரை விளக்கக் கட்டுரைகள் முன்பின் தொடர்பின்றித் தனிப்பகுப்பு முறையல்லாமல் இருந்தன. அந்த அமைப்பு முறையிலும் வளர்ச்சி-தொடர்பின்றித் தனித்தனிப் பொருள்கள் பற்றி முன்னிருந்தது போலல்லாமல், தமிழ் மக்களின் பழக்கவழக்கங்களில் முதன்மையானதும் நுட்பமானதுமான அகப்பொருட் பழக்கத்தையெடுத்து அதனைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பகுத்துக்கொண்டு ஒவ்வொன்றையும் ஒவ்வோரிதழிலும் எளிய செழுந்தமிழ் நடையிற் கொண்டு பெரும்பயன்காட்டி விளங்கும் வகையில் அமைந்தது.

வேறுபல அருந்தமிழ்க் கட்டுரைகளும் பலப்பல தலைப்புகளின் கீழ்ப் பகுதியாக இதழ்தோறும் அறிஞர்கள் பால் திரட்டி வந்ததை ஒருவளர்ச்சி முறையாகக் குறிக்கலாம்.

'செந்தமிழ்ச்செல்வி' பெரும்பாலும் பிறமொழிக் கலப்பில்லாத தனிச் செந்தமிழ் நடையிலேயே பயின்று திகழ்ந்தமையைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

*தொடர்ச்சி அடுத்த இதழில்.....*

# சுதந்திரப் போராட்டத் தியாகிகள்

## திண்டுக்கல் மாவட்டம்

### தான் பிறந்த மண்ணைத்தாயாக - அல்ல தெய்வமாக, நிலைப்படுத்தி வழிபட்ட தியாகசீலர் சுப்பிரமணிய சிவா

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டில், நாடு சுதந்திமடையப் போராடிய, தியாக சீலர்களின், வரலாற்றுக் குறிப்புகளை, அதிலும் குறிப்பாகச் செவிவழிச் செய்திகளை, அச்சேறா அத்தகு வரலாற்றுக் குறிப்புகளைத் தமிழரசில் மாவட்ட வாரியாகத் தொடர்ந்து வெளியிட வேண்டும் என்ற முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுரைக்கேற்ப, இத்தொகுப்பு தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இவ்விதழில், திண்டுக்கல் மாவட்ட சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெறுகின்றன. சுதந்திரப்போராட்டம் அதில் காந்தியடிகளின் உலகிற்கே வழிகாட்டிய சாத்வீக நெறிப்போராட்ட முறை, அதோடு, பொருளாதார நிலையில், காந்தியடிகளின் புதிய பொருளாதார சிந்தனையான சுதேசி அடிப்படையிலான 'நிர்மாணப் பணிகள்' இவ்விரண்டு நெறிகளும் இன்றியமையாது இடம் பெற்றவையாகும்.

எனவே, இதை மையமாக வைத்து, திண்டுக்கல் மாவட்டத்தின் சுதந்திரப் போராட்டப் பங்களிப்பு என்ற நோக்கில், ஆழ்ந்து பார்த்தால், சுதந்திரப் போராட்டத் தியாக சீலர்களில் முன்னணி வகித்தவர் சுப்பிரமணிய சிவா என்பது வரலாற்றில் வழுவாமல் இடம்பெற வேண்டியதாகும்.

திண்டுக்கல் மாவட்டத்தில், இராஜம் அய்யர்-நாகம்மாள் தம்பதியரின் அருமந்த புதல்வராக 14-10-1884ஆம் ஆண்டு பிறந்தவர்தான் சுப்பிரமணியம் சிவா ஆவார். அவர் தனது பள்ளிப் படிப்பை மதுரையில் தொடங்கினார். அதன் பின்னர் அவர்தம் குடும்பம் திருவனந்தபுரத்தில் குடியேறியது. அங்கு, நகர உயர்நிலைப்பள்ளியிலும் அதன்பின்னர், நேடிவ் உயர்நிலைப்பள்ளியிலும், சுப்பிரமணிய சிவம் தனது படிப்பைத் தொடர்ந்தார். அங்குதான், சிவத்தின் படிப்பார்வமும், தமிழ், ஆங்கில இலக்கியங்களின்பால் அவருக்கிருந்த நாட்டமும் வெளிப்பட்டன. நாவன்மையில் சிறந்துவிளங்கிய சிவம், பேச்சுப்போட்டிகளில் பல்வேறு பரிசுகளை வென்றார். அதனால் அவர் பள்ளி இலக்கிய மன்றத்தின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொறுப்பில், அவர் திறமையுடன் செயலாற்றிப் பாராட்டுகளைப் பெற்றார்.

பெற்றோர்களின் வற்புறுத்தலின் காரணமாக நாட்டமின்றியே, 15 வயதில் அவருக்குத் திருமணமாயிற்று. பள்ளியின் இலக்கிய மன்றச் செயலாளரான சிவம், பல்வேறு ஆன்மீகப்



பெரியவர்களை அழைத்து சமயச் சொற்பொழிவுகளை நடத்திக்காட்டினார். இதனால், இல்வாழ்க்கையைவிட, பக்தியின்மேல் அவருக்குத் தனிஈடுபாடு ஏற்பட்டது. திருமணமான பின்னரும், அவர் படிப்பைத் தொடர்ந்தார்.

### சிவத்தின் போக்கில் மாற்றம்

16ஆம் வயதில், கோவையில் படிப்பைத் தொடர்ந்த சிவம், இல்லத்தை விட்டு, முதன்முதலில் ஏற்பட்ட பிரிவு, தட்டிக்கேட்க ஆளில்லை என்ற தைரியத்தால் அவரது போக்கில் மாற்றம் ஏற்பட்டு குறும்புத்தனம் தலைகாட்டியது. இருப்பினும், படிப்பிலும், இலக்கியத்திலும் அவரது ஆர்வம் குறையவில்லை. கோவையில், தேசிய உணர்வூட்டும் பத்திரிகைகளைப் படிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அதனால், சிவத்தின் சிந்தையில், சுதந்திரப் போராட்ட உணர்வுக்கு வித்திடப்பட்டது.

கோவையில் ஓராண்டே பயின்ற சிவம், கோடை விடுமுறையில் திருவனந்தபுரம் திரும்பினார். குடும்பம் ஏழ்மையில் சிக்குண்டிருந்தநிலையில், வேலைக்குச் செல்ல முடிவெடுத்து, உறவினரின் உதவியால் போலீஸ் துறையில் குமாஸ்தாவாகப் பணியேற்றார். ஆனால், விடுதலை விரும்பியான சிவத்திற்கு அவ்வேலை பிடிக்காது, ஒரேநாளில் இராஜினாமா செய்தார்.

### துறவியுடன் நட்பு

திருவனந்தபுரத்தில் முகாமிட்டு, சதானந்தசுவாமிகள் என்பவரின் சொற்பொழிவைக் கேட்டு,

செல்லத் தொடங்கினார். இதனால், தந்தையாருடன் ஏற்பட்ட சச்சரவின் காரணமாக, நேரேயடியாக வீட்டைப்பிரிந்து, 4 ஆண்டுக்காலம் சதானந்த சுவாமிகளுடன் ஐக்கியமானார். தந்தையார் இராஜம் அய்யர், நோய்வுற்று இறக்கும் தருவாயில் சிவம் இல்லம் வந்து சேர்ந்தார்.

**தர்மபரிபாலன சமாஜம்**

அதன்பிறகு, சுதந்திர தாகத்தின் காரணமாக, திருவனந்தபுரத்தில் **'தர்ம பரிபாலன சமாஜம்'** என்ற அமைப்பை நிறுவி, மக்களிடம் தேசபக்தியை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டார். அவருடைய பேச்சைக் கேட்க, மக்கள் அலை, அலையாகக் கூடினர். செய்தியறிந்த 'திருவனந்தபுரம் மன்னர் சமஸ்தானம்' அவரை வெளியேறும்படி உத்தரவிட்டதால், நெல்லையில் வந்து குடியேறினார்.

இந்திய சுதந்திரப்போராட்டத்தை, இலட்சியமாகக் கொண்டிருந்த காங்கிரஸில், வெள்ளையரை அனுசரித்துச் சென்று விண்ணப்ப, வேண்டுகோள்களின் அடிப்படையில் சுதந்திரம் பெறலாம் என்ற மிதவாதப் போக்குடன் கோபாலகிருஷ்ண கோகலே தலைமையில் ஒரு பிரிவும், வெள்ளையருடன் போராடி, அவர்களை நாட்டை விட்டுத் துரத்திவிட்டுச் சுதந்திரம் அடையவேண்டுமென்று, திலகர் தலைமையில் தீவிரவாத அடிப்படையில் ஒரு பிரிவும் செயலாற்றிவந்தன.

**தமிழகத்தின் தீவிரவாதம்**

தமிழகத்தைப் பொறுத்தவரையில், வ.உ.சிதம்பரனார், அமரகவி பாரதியார், சுப்பிரமணிய சிவா ஆகியோர் தீவிரவாத அடிப்படையில்தான், ஆங்கில அரசைப் பணியவைக்க முடியுமென்று நம்பினர். வெறும் பேச்சளவே என்றல்லாமல், செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்த வ.உ.சி., வெள்ளையரின் வணிக அடிப்படையைத் தகர்த்திடும் வண்ணம் இலங்கைக்கும், தூத்துக்குடிக்கும் இடையில் சுதேசிக் கப்பலொன்றை இயக்கினார். இதன்மூலம், பன்னெடுங்காலமாகக் கொள்ளை இலாபம் சம்பாதித்த வெள்ளையரின் சினத்திற்கு ஆளானார். அதோடு, தூத்துக்குடியில் வெள்ளையருக்குச் சொந்தமான, ஹார்வி மில்லில் சுதந்திர வேட்கை கொண்ட தொழிலாளர்களை ஒருங்கிணைத்துச் சங்கம் அமைத்தார். இத்தருணத்தில், சுப்பிரமணிய சிவாவும், வ.உ.சி.யுடன் இணைந்தார். இருவரும் பம்பரம்போல் செயலாற்றி நெல்லைச் சீமையில், தென்தமிழகத்தில் சுதந்திர உணர்வையும், அந்நியப் பொருட்கள் பகிஷ்கரிப்பு போன்ற சுதேசி உணர்வுகளையும் மக்களிடம் பரப்பினார்கள். இவர்களது பீரங்கிப் பிரச்சாரத்தால், மக்களிடம் ஏற்பட்ட சுதேசி எழுச்சியைக் கண்டு ஆளும் ஆங்கிலேயர் அச்சம் கொண்டனர். வ.உ.சி.யையும், சுப்பிரமணிய சிவாவையும் சிறைப்பிடிக்கும் தருணம் பார்த்துக்கொண்டிருந்தனர்.

**வங்கத்துத் தேச பக்தர் விபின் சந்திரரைப் பாராட்டிடப் பொதுக்கூட்டம்-ஆங்கிலேயரை எதிர்த்து ஊர்வலம்**

இதே காலகட்டத்தில், வங்கத்துத் தீவிரவாதியாகவும் சுதந்திரப் போராட்ட வீரராகவும் விளங்கிய அரவிந்தருக்கு (அரவிந்தகோஷ்) எதிராகக் கோர்ட்டில் சாட்சியம் கூறுமாறு தேசபக்தரும், சொல்லாற்றலால், வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கெதிராக மக்களைத் திரட்டியவருமான 'விபின் சந்திரபாலரை'; வெள்ளையர்கள் வற்புறுத்தினர். துணிச்சலைத் துணையாகக்கொண்ட அவரா இணங்குவார்? இணங்கவில்லை! ஆதிக்க அரசு, விபின் சந்திரரை ஆறுமாதம் சிறையில் தள்ளியது.

சிறைவாசம் முடிந்து வெளிவந்த விபின் சந்திரருக்கு, தூத்துக்குடியில் பாராட்டுக்கூட்டமும் சுதந்திர எழுச்சி ஊர்வலமும் நடத்தவேண்டுமென்று முடிவுசெய்து வ.உ.சி.யும், சிவமும், முழுமூச்சோடு செயலில் இறங்கினர். அவர்கள் காட்டிய தீவிரம் ஆங்கிலேயர்களை ஆத்திரமடையச் செய்தது. அதிகாரத்தை வைத்து மிரட்டிப் பார்த்தனர்; அவர்கள் அடங்குவதாக இல்லை. திட்டமிட்டபடி கூட்டமும், 10,000 பேர் கூடிய மிகச் சிறப்பான சுதந்திர எழுச்சி ஊர்வலமும் வெற்றிகரமாக நடந்தேறியது. இச்செய்தி கேட்ட நெல்லை மாவட்ட கலெக்டர் விஞ்ச் ஆத்திரமுற்றார். வ.உ.சி.யையும், சிவத்தையும் மிரட்டி, அடக்கிடத் துணிந்து, இருவரும் நெல்லையில் தன்னைச் சந்திக்குமாறு தாக்கீது அனுப்பினார். "சுதேசி இயக்கப் பிரச்சாரம், ஆளும் எங்களுக்கெதிரானது; நாங்கள் ஆளுவோர்; நீங்கள் அடிமைகள்; உங்களைச் சிறையில் அடைத்தாலும், சுட்டுத்தள்ளினாலும், எங்களை யாரால் என்ன செய்யமுடியுமென்று" எக்காளமிட்டார். 'சிறையிலடைத்தாலும், சித்திரைவதை செய்தாலும் எங்கள் அறப்போர் நிற்காது!. 'நெட்டை மரங்கள் என நின்று பெட்டைபோல் புலம்பமாட்டோம்' என்று இருவரும் சிங்கமெனக் கர்ஜித்தனர். விளைவு, இருவரும் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டனர். தங்களது பொன்னான தலைவர்களாம், வ.உ.சி.யையும், சிவத்தையும் காரணமின்றிக் கைது செய்த ஆதிக்க-ஆணவத்தை எதிர்த்து, நெல்லை நகர மக்கள் வெகுண்டெழுந்தனர்; கடைகள் அடைக்கப்பட்டன; கல்லூரி, பள்ளி மாணவர்கள் வகுப்பறையை விட்டு வெளியேறினர். நகரமே எரிமலையாய் வெடித்தது, மக்களை அச்சுறுத்தி அடக்கிட, சப்-கலெக்டர் ஆஷ், மக்கள் கூட்டம் நோக்கி மனம் போனபடி சுட்டான். துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த 4 இளைஞர்கள் தெருவிலேயே சுருண்டு விழுந்து மாண்டனர். இருப்பினும், கலவரம் அடங்கவில்லை; இராணுவம் அழைக்கப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகே அமைதி

திரும்பியது. ஆனால் இரயிலில் பயணம் செய்த, கொலை வெறிபிடித்த ஆஷ், மணியாச்சி இரயில் நிலையத்தில் வாஞ்சி என்னும் வீர இளைஞனால், சுட்டுக் கொல்லப்பட்டான்; வீர வாஞ்சியும் அதே துப்பாக்கியை வாய்க்குள் வைத்துச் சுட்டுகொண்டு இறந்துபோனான்.

வ.உ.சி.மீதும், சிவாவின் மீதும் அரசியல் துரோகக் குற்றச்சாட்டு ஆங்கிலேய அரசால் சிருஷ்டிக்கப்பட்டது. நீதியாசனத்தில் அமர்ந்திருந்த ஆங்கிலேய எதேச்சதிகார நீதிபதி பின்ஹே, ஒருதலைப்பட்சமாக, நீதியைக் கொன்று, வ.உ.சி.க்கு 40 ஆண்டுகள் அந்தமான் சிறைவாசம் என அநீதியாகத் தீர்ப்பெழுதினான். நடுநிலைப் பத்திரிகைகள் சாடின; பிரிட்டிஷ் அமைச்சர் மார்லி பிரபு என்பாரே இதைக் கண்டித்தார். மேல் முறையீட்டில் உயர்நீதிமன்றம் அதை 10 ஆண்டாகக் குறைத்தது, பிரிவியூ கௌன்சில் அதை 6 ஆண்டுக் கடுங்காவல் தண்டனையாகக் குறைத்து, தண்டனையை அந்தமானில் அனுபவிக்க வேண்டியதில்லை என்றும் தீர்ப்பளித்தது.



இதேபோன்று சிவாமீதும் மக்களை ஏகாதிபத்திய அரசுக்கெதிராகத் தூண்டிவிட்டதாகக் குற்றஞ்சாட்டி 10 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் அது பிரிவியூ கௌன்சிலில் 6 ஆண்டுக் கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. இருவருமே திருச்சி சிறையிலடைக்கப்பட்டனர். பின்னர் வ.உ.சி.கோவைச் சிறைக்கு மாற்றப்பட்டார். அங்குதான் அவரைச் செக்கிழுக்க வைத்தனர்.

திருச்சியில் கடுந்தண்டனை விதிக்கப்பட்டிருந்த சிவாவுக்குக் கடுமையான வேலைகள் தரப்பட்டன. சுண்ணாம்பில் ஊறப்போட்டுக் காயவைத்த உரோமம் அடிக்கும் கடும்பணி அவருக்குத் தரப்பட்டது. இதனால் அவருக்கு உடல் நலிவுற்றது. வாட்டும் இருமலினால் வாடினார். அதைத்தொடர்ந்து, அவரைப் பெருநோய் தொற்றிக் கொண்டது. சேலம் சிறைக்கு மாற்றப்பட்டு தண்டனைக்காலம் கழித்துச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

### மயிலையில் சிவம்

சிறையிலிருந்து வெளிவந்த சிவம், மனைவியை அழைத்துகொண்டு சென்னை, திருமயிலையில் குடியேறினார். குடும்பம் நடத்தக் கையேந்தி அடிமை வேலை செய்யவிரும்பாத சிவா, 'ஞானபானு' என்னும் மாதாந்திரப் பத்திரிகையை ஆரம்பித்தார். 'அறிவுச் சூரியன்' என்ற பொருள் கொண்ட அச் சஞ்சிகை அறிவு வர்க்கத்தால் பாராட்டப்பட்டது. பாரதியாரின் எழுத்தோவியங்கள் அதில் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். சிவத்தின் நாட்டுப்பற்று மிக்க எழுத்துக்கள் இளைஞர்களை ஈர்த்தன. ஆனால், நோயுற்றிருந்த அவரது இல்லாள் மறைவெய்தினார். ஆனால் துணைவியாரைப் பிரிந்தாலும் சிவாவின் அரசியல் பணியிலும், பத்திரிகைப் பணியிலும் தடங்கல் ஏற்படவில்லை.

**'ஞானபானு'** வோடு மட்டுமல்லாமல் வார வெளியீடாக **'பிரபஞ்சமித்திரன்'** என்ற பத்திரிகையையும், சுப்பிரமணிய சிவா வெளியிட்டார். அரசியலிலும் அவரது தீவிரம் குறையவில்லை. திலகரின் பிறந்த நாளைச் சென்னையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடினார். திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குத் **'திலகர்கட்டம்'** என்ற பெயரும் சிவாவால் சூட்டப்பட்டது.

நோயாலும், வறுமையாலும் வாடிய போதும், சிவா, திருவல்லிக்கேணி கடற்கரையில், பஞ்சாப் படுகொலை, ரௌலட் சட்டம் ஆகியவற்றை கண்டித்து நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்திலும், கல்கத்தாவில் நடந்த **'ஒத்துழையாமை இயக்க மாநாடு'** முதல் **சாத்தூர் அரசியல்** மாநாடுவரை பங்கேற்றார்.

பிரபஞ்ச மித்திரனை டாக்டர் வரதராஜுலு நாயுடுவிடம் ஒப்படைத்த சிவா, சில ஆண்டுகளிலேயே மீண்டும் ஒரு வாராந்திரப் பத்திரிகையாக **'இந்திய தேசாந்திரி'**யைத் தொடங்கினார். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெளிவந்த அப்பத்திரிகையை ஒழித்துக்கட்ட விழைந்த ஏகாதிபத்தியத்தினரின் இடைவிடாத் தொல்லையால் அது இழுத்து மூடப்பட்டது.

### பாரத மாதாவே தெய்வம்

ஆங்கிலேய அரசைத் தீவிரமாக எதிர்த்துவந்த சிவம், அதே நேரத்தில், சாதிமத பேதங்களை அறவே வெறுத்தார். சுதந்திர இந்தியாவை, விடுதலை பெற்ற பாரதத்தை 'பாரதத்தாயை' அவர் தெய்வ வடிவில் பார்த்தார்; இந்நாட்டு மக்களனைவரையும் 'பாரத சாதியினர்' என்றழைத்த புரட்சிப் பார்வை அவருடையதாகும். அனைவரும் ஒருமித்த எண்ணத்தோடு வாழ 'பாரதீய மதம்' என்ற கோட்பாட்டை வலியுறுத்தினார். எனவே, பாரத மாதாவிற்குக் கோவில்கட்டி, பாரதாஸ்ரமம் என்ற

தேசபக்தியை வலியுறுத்தும் 'ஆசிரமம்' அமைக்க முனைந்தார்.

எனவே, பொருள் தேடியும் பாரதாஸ்ரமக் கொள்கைகளைப் பரப்பியும், இந்திய இளைஞர்களைக் கவர்ந்திடும் வண்ணம், கும்பகோணம், சிறுவயல், காரைக்குடி ஆகிய ஊர்களில் முகாமிட்டு இடைவிடாச் சொற்பொழிவுகளும், கலந்துரையாடல்களும் நடத்தியும், மக்களிடம் எழுச்சியூட்டினார்.

### காரைக்குடியில் காந்தியடிகளுடன்

காரைக்குடிக்கு வருகை புரிந்த காந்தியடிகளைச் சிவம் முன்னின்று வரவேற்றுச் சிறப்பித்தார். காந்தியடிகள் அவருடைய செயல்வேகத்தைக் கண்டு வியந்து பாராட்டினார். சிவம், தன்னுடைய உயிரனைய இலட்சியமான, பாரதீய மதக்கொள்கை பற்றி விவரித்து, காந்தியடிகளின் திருக்கரங்களால் அமராவதிபுதூரில், பாரத மாதா கோவிலுக்கு அடிக்கல் நாட்டச்செய்தார்.

அவருடைய, இத்தகைய, இலட்சியக் கொள்கைகளுக்குத் தமிழ்நாட்டு மக்களிடம் தகுந்த வரவேற்பிருந்தது. சன்னியாசத் தோற்றத்தில், சுதந்திர தாகத்தை மக்களிடம் மறைமுகமாகப் பரப்பி வந்த சிவத்தின் நடவடிக்கைகளை ஆங்கிலேய அரசு கண்காணித்தது. அவரைச் சிறையிலடைக்கத் தருணம் பார்த்துக் காத்திருந்தது. அவரைப் பிடித்து மதுரை நீதிமன்றத்தில் நிறுத்தி 2½ ஆண்டுக் கடுங்காவல் தண்டனையை விதித்து மீண்டும் திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர். உடல் நலிவுற்ற அவரை 3 மாதங்களில் நிபந்தனையின் பேரில் விடுதலை செய்தனர்.

மீண்டும் சென்னை வாசம்; டாக்டர் நஞ்சுண்டராவ், டாக்டர் சுந்தரம் போன்றோரின் சிகிச்சையின் விளைவாக ஓரளவு தேறியதும், மீண்டும் அரசியலில் ஈடுபட முடிவு செய்தார்.

### இந்துஸ்தான் பஞ்சாயத்து சபை

இம்முறை நம்முடைய பண்டைக்கால, பஞ்சாயத்து சபையை, மீண்டும் உயிரூட்டி **'இந்துஸ்தான் பஞ்சாயத்து சபை'** என்ற அமைப்பை உருவாக்கி மக்கள் ஆதரவைப் பெற்றார். சிவத்தின் இத்தகைய ஒப்பற்ற முயற்சியால், ஆங்கிலேய நீதிமன்றங்களின், மதிப்புக் குறைவதை உணர்ந்த ஆங்கிலேய அரசு, கிராமங்களில் அந்நிய ஆட்சிக்கெதிரான இணையாட்சியை உருவாக்குகிறார் என்று குற்றஞ்சாட்டிப் பிடியாணை பிறப்பித்தனர். 'முள்ளை முள்ளால் எடுக்கும் முயற்சியாக' - 'இனி இதுபோன்ற முயற்சிகளைப் பற்றிப் பேசமாட்டேன்' என்று எழுதிக்கொடுத்துவிட்டு, இராஜதந்திரமாகச் சிறைத்தண்டனையிலிருந்து தப்பினார்.

### பாப்பாரப்பட்டியில் பாரத மாதா கோவில்

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் வாழ்ந்துவந்த தனது நண்பர் சின்னமுத்து முதலியாரின் வேண்டுகோளை ஏற்று அங்கு முகாமிட்டார். அப்பகுதி மக்களை ஒன்று திரட்டி, 'பாரத மாதா' கோவில் நிர்மாணம் குறித்துப் பேசி ஆதரவு திரட்டினார். மக்களின் நிதியுதவி பெற்று, பாப்பாரப்பட்டிக்கருகில், 7 ஏக்கர் நிலம் வாங்கினார்.

அதில் பாரத மாதா கோயில் கட்ட அச்சமயம் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 'சுயராஜ்யக் கட்சிக்கு' ஆதரவு தேடிவந்த தேசியத் தலைவர்களில் ஒருவரான சித்தரஞ்சன் தாஸ் அவர்களைக் கொண்டு அடிக்கல் நாட்டினார். பாப்பாரப்பட்டியில் ஆஸ்ரமம் அமைத்து அருந்தொண்டாற்றினார்.

பாரத மாதா கோவில் நிர்மாணப் பணிகளுக்கு நிதி திரட்டிட மீண்டும் பயணம் மேற்கொண்டார். சுதந்திரம் வேண்டி, அவர் மக்களிடையே ஆற்றிய உரைகளால் ஆத்திரமடைந்த, ஆங்கிலேய அரசு-**தொழுநோயாளி சிவாவை** ரயிலில் பயணம் செய்யக்கூடாதென வினோதமான-வேடிக்கை நிறைஉத்தரவு ஒன்றினைப் பிறப்பித்தது. சிவம் அயரவில்லை; கால்நடையாகவும், வாடகை வண்டியமர்த்தியும் தமது இலட்சியப் பயணம் தொடர்ந்தார்.

மீண்டும் 6 மாதம் சென்னைவாசம்; அங்கேயும் மீண்டும், ஏகாதிபத்திய எதிர்ப்புச் சொற்பொழிவுகளைத் தொடர்ந்தார். மீண்டும் ஆங்கிலேய அரசின் அடக்குமுறை ஏவல்கள்; வழக்கு; விசாரணை; ஆனால் சாட்சியமில்லாததால், வழக்குத் தள்ளுபடியாயிற்று.

அதன்பின்னர், மீண்டும் பயணம் தொடங்கினார். மதுரையில் முகாமிட்டுச் சுதந்திர முழக்கமிட்டார். அங்கு இந்திய சுதந்திர யுத்தநாள் விழாவெடுத்துத் தானே எழுதித் தயாரித்த **'சிவாஜி', 'தேசிங்குராஜன்'** போன்ற நாடகங்களைத் தாமே தயாரித்து நடித்தார். அவைகளின் வாயிலாகவும் மக்களுக்குச் சுதந்திர உணர்வூட்டினார். அச்சமயம், அவருடைய அருமை நண்பர்கள், வ.வே.சு.ஐயர், காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா, தலைவர் சித்தரஞ்சனார் ஆகியோரின் மறைவுச் செய்தி அவரைப் பெரிதும் வாட்டியது.

ஏற்கெனவே, நலிவுற்றிருந்த அவர், தமது கனவான, பாரத மாதா கோவில் நிர்மாணப் பணிதொடர மீண்டும் பாப்பாரப்பட்டிக்குப் பயணமானார். பாரதாஸ்ரமத்தில் வந்து தங்கிய, தியாகசீலர்-சுப்பிரமணிய சிவா **23-7-1925ல்** சுதந்திர இந்தியா, பாரத மதம், பாரத மாதா கோவில் போன்ற நிறைவேறாக் கனவுகளைச் சுமந்துகொண்டே இயற்கை எய்தினார். பாரதத்தாயின் தலைசிறந்த பாரத மகன், பிறந்த பொன்னாட்டைத் தெய்வமாக, அதையே ஒரு தேசிய மதக்கோட்பாடாகப் பரிணமிக்க விழைந்த, தீராத் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருந்தும் ஓயாது உழைத்த தீரர் நிரந்தர ஓய்வெடுக்க பாரத மாதா கோவிலுக்கென்று அரும்பாடுபட்டு அவரே வாங்கிய அந்த இடத்திலேயே சமாதியானார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் அவ்விடத்தில் சுப்பிரமணிய சிவாவின் நூற்றாண்டையொட்டி நினைவுத்தூண் ஒன்று நிறுவிடப்பெற்று, சமாதியும் நல்ல முறையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

### திரு.பி.ஆர்.பாலகிருஷ்ணன்



**1914**-ல் ஒட்டன்சத்திரத்தில் பிறந்த திரு.பி.ஆர்.பாலகிருஷ்ணன், 9-வது வகுப்புவரை படித்துள்ளார். நமது நாட்டை அடிமைப்படுத்தி எதேச்சதிகார ஆட்சிபுரிந்து வந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, காந்தீய வழியில் அறப்போராட்டத்தின்பால் ஈடுபாடு கொண்டார். 1942-ல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில், ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்றார்.

அதன்விளையாக, சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, 1942-டிசம்பர் முதல் 1943 ஜனவரித் திங்கள் வரை 2 மாதங்கள் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இவர், முன்னாள் மத்திய ரயில்வே அமைச்சர், காலஞ்சென்ற தியாகி ஓ.வி.அளகேசன் அவர்களுடன் வேலூர் மத்திய சிறையிலிருந்தார் என்பது குறிப்பிடத்தகுந்ததாகும். மேலும், நாடு சுதந்திரமடைந்த 1947ஆம் ஆண்டுதான், கரூரில், இராஜமாணிக்கம்மாள் என்பவரை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார் .

### திரு. எம்.இராமசாமி



**தி**ரு.எம்.இராமசாமி அவர்கள், திண்டுக்கல்லில் 7.6.1922-ல் ஆர்.மருதநாயகம்-ரெங்கம்மாள் தம்பதி மகனாகப் பிறந்தார். நான்காம் வகுப்பு வரை படித்த இவர் இந்திய சுதந்திரப் போரில் ஈடுபட்டுப் பெருமை கொண்டார்.

மதுரையில், மூத்த சுதந்திரப் போராட்ட வீரராகத் திகழ்ந்தவர், திரு.ஏ.எம்.இலட்சுமணன் நாயுடு; இவர் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் முழு மூச்சுடன் பங்குகொண்டு பெல்லாரி, அலிபுரம் சிறையில் அடைக்கப்பட்டு 9 மாதங்களுக்கு மேல் சிறைத்தண்டனை அனுபவித்தவராவார். இவருடைய தலைமையின்கீழ், திண்டுக்கல் தியாகி எம்.இராமசாமி, 1942-ல் ''வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கேற்றதன் விளைவாக, 14-8-1942ல், இவரைச் சிறைப்பிடிக்க ஆங்கிலேய அரசால் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது; ஆனால், தியாகி ஏ.எம்.இலட்சுமணநாயுடுவின் அறிவுரையின்படி, 'தலைமறைவு' வாழ்க்கையை மேற்கொண்டார்; தலைமறைவு வாழ்க்கையின்போது, இவர் வாளாவிருக்கவில்லை; இரகசியமாக, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் துண்டுப்பிரசுங்களை வினியோகித்து, ஹர்த்தால் அறிவிப்புகளைச் சுவர்களில் எழுதி அதோடு மாணவர்களையும், தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்து, வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கெதிராக முழு அடைப்புப் போராட்டங்களில் ஈடுபடச் செய்தார். 1943-ல் முதுபெரும் தியாகி பழனி பி.எஸ்.கே.இலட்சுமிபதி ராஜூ அவர்களுடன் பாளையங்கோட்டைச் சிறையில் 1½ மாதங்கள் தண்டனை அனுபவித்தவர் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

1938-ல் ஆளுநர் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தது; 1940ல் வெடிகுண்டு வீசிக் கைதானது; 1943-ல் ஆகஸ்ட் புரட்சியில் ஈடுபட்டுப் பாளையம்கோட்டை சிறை சென்றது; பம்பாய் மாலுமிகளுக்கு ஆதரவு தெரிவித்துத் திண்டுக்கல்லில் போராட்டம் நடத்தியது போன்ற இவர் தொடர்பான சுதந்திர போராட்ட காலச் சம்பவங்கள் பல உண்டு. 1945-ல் வி.இராமரத்தினம் என்ற மாது இவரது இல்லக்கிழத்தியானார்.

### திரு. ப.இராசலிங்கம்



**தி**ண்டுக்கல், திரு.பழனிமுத்துப் பிள்ளையின் மகனான திரு.ராஜலிங்கம் அவர்கள், பெயர்பெற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவராவார்.

5-12-1922-ல் பிறந்த இவர், மருதாயம்மாள் என்பவரை 1962-ல் மணந்தார்.

1940-ல் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம், 1942ல் நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் போன்றவற்றிலும்-அதற்கு முன்பாக 10 வயதிலேயே கள்ளுக்கடை, சாராயக்கடை மறியல், அந்நியத் துணி பகிஷ்காரம், சிறைவாசம் போன்றவற்றிலும் கலந்துகொண்டுள்ளார். 1940ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு, பழனி சப்-ஜெயிலில் 1 மாதம் கடுங்காவல் சிறைத்தண்டனை அனுபவித்த சிறப்பினர் இவர். 1942 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தின் இலட்சியகீதமான 'செய் அல்லது செத்துமடி' என்ற வேதவாக்கை சிரமேற்கொண்டு, துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும், அரசு அலுவலர்களைத் தடுத்தல், பொதுமக்களை, வெள்ளை ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராகத் தூண்டுதல் ஆகியவற்றுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டு, போலீசாரால் தேடப்பட்ட இவர், அவர்களிடம் சிக்காமல், மலை,காடுகளில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டு, கிராமங்களில் சுதந்திர எழுச்சிப் பிரச்சாரம் செய்தார்.

### திரு. எஸ்.வி.முத்துசுவாமி



**தி**ரு.எஸ்.வி.முத்துசுவாமி அவர்கள் 14.6.1914ல், தேவரப்பன் பட்டியில் பிறந்தவர். அய்யம்பாளையத்தில் ஐந்தாம் வகுப்பு வரை படித்திருந்த இவருக்கும், எம்.பாப்பம்மாள் என்பவருக்கும் 1937ல் திருமணம் நடைபெற்றது.

திரு.வையாபுரிக் கவுண்டர்-திருமதி தேவம்மாள் ஆகியோர் இவர் பெற்றோராவர். தனிநபர்-சத்தியாக்கிரகம், 'வெள்ளையனே வெளியேறு' ஆகிய போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டவராவார். சென்னை மத்திய சிறையில், 1 மாதம் சிறைவாசம் ஏகியவராவார்.

## திரு. வி.அனந்தபத்மன்



திரு.வி.அனந்தபத்மன் அவர்கள், 19.2.1924ல் அய்யம்பாளையத்தில் பிறந்தவர்; எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கிறார்.இவருக்கும் கொடைக்கானல் வட்டம் காமனூரைச் சேர்ந்த சின்னத்தாய்க்கும் 1955ல் திருமணம் நடைபெற்றது.

1942ல் வரிகொடா இயக்கத்தில் பங்கேற்றார். அது தொடர்பான அலுவலகத்திற்குத் தீ வைத்தார். 1944ல் செஷன்ஸ் கோர்ட் மறியலில் ஈடுபட்டார்; 1945ல் ஆளுநர் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கைதானார்; இதனடிப்படையில் நிலக்கோட்டையில் சிறைவைக்கப்பட்டார். மேலும், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்குகொண்ட இவர், முன்னாள் அமைச்சர் தியாக சீலர் பி.கக்கன் அவர்களுடன் மதுரை மத்திய சிறையில் 4 மாதங்களும், அலிபுரம் (பெல்லாரி ஜெயிலில் 4 மாதச் சிறைத் தண்டனையும் பெற்றவர். இவர் மத்திய அரசு தியாகிகள் பென்சன் பெற்றுவருகிறார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

## திரு. எஸ்.இருளப்பன்



திரு.எஸ்.இருளப்பன் அவர்கள், அய்யம்பாளையத்தில் 10.6.1920ல் பிறந்தார்; எட்டாம் வகுப்புவரை படித்தார்.

சமயணன் சேர்வை-சீதையம்மா தம்பதியரின் மகனான இவருக்கும்-நாகரத்தினம் என்பாருக்கும் 1956ல் திருமணம் நடைபெற்றது.

1935-ல் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டு 1942,43,44 ஆகிய ஆண்டுகளில் சென்னை மத்திய சிறை, பெல்லாரி மத்திய சிறை ஆகியவற்றில் சிறைவாசம் செய்த தியாகியாவார் இவர்.

## திரு.கே.எம்.சடையாண்டி



திரு.கே.எம்.சடையாண்டி அவர்கள் 29.5.1920ல், அய்யம்பாளையத்தில் பிறந்தவர்.

மூக்கை கவுண்டர்-ஆராயம்மாள் புதல்வரான இவர், 8ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். 1942ல், அதே ஊரினரான கமலாயி அம்மாளை மணந்துகொண்டார்.

தனிநபர் சத்தியாக்கிரகத்திலும், ஆகஸ்ட்டுப் புரட்சியிலும், வரிகொடா இயக்கத்திலும் கலந்துகொண்டு 1941-ல் சென்னை மத்திய சிறையில் 2 மாத கடுங்காவல் சிறைவாசம் கண்ட இவர்-'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின்போது அரசினர் அச்சுறுத்தலால் தலைமறைவாக இருந்தவரும் ஆவார்.

## திரு. எம்.சண்முகசுந்தரம்



திரு.எம்.சண்முகசுந்தரம் அவர்கள், 6.12.1919ல் நத்தம் சிறுகுடியில்-திருமுத்தையா-சேர்வையின் மகனாகப் பிறந்தார்.

1943 முதல் 1945 வரை நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு; ரங்கூனிலிருந்த தலைமையிடத்திலேயே பணிபுரிந்திருக்கிறார். 1965ல் தான் அங்கிருந்து இந்தியாவிற்குத் திரும்பியிருக்கிறார்.

இவர் மனைவி பெயர், திருமதி தனம். இந்திய தேசிய இராணுவ பென்சன் பெற்றுவருகிறார்.

## திரு. ஆர்.கோபால்



திரு.ஆர்.கோபால் அவர்கள்-திரு.எஸ்.இரத்தினம், திருமதி ஆர்.மீனாட்சி ஆகியோரின் மகனாகப் பழனி நகரத்தில் பிறந்தவர்.

நான்காம் வகுப்புவரை படித்த இவருக்கும் கோ.மாரிமுத்து என்பாருக்கும் 1944ல் திருமணம் நடைபெற்றது.

கள்ளுக்கடை மறியல், ஆகஸ்ட் புரட்சி-போன்ற போராட்டங்களில் ஈடுபட்டு 1942ல் அலிபுரம் சிறையில் ஒன்பது மாத காலம் தண்டனையை அனுபவித்த சிறப்பினர் இவர். 1972ல் இந்திய சுதந்திர தின வெள்ளிவிழா நினைவாக இந்திராகாந்தி அவர்களால் தாமரைப் பட்டயம் வழங்கப்பட்டவராவார்.

## திரு. இப்ராகிம்



திரு.இப்ராகிம் அவர்கள் பழனியில், அப்துல் ரகீம்-ஸ்ரீராம்பி அம்மாள் ஆகியோரின் மகனாகப் பிறந்தவர்.

1942 ஆகஸ்ட்டுப் புரட்சியின்போது போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைபுகுந்த பெருமை இவருடையது.

1951ல் திருமணம் செய்துகொண்டார். 1942 ஆகஸ்டுப் புரட்சியில் பங்குகொண்டு வெள்ளை ஏகாதிபத்தியத்தால், 6 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு பெல்லாரி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சுதந்திரதின வெள்ளி விழாத் தாமரைப்பட்டயம் பெற்ற இவர், மத்திய-மாநில பென்சன் பெறுகிறார்.

### திரு. எம்.மருதநாயகம்



திரு.எம்.மருதநாயகம் அவர்கள், திண்டுக்கல்லில்-முத்து மாமண்டி பிள்ளை, நாகம்மாள் தம்பதியினருக்கு 27-8-1924ல் மகனாகப் பிறந்தார். ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளார்.

எட்டாம் வகுப்புவரை படித்தவரான சுப்புலட்சுமி, 1948ல் இவருக்கு மனைவியாக வாய்த்தார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில், பல போராட்டங்களிலும் பங்கேற்று இவர் 1943-ல் 6 வாரங்கள் பாளையங்கோட்டை மத்திய சிறையிலடைக்கப்பட்டார். பல தண்டனைகளை அனுபவித்த இவர், மாநில அரசு பென்சன் பெறும் தியாகியாவார்.

### திரு. சோமசுந்தரம் பிள்ளை



திரு.சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், திண்டுக்கல்லில் 1905-ல் பிறந்தார்; தேசப்பற்றில் சிறந்தவர்.

1930-ல் இவருக்கும் நாகரத்தினம் என்பாருக்கும் திருமணம் நடந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டு-தஞ்சாவூர், வேலூர், கேரளத்திலுள்ள கண்ணனூர் ஆகிய இடங்களில் சிறைவாசம் அனுபவித்தார். மாநிலப் பென்சன் பெறும் தியாகியான இவர் 1972ல் இந்திய சுதந்திர வெள்ளி விழாவையொட்டி தாமிர பட்டயம் விருது பெற்றவராவார்.

### திரு. பழனியப்ப பிள்ளை



திரு.பழனியப்ப பிள்ளை அவர்கள் 14.5.1919ல் திண்டுக்கல்லில், காளியப்பபிள்ளை வீராயிஅம்மாள் தம்பதியர்க்கு மகனாய்ப் பிறந்தவர். தேசப்பற்று மிகுந்தவர். 1941-ல் காந்தியார் ஆணைப்படி தனிநபர் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு கைதாகிச் சிறைத்தண்டனை அனுபவித்தவர்.

1942-ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்காகத் தீவிரப் பிரச்சாரம் செய்து தலைமறைவாக இருந்தவர் இவர். 5-ஆம் வகுப்புவரை படித்திருக்கிறார்.

1949ல், கிருஷ்ணம்மாளை மணந்துகொண்டார். மாநில பென்சன் பெறும் தியாகிகளுள் இவரும் ஒருவர்.

### திரு. அ.அகமது ஹசான்



திரு.முகமது ஹசான் அவர்கள், 1924ல் திண்டுக்கல்லில் பிறந்தவர்.

1969ல், வாஹிலாபேகம் என்பாரை மணந்த இவர் தந்தையார் அகமது ராவுத்தர்; தாய் முகமது பாத்திமா பீவி.

ஆகஸ்டுப் புரட்சி, வெள்ளையனே வெளியேறு இயக்கம், 1943ல் காவல் நிலையம் மீதிருந்த கொடியை அகற்றுதல், தொலைத்தொடர்பு துண்டிப்பு போன்றவற்றால் கைதாகிச் சிறை சென்றவர்.

1943ல்-தீவிரப்போராட்டத்தில் ஈடுபட்டு, பாளையங்கோட்டை மத்திய சிறையில், பழம்பெரும் தியாகி பழனி பி.எஸ்.கே.இலட்சுமிபதிராஜீ அவர்களுடன் 1.5 மாதம் கடுஞ்சிறை ஏகினார். மாநில பென்சன் பெறும் தியாகியாவார் இவர்.

### திரு. டி.பி.கே.எஸ்.முருகேசன்



திண்டுக்கல்லில் 11.7.1923ல் பிறந்த இவர், 5வது வரை படித்தவர். 1941 காந்திஜியின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு, மதுரை மத்திய சிறையில் 2 மாதம் தண்டனை பெற்றார். 1942-ல் ஆகஸ்ட்டுப் புரட்சியாளராக, போலீசாரால் கைது செய்யப்பட்டு, வேலூர் மத்திய சிறையில் பழனி தியாகி டி.பி.கே.எஸ்.இலட்சுமிபதி ராஜூ அவர்களுடன் ஒரு மாதம் சிறையிலிருந்த பொழுது, இவருடைய இடது கண்ணில் கோளாறு ஏற்பட்டு, உரிய மருத்துவ சிகிச்சையின்றி இடதுகண் பார்வையற்ற வராகத்தான் சிறையிலிருந்து விடுதலை பெற்றார். தமிழ்நாடு அரசின் தியாகிகள் பென்சன் பெற்று வருகிறார்.

தொகுப்பு: **இரா.பரதன்**, எம்.ஏ.,

### கடலில் மூழ்கி இறந்தவர் குடும்பத்திற்கு ரூ.15,000 உதவி

**சென்னை, கிருஷ்ணாம்பேட்டையில் வசிக்கும் திருமதி கிஸ்மத் பீ என்பவரின் மகன் வாஜித் (வயது 18), தனது நண்பனுடன் சேர்ந்து கடலில் நீராடியபோது மூழ்கி இறந்துவிட்டான்.**

**இறந்த வாஜிதின் வயதான தாயாரின் வறுமை நிலையைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 15,000 ரூபாய் நிவாரண உதவியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

# பேரறிஞர் அண்ணா நினைவு நாளையொட்டி

## 1998, பிப்ரவரி 3-ஆம்தேதி முதல் 10-ஆம்தேதி வரை

# ஏழை, எளியோர்க்கு இலவசப் பட்டா



★ 1990-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோதுதான், முதன்முதலாக, இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டம், ஒருசில குறிப்பிட்ட வகுப்பினருக்கு மட்டுமே பொருந்தும் என்றிருந்ததை மாற்றியமைத்து, வறுமைக் கோட்டின் கீழுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்த அனைத்து வகுப்பினருக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

★ இந்தத் திட்டம் தற்பொழுது, மீண்டும் கலைஞர் ஆட்சியில், கிராமப்புறங்களில் வாழும் இதர பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், அனைத்து ஏழை, எளியவர்களுக்கும் பொதுவான அணுகுமுறை தேவை என்ற அடிப்படையில் முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த, வறுமைக் கோட்டுக்குக் கீழ் கிராமப்புறங்களில் வாழும் குடும்பங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

★ இந்தத் திட்டத்திற்கென 1997-98ஆம் ஆண்டிற்கு மொத்தம் 18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ மேலும் 1997-98ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்திற்காக 15.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ தனியார் பட்டா நிலங்களை வாங்கி வீட்டுமனைகளாக வழங்கும் இந்தத் திட்டத்தோடு, அரசு புறம்போக்கு நிலங்களில் ஆட்சேபனை இல்லாத இனங்களில் ஆக்கிரமிப்புகளை ஒழுங்குபடுத்தி வீட்டு மனைகளாகவும், சாகுபடி நிலங்களாகவும் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.




★ இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து, ஏழை எளியோருக்குப் பெரும் அளவில் இலவசவீட்டுமனை மற்றும் சாகுபடிநிலம் பட்டா வழங்குவதற்குத் தேவையான சட்டபூர்வ நடவடிக்கைகளை 1997 நவம்பர் மாதம் முதல் 1998 ஜனவரி மாதம் முடிய முழுமைப்படுத்தி, பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி 1998, பிப்ரவரி 3-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை இலவசப்பட்டாக்கள் வழங்குவதற்குரிய துரிதமான நடவடிக்கைகளை அனைத்து மாவட்ட ஆட்சியரும் மேற்கொள்வர்.

பழம்பாடல்-புதுப்பார்வை

# ஒரு சமூக விஞ்ஞானியின் கோபம்

எங்கே பணம் இருக்கிறதோ அங்கே சைத்தான் இருப்பான். எங்கே பணம் இல்லையோ அங்கே அதைவிடப் பெரிய சைத்தான் இருப்பான். இருந்தால் கெடுக்கும், இல்லாவிட்டால் இன்னும் கெடுக்கும்-இப்படி ஒரு பொருள்! இதற்குப்பேர்தான் 'பொருள்'!

*'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'*

இது பொய்யில் புலவன் வாக்கு.

ஒரு பொருள் ஆகத் தகுதியில்லாதவர்களையும் ஒரு பொருளாக மதிக்கவைப்பது பொருள்.

வாழ்க்கை முழுதுமே ஒரு பொருள்தேடும் முயற்சியாகப் போய்விடுகிறது. அது கிடைக்காதபோது வறுமை வந்து சேர்கிறது. இளமையைத் தின்று, முதுமையைக் கொன்று தன் பெருமையை நிலைநாட்டிக்கொள்கிறது வறுமை.

ஒவ்வொரு உயிரும் இன்னொரு உயிரின் இடத்தைப் பறிக்கப் போட்டியிடுகிறது; காலத்தைப் பறிக்கப் போட்டியிடுகிறது. பொருளைப் பறிக்கப் போட்டியிடுகிறது.

நாகரீகம் வளரவளர, காலண்டரில் தேதித்தாள் கிழிபடக்கிழிபட இந்தப் போட்டி வலுவடைகிறது. போட்டி போராட்டமாகிறது; போராட்டம் போராகிறது. உலக வரலாறு முழுவதுமே இந்தப் போட்டியின் கதைதான்!

போரின் கதைதான்! போராட்டத்தின் கதைதான்!

வாழ்க்கைப் போரில் தோற்றுப் போகிறவன் வறுமையடைகிறான். வறுமையடைகிறவன் இரவலன் ஆகிறான். இரவலன் கண்டவரிடம் கைநீட்டுகிறான். காற்று கூட அவனைக் கண்டு அச்சப்படுகிறது-எங்கே, தன்னிடம்கூட கைநீட்டி எதையாவது கேட்டுவிடுவானோ என்று!

புகை நுழையாத இடத்தில்கூட வறுமையாளனின் கை நீள்கிறது. அவனுடைய மொத்த உடலுமே ஒரு கை தானோ என்று நினைக்க வைக்கும் அளவுக்கு, அந்தக் 'கையாலாகாதவன்'கைநீட்டுகிறான்.

'சே! இப்படியும் ஒருவாழ்வா'

இது-தன்னிடம் கைநீட்டிய ஒருவனைப் பார்த்து உலகச் சிந்தனையாளன் ஒருவன் உதிர்த்த சொற்கள்.

வறுமைக்கு என்ன வயதாகிறது? இதுவரை நமக்குத் தகவலே இல்லை. இந்த விஷவிருட்சத்தின் வேர்களைத்தேடி விஷம் வைக்கும் முயற்சிக்கு வெற்றியே இல்லை.

மனிதப்பூண்டு தலைநீட்டிய போது மண்ணில் புல்பூண்டு நிறைய இருந்தது. வேளாண்மை தெரியாத அந்தக் காலத்திலும் வேண்டியது கிடைத்தது. அப்போதுகூட ''ஒருவர் உணவை ஒருவர் பறிக்கும்' கொடுமை நிகழ்ந்திருக்கக் கூடும்.

ஆகவே, உலக வரலாறு என்பதே பசியின் வரலாறு என்று பகரலாம். சங்ககாலத்தில் இந்தக் குரல் அழுத்தமாகவே ஒலித்தது. 2000 ஆண்டு தமிழக வரலாற்றில் இந்தக்குரல் இடைவிடாது ஒலித்துக்கொண்டேயிருந்தது.

அதனால்தான் தாய்மண்ணில் கால்வைத்த வெளியூர்த் தமிழன் கலைஞரின் எழுத்தோவியமான 'பராசக்தி' திரைப்படத்தில் இப்படிக் கேட்டான். ***'தமிழ்நாட்டின் முதற்குரலே இதுதானா ?'*** நீளமான கேள்வியல்ல! ஆனால் ஆழமான கேள்வி!

வறுமையாளனைப்பார்த்து 'சே! இப்படியும் ஒருவாழ்வா?' என்று எண்ணி நைந்த அந்த உலகச் சிந்தனையாளன் ஒரு மாபெரும் ஞானி!

நாம் பேசுகிற இந்த ஞானியின் சிந்தனை பாவத்தின் மறுபதிப்பல்ல சமுதாயக் கோபத்தின் மறுபதிப்பு. 2000 ஆண்டுகளுக்குமுன் அவன் ஒரு சாபமிட்டான் யார்மீது?



படைத்தவன்மீது! இந்த உலகத்தைப் படைத்தவன்மீது!

பிச்சையெடுத்தும் உயிர் வாழ வேண்டியிருக்குமானால், இந்த உலகத்தை இயற்றிய படைப்பாளனும் இதே மாதிரி பிச்சையெடுத்துக் கெடுவானாக!

அது அந்த உலகச் சிந்தனையாளன் இட்ட சாபம்!

ஒரு பகுத்தறிவாளனின் கோபமாக, ஒரு மார்க்சிய வாதியின் கோபமாக-இந்த நூற்றாண்டில் மட்டுமே நாம் பார்ப்பது இந்தக் கோபம்! 2000 ஆண்டுக்கு முன்னால் இப்படி ஒரு கோபக்குரல் ஓர் உலக அதிசயம்! எந்தச் சிந்தனையாளனும், எந்தத் தேசத்திலும் இந்தக் குரலை எழுப்பியதில்லை.

வறுமை, விதியின் பரிசாகவே விளக்கப்படுகிற நிலை இந்த நூற்றாண்டிலேயே இன்னும் இருக்கிறபோது, **"அப்படி விதித்த விதியாளன் வீழ்வானாக!''** என்று 20 நூற்றாண்டுகளுக்கு முன்பே முழக்கியவன் புரட்சிக் காரனல்லவா!

***'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக உலகியற்றியான்'*** என்பது அந்தப் புரட்சிக்காரனின் குரல் இந்தக் குரலைத்தான், தமிழ் 'குறள்' என்று கூறுகிறது.

இரண்டுவரிகளில் கொப்பளிக்கும் அவனது கோபம், உலகத்தை இயற்றியவனைச் சுட்டதோ, இல்லையோ, நம் உள்ளத்தைச் சுட்டது. அந்தக் குரலில் அல்லது குறளில் கொப்பளிக்கும் உணர்ச்சிகள்தாம் எத்தனை! எத்தனை!

அந்த உணர்ச்சிகள் பலரைத் தொட்டன! சிலரைச் சுட்டன! எல்லோரையும் அது தொட்டிருந்தால் இந்த உலகம் உருப்பட்டிருக்கும்!

தமிழகத்தில், அண்ணா என்னும் அன்பு நெஞ்சை அது தொட்டது. அதற்குப் பிறகு அவரது தம்பி கலைஞரை அது தொட்டது.

அதன் விளைவு!

பிச்சைக்காரர் மறுவாழ்வுத்திட்டம்.

கனன்று கொண்டிருந்த அந்த வறுமைத்தீயை அகற்றிட தமிழாய்ந்த, பொருளியல் நிலை ஆய்ந்த முதலமைச்சர் கலைஞர் 70களில், அண்ணாவின் அருமந்தத்தம்பியாக ஆட்சிக்கட்டில் ஏறிய அவர், மாவட்டத்திற்கொன்றென்று பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதிகளைக் கட்டினார்.

மேலே குறிப்பிட்டவாறு, தனிநபரின் வறுமைக்கு பிச்சை, வடிகால்; அதுவே ஒரு குடும்பத்தின், சமூக நிலையில் வறுமையென்றால்... இதைச் சிந்தித்தது மட்டுமல்ல செயல்படுத்த முனைந்தார் கலைஞர், வறுமைநிலையகற்ற 'நலிவுற்றோர் நலவாழ்வு' என்னும் உயரிய சிந்தனையின் செயலாக்க விளைவாக முகிழ்த்தவை பல, முதியோர் உதவித்தொகைக்கு குறியீடு என்ற அளவைத்தவிர்த்து, தகுதிபடைத்த அனைவர்க்கும் வழங்குதல், அனாதையாக்கப்பட்ட குழந்தைகளின் நல்வாழ்விற்குக் 'கருணை இல்லங்கள்', சமூகத்தால் கைவிடப்பட்ட கைம்பெண்களுக்கு உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவித்தொகை, சாலைவிபத்தில் மரணமடையும் எளியோரின் குடும்பத்தார்க்கும், தென்னையிலிருந்து விழுந்து மரணமெய்தும் தொழிலாளர்கள், கட்டட பணியில் விபத்தில் இறக்கும் தொழிலாளர்கள், கடலில் மீன்பிடிக்கச்சென்று மறைவெய்தும் மீனவர்கள்-இவர்களது குடும்பத்தார்க்கும் ரூ.10,000 நிதியுதவி என்ற நோக்கில், 'பிச்சைக்காரர்' எங்கு உருவாகக்கூடுமோ அதை அங்கேயே அடைத்துவிடும் சமூகச் சிந்தனைகள் - இவைகள் துணைக்கண்டத்திற்கே வழிகாட்டுதலாய் கலைஞர் அவர்களின் அயராப்பணியில் தொய்வின்றி, செயலாக்கம் பெறுகின்றன. எண்ணியவண்ணம் இந்தப் பணிகள் ஈடேறுமேல் தமிழ் மண்ணில் பிச்சைக்காரர் என்ற நிலை முன்பிருந்ததா என்று 21ஆம் நூற்றாண்டு வினா எழுப்புமோ?

சமூகச் சிந்தனையாளன் ஜனநாயக நாட்டின் அரசுக் கட்டிலில் அமர்கிற போதுதான், புரட்சிச் சிந்தனைகள் செயலாக்கம் பெறும்.

பொருள், அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கும் இந்தப் பூமிப்பந்தில், குறளின் பொருளதிகாரம் அதிகாரம் பெறவேண்டும்.

இந்தக்குறளைக் கொடுத்தவர் யார்?

*அவர் ஒரு சமூக ஞானி!*
*-இல்லை; சமூக விஞ்ஞானி!*
*பெயர்-திருவள்ளுவர்*

## மீனவர் உதவித்தொகை

மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் மழைக் காலங்களில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல இயலாத நிலையை உத்தேசித்து-மீனவர் ஒவ்வொருவரும் ரூ.360 அரசாங்கத்திற்குச் செலுத்தினால், அதே அளவு தொகையான ரூ.360 மாநில அரசின் சார்பிலும், மற்றும் ரூ.360 மத்திய அரசின் சார்பிலும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.1080 ஒவ்வொரு மீனவருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின்படி 1991-92ஆம் ஆண்டில் 76,610 மீனவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து இந்தப் பயனைப் பெற்றார்கள். ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் - மத்திய, மாநில அரசுகள் வழங்கிடும் நிதி உதவியைப் பெறும் நோக்கத்தோடு, பினாமிகள் பெயரில் பல பெயர்கள் சேர்க்கப்பட்டு அவர்கள் பெயரால் இந்த உதவி வழங்கப்பட்டதன் காரணத்தால், இந்த உதவி பெறுவோரின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து 96-97இல் ஒரு இலட்சத்து 81 ஆயிரம் பேருக்கு இந்த உதவித்தொகை வழங்கப்பட்டதாகக் கணக்கிலே பெற்று அதிலே மிகப் பெரிய மோசடி நடைபெற்றது.

மீனவரல்லாத பலர் இத்திட்டத்திலே சேர்ந்து பயன்பெறுவதை அறிந்த இந்த அரசு மீண்டும் பொறுப்புக்கு வந்ததும் உண்மையான மீனவர்கள் மட்டும் பயன்பெறும் வகையிலே உறுப்பினர்களைச் சேர்த்ததன் காரணமாக இந்த ஆண்டு ஒரு இலட்சத்து 19 ஆயிரம் பேர்கள் மட்டுமே உறுப்பினர்களாகச் சேர்ந்து இந்தப் பயனை அடைந்திருக்கின்றனர்.



இதிலே எந்த மீனவர்களுக்கும் தொகை கொடுக்கப்படவில்லை என்று புகாரே கிடையாது. இந்த திட்டத்திற் கென்று உள்ள வழி காட்டும் நெறி முறைகளின்படி தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

துறை அலுவலர்கள் மீனவர்களை இத்திட்டத்தில் சேர தொடர்ந்து வற்புறுத்திய போதிலும், ஒரு சிலரின் தலையீடு மற்றும் தவறான வழிகாட்டுதல் காரணமாக, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் இத்திட்டத்தில் மீனவர்கள் அதிக அளவில் சேராததால் திட்டத்தின் பயனைப் பெறத் தவறிவிட்டனர்.

கடந்த ஆண்டு மைய அரசு ஆரம்ப காலத் தயக்கத்திற்குப் பின் இத்திட்டத்தில் தன் பங்காக ரூ.6.35 கோடி வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளது சரியான தகவல் அல்ல. உண்மை என்னவெனில், கடந்த ஆண்டும் மைய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி அதன் பங்கினையும் சேர்த்து மாநில அரசே வழங்கியது. இந்த ஆண்டும் மைய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி மாநில அரசு மைய அரசின் பங்கையும் சேர்த்து நிவாரணம் வழங்கியுள்ளது.

# ஒரு கூட்டுறவு இயக்கம்!! ஜனநாயக அமைப்பின் உயிர்நாடி



'கூடிவாழ்ந்தால், கோடி நன்மை!' என்பது மனித சமூகத்தின் ஒற்றுமை உணர்வினை வலுப்படுத்திடும், ஆக்கப்பூர்வமான சிந்தனையை உள்ளடக்கிய ஒரு முதுமொழியாகும். அதிலும், குறிப்பாக, மக்களாட்சியை அடிப்படையாகக் கொண்டுள்ள அரசமைப்பில், 'கூட்டுறவு இயக்கம்' என்பது ஒரு பொருளாதாரக் கோட்பாடாகும். ஏனெனில், நடுத்தர, ஏழை எளிய மக்களை அதிகமாகக் கொண்டிருக்கின்ற, உயிரைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவாவது உழைத்துத்தான் ஆகவேண்டுமென்ற நிர்ப்பந்தம் நிலவிவருகின்ற, நம் இந்தியாவைப் போன்ற நாடுகளுக்கு, 'கூட்டுறவு இயக்கம்' என்பது கிடைத்தற்கரிய ஒரு வரப்பிரசாதமாகும்.

முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஓர் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுகிறார்: ''கூட்டுறவு என்பது காகங்கள் கூடி இருப்பதைப் பகிர்ந்து கொண்டு போவது அல்ல. கூடுவது காகங்கள் கூடுவதைப் போல இருக்கக்கூடாது. கூட்டுறவு மேகங்கள் கூடுவதைப் போல இருக்கவேண்டும். மேகங்கள் கூடுவது மழையைத் தருவதற்காக, மக்களுக்கு நன்மைகளைக் கொடுப்பதற்காகக் கூட்டுறவு இருக்க வேண்டும்''. இதனைக் கூட்டுறவுக் கோட்பாட்டிற்குக் கிடைத்திட்ட ஒரு விளக்கமாகவே கருதலாம். மனோதத்துவ ரீதியாக, நம் மக்களின் 'மனோபாவத்தை' எதார்த்த அடிப்படையில் ஊன்றிக் கவனிப்போமானால், கூட்டமாகச் சேருகிற பொழுது, அங்கே வீரம் விளையாடும்; விவேகங்கள் சரளமாக்கப்படும்; தத்துவங்கள் பீறிட்டுக்கிளம்பும்; உணர்ச்சிகள் காட்டாற்று வெள்ளமாய்க் கரை புரண்டோடும். ஆனால், நடைமுறையில், அத்தகையவற்றினால், ஏற்பட்ட தாக்கம் என்ன? பின்விளைவு என்ன? என்று ஆழ்ந்து நோக்கின்-முடிவுகள் எய்தப்படாமலேயே பிரிந்து செல்கின்ற அந்த வழக்கத்தைச் சுட்டிக்காட்டவே, **கலைஞர்** - 'கலையும் காகங்கள்' என்றாரோ?

ஆனால், பொருளாதார நிலைப்பாட்டில், அல்லாடிக் கொண்டிருக்கின்ற, உழைக்கத் தயாராயிருக்கின்ற மக்களுக்குக் கிடைத்திருக்கின்ற ஒரு நம்பிக்கையாக, 'தனிமை' என்ற 'சுய பச்சாதாபத்தை' களைந்திடக் கிடைத்திட்ட ஒரு பற்றுக்கோளாக அது விளங்குகிறது. ஒன்றுபட்ட ஒரு குழுவின் ஒட்டுமொத்த முயற்சிக்குக் கிடைத்திடப்பெற்ற ஒரு வெற்றிக்கனிதான் கூட்டுறவு இயக்கமாகும்.

கூட்டுறவுச்சிந்தனை என்பது 'நான்-என்னுடையது' என்ற குறுகிய மனப்பான்மையை அகற்றி, நாம்-நம்முடையது என்ற ஒரு அகன்ற-விரிந்த மனப்பாங்கை - எய்திடச் செய்யும் ஒரு சமூக எத்தனிப்பாகும். இதை, ஒரு மனதோடு நம் இதயத்தில், பதியவைத்து, வினையாற்றினால் அது உரிய வெற்றியைப் பெற்றுத்தரும்.

ஆனால், நமது சமூக அமைப்பில், பொருளாதார நோக்கில், உற்றுநோக்கின், பெரும்பான்மையான கூட்டுற அமைப்புகள், கூடித்தோன்றின என்பதைவிட, கூட்டப் பட்டதால் ஏற்பட்ட அமைப்புகளாகவே, ஒரு காலகட்டத்தில் விளங்கி வந்தன.

30 அல்லது 40 ஆண்டுகளுக்கு முன்னால், வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பார்த்தால், கிராமிய அளவில், விவசாயக் கூட்டுறவுச் சங்கம் என்பது பெருந்தனக் காரர்களின், ஒட்டு மொத்த ஆளுகையின்கீழ் தான் இருந்துவந்தது. விவசாய, நடுத்தரவர்க்கத்தினர், கூட்டுறவில் அங்கம் வகித்தல் என்பதை ஒரு தேவையற்ற செயல் என்றே கருதினர். ஆனால், காலம் செல்லச்செல்ல, கற்றலிலும் அல்லது கேட்டதிலும் ஏற்பட்ட விழிப் புணர்ச்சியினால், வளர்ந்துவரும், பொருளாதாரத் தேவைக்கேற்றவாறு, பொருளாதார நிலையில், நிலைப்படுத்திக் கொண்டேயாக வேண்டுமென்ற உந்துதல்களின் விளைவாகத் தற்பொழுது 'கூட்டுறவு இயக்கம்' ஒரு புதிய பரிணாமத்தைப் பெற்றிருக்கிறது, என்பது மிகையன்று. தற்பொழுது ஒரு சராசரிக் குறுவிவசாயிகூட, வேளாண் தொழில் செய்பவராக - ஆடு வளர்ப்பவராக, கறவைமாடுகள் வளர்த்துப் பால் கறப்பவராக, கோழி வளர்ப்பவராக, இத்தகைத்தான, ஏதாவது ஒரு நிலையில் கூட்டுறவில் அங்கம் வகித்திடும் நிலை உருவாகியுள்ளது. இத்தகு, ஒரு ஆரோக்கியமான மாற்றம் வரவேற்கத்தக்கதே. நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில், மனித உழைப்பை, மனித நேரத்தை வீணாக்கிடல் கூடாது என்ற தெளிவும், சிந்தனையும், அடித்தளநிலை வரை பரவலாகியுள்ளது என்பது உண்மையே.

வளர்ந்துவரும் அறிவியல், பொருளாதார மாற்றத்திற் கேற்ப, நடுத்தர அல்லது பெரிய விவசாயி, விவசாயக் கருவிகள் பெற, கிணறு தோண்ட அல்லது ஆழப்படுத்த, விசை இறைப்பான் பயன்படுத்த, தரிசுநிலத்தை மேம்படுத்த, அதைப் பழமரத்தோட்டமாக்க, இப்படிப் பல்நோக்கிலும், 'கூட்டுறவு அமைப்புகளின் தேவை என்பது தவிர்க்க இயலா ஒன்றாக ஏற்றம் பெற்றிருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

பொருளாதார நிலையில், எவ்வகைப் பிரிவாக இருந்தாலும், அதில் கூட்டுறவானது ஒரு 'உயிரோட்டமான' - உறவாக, ஊடுருவியிருப்பதை நம்மால் கண்கூடாகக் காணமுடிகிறது. அரசு நிகழ்ச்சிகளில், மனுநீதி நாட்களில், மக்கள் குறை தீர்க்கும் நாட்களில், அமைச்சர் பெருமக்களின் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் அல்லது

அவர்கள் பங்கு கொள்கின்ற பொதுநிகழ்ச்சிகளில், பொதுவிநியோகக் கூட்டுறவுக் கிளையிலிருந்து, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் வரை, தத்தமது குடியிருப்புகளுக்கு அவசியம் தேவை என்று கோருகின்ற விண்ணப்ப மனுக்கள்தான் அதிக அளவில் வரபெறுகின்றன.

இது இவ்வாறிருக்க, அமைப்பு சாரா நிலையில், உழைப்பை மட்டுமே நம்பியிருக்கின்ற, சாமானியர்களும் தங்களுடைய உழைப்பும், பொருளீட்டலும் ஒரு வரைமுறைக்குள் உட்படுத்தப்பட்டாக வேண்டும்; ஆதாரப்பிடிப்பற்ற தங்களது நிலையினை, ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டியதென்பது அவசியமான ஒன்றே என்பதை உணரத் தலைப்பட்டுள்ளனர். அதனடிப்படையில், இடைவிடா முயற்சிகளை மேற்கொண்டு வெற்றியைப் பெற்றுள்ளனர் என்பதற்கு எவ்வளவோ சான்றுகள் உள்ளன.



கூடைமுடைவோர் கூட்டுறவுச்சங்கம், மூங்கில்பாய் பின்னுவோர் கூட்டுறவுச்சங்கம், கோரை-ஓலைப்பாய் பின்னுவோர் கூட்டுறவு சங்கம், பிரம்பு நாற்காலி தயாரிப்போர் கூட்டுறவுச்சங்கம், தச்சுத்தொழில் கூட்டுறவுச்சங்கம், கருமார் கூட்டுறவுச்சங்கம், தீப்பெட்டி தயாரிப்போர் கூட்டுறவு சங்கம், இன்னும் ஆழ்ந்துபார்த்தால் மிகமிகச் சாமானிய சுமைதூக்குவோர் நிலை வரை கூடப் பல சங்கங்கள் உருவாயிருக்கின்றன.

நம்நாட்டில், கூட்டுறவு என்பது அமைப்பு ரீதியாக ஒரே துறையில் மட்டும் சுற்றிப் பின்னப்பட்டதன்று; ஏனெனில், அது விவசாயம், தொழில்துறை, சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கதர்வாரியம், கைத்தொழில் வாரியம், பனைப்பொருள் வாரியம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற் படுத்தப்பட்டோர் நலத்துறை, கைத்தறித்துறை, கால்நடைத்துறை, சர்க்கரைத்துறை, மீனளத்துறை, உப்பு உற்பத்தி போன்று பல்வேறு வளர்ச்சித்துறைகளின் பொருளாதார மேம்பாட்டின் அச்சாணியாக, கூட்டுறவுத் துறை பரிணமித்து நிமிர்ந்து நிற்கிறது என்பது உண்மையே. தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு நிலைகளில், அது சோதனை முறையிலும் முயலப்பட்டது என்பதற்கும், பலசான்றுகள் உள்ளன. 1971-72ல் 'தமிழ்நாளிதழ்களின் முன்னோடி' என வர்ணிக்கப்பட்ட காலஞ்சென்ற திரு.சி.பா.ஆதித்தனார் அவர்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அமைச்சரவையில், கூட்டுறவுத்துறை அமைச்சராக அங்கம் வகித்தபொழுது ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தினார். தனித்தனியாகக் கிணறு தோண்டி விவசாயம் செய்திட இயலாத ஏழ்மைநிலையிலிருந்த, சிறு மற்றும் குறுவிவசாயிகளை ஒருங்கிணைத்து, கூட்டுறவில் ஒரு புதிய முயற்சியாக, 'நீர்ப்பாசனக் கூட்டுறவு சங்கம்' (Irrigation Society) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அம்முயற்சி உரிய வெற்றியைப் பெற்றிருப்பின், தமிழகத்தில், அது 'பசுமைப் பொருளாதார'ப் புரட்சிக்கு வித்திட்டதாக அமைந்திருக்கும். ஆனால், 'நம்முடைய கிராமப்புற மூட வழக்கத்தில், அதாவது நிலத்தைவிட, நிலப்பதிவுப் பத்திரத்தைப் போற்றிப் பாதுகாக்கும் தேவையற்ற ஒரு மனப்பான்மை'யின் விளைவாக அது வெற்றியைத் தரவில்லை; அது, கூட்டுறவு இலட்சியத்தின் தோல்வியன்று; விடாப்பிடியான நமது கிராமமக்களின் தவறான போக்கு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்திடா நிலை போன்ற குறுகிய போக்கிற்குக் கிடைத்த தோல்வியாகவேதான் அதனைக் கருத முடியும்.

ஆனால், கூட்டுறவு முயற்சியில், இந்தியாவிற்கே வழிகாட்டும் பல வெற்றிச் சரிதங்களும் நம் தமிழகத்தில் படைக்கப்பட்டுள்ளன. விருதநகர் மாவட்டம் இராஜ பாளையத்தை ஒட்டிய ஒரு தொலைதூரக் கிராமம் 'தளவாய்புரம்' - அப்பகுதி மக்கள், மருத்துவ சிகிச்சைக்காக இராஜபாளையம் வரை, 12 கி.மீ. தூரம் வந்தாக வேண்டும். அரசின் சார்பில், சுகாதார நிலையம் அமைக்க அரசின் விதிகளில் இடம் பெறாநிலை; இது அன்றாடப் பிரச்சினையாக உருவெடுத்தபொழுது, தனியார் மருத்துவர்களை அழைத்துப் பார்த்தனர்; அவர்களும் நீண்டநாள் தங்குவதில்லை; எனவே, இந்தச் சவாலை, எதிர்கொள்ள ஊர் கூடியது; பல்வேறு வாதப்பிரதி வாதங்களுக்குப் பிறகு, எல்லாரும் பங்குத் தொகை செலுத்தி, கூட்டுறவு அமைப்பில், ஒரு மருத்துவமனையை உருவாக்கலாம் என்று முடிவெடுத்தனர். கூட்டுறவுத் துறையை அணுகினர்; வெற்றி கிடைத்தது. மருத்துவமனை, கூட்டுறவுக் கடன் உதவியில் உருவானது; தற்பொழுது, அக்கூட்டுறவு மருத்துவமனையில், இருபால் மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். 24 மணி நேர சேவை; சொந்தக் கட்டடம் படிப்படியாக கட்டப்பட்டதோடு, எக்ஸ்ரே' வரை நவீனக் கருவிகள் அறுவைச் சிகிச்சைக்கென, பிரசவ விடுதியோடு, நவீனக்கூடம், தங்கி மருத்துவம் மேற்கொள்ளப் படுக்கை வசதிகள், குறைந்த கட்டணத்தில், நிறைந்த சேவை; மட்டுமல்லாது, கூட்டுறவுக் கடனும், உரிய தவணையில், ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தப்பட்டது. அப்பகுதி மக்கள் தங்களது சொந்த மருத்துவமனையாக



அதனையேற்று, உரிமையோடு சிகிச்சை பெறும் உன்னதநிலை. இந்தியத்துணைக் கண்டத்திற்கே வழிகாட்டும் 'கூட்டுறவு முயற்சியால்'-இது ஒரு புதிய அத்தியாயம்.

இதே போன்று, கூட்டுறவுக் கொள்கையில் பிரிதொரு புதிய முயற்சியாக, அருகிவரும் 'இராஜபாளையம் வேட்டை நாய்களை' கால்நடை மருத்துவ மேற்பார்வையில், 'நாய் வளர்ப்போர் கூட்டுறவு சங்கம்' அமைக்கும் ஆரம்ப ஆயத்த பணிகள்; அதோடு, இராஜபாளையம் நகரில் கூட்டுறவு முடி திருத்துவோர் சங்கத்தின் சார்பில், ஆண்களுக்கென ஆடம்பர அழகு சாதன நிலையங்கள். இப்படி எத்தனையோ எண்ணிலடங்காச் சாதனைகள்!

மக்களின் விழிப்புணர்வு மற்றும் எத்தனிப்புகளின் விளைவாக, கூட்டுறவு இயக்கம், எதார்த்த நிலையில், ஒரு தவிர்க்க இயலா அங்கமாகிவிட்டது என்றே கருதலாம். எனவே, கூட்டுறவு அமைப்புகளில் கூட, பல்வேறு பயனாளிகள் எளிதில் அணுகக்கூடிய வகையில் உருமாற்றங்களும் பெறத்தான் செய்தன. நில அடமான வங்கி (Land Mortgage Bank) என்ற அமைப்பு, நிலவள வங்கியாக (Land Development Bank) மாறித் தற்பொழுது, வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (Agriculture and Land Development Bank) ஆகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதோடு, தொடக்கத்தில் நிலமேம்பாடு மற்றும் கிணறு தோண்டக் கடனுதவி என்ற நிலையிலிருந்து விரிவுபட்டு, நிலவள வங்கியான போது, அவைகளோடு மட்டுமல்லாது விரிவடைந்து, கருவிகளையும் வாங்க, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு பெருமளவில் உதவியது.

கடனுதவி என்ற நிலையிலிருந்து, வளர்ந்துவரும் மக்களின் தேவைக்கேற்ப, விவசாயம் சார்ந்த ஆட்டுப்பண்ணை, பால்பண்ணை போன்றவற்றோடு ஊரகப்பகுதிகளில் விவசாயம்சாராச் சிறுதொழில் வளர்ச்சிக்கும் உதவிகளை வழங்கி ஊரகப்பகுதிகளின் பொருளாதார மேம்பாட்டிற்குப் பேருதவி புரிந்து வருகிறது.

இதேபோன்றுதான் கிராமங்களில் கூட்டுறவு சங்கங்களாக இருந்தவை தற்பொழுது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளாக மாறி, கிராமிய அளவில், அதிலும், குக்கிராமங்கள் வரை வங்கிச் சேவையை அறிமுகப்படுத்தி, கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டை மையமாக வைத்துச் செயலாற்றி வருகின்றன.

இருப்பினும்கூட, வளர்ந்து வரும் மேலை நாடுகளின் கூட்டுறவு நாட்டத்தை ஒப்பு நோக்குகையில், நம் நாட்டில் அது அநேக வெற்றிப் புள்ளிவிவரங்களைக் காட்டினாலும் முழுப் பயனைப்பெற இன்னும் முன்னேற மென்மேலும் தொடர் முயற்சிகள் அவசியமே. ஏனெனில் அங்குள்ள, அறிவார்ந்த மக்கள், கிராமிய அளவில்கூட, எல்லாவற்றிற்கும் அரசுதான் பொறுப்பு என்று நம் மக்களில் பெரும்பான்மையினரைப் போல ஒதுங்கி விடுவதில்லை. மாறாகப் பொதுநோக்கில் சிந்திக்கின்ற மனப்பான்மை அங்கு வேரூண்டப்பெற்று, ஆண்டுகள் பலவாகிவிட்டன; அதனால்தான், அங்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல், பொது அரங்குகளை உருவாக்குதல், பல்பொருள் அங்காடிகளைத் தாங்களே கட்டி நிர்வகித்தல் போன்று அரசின் திட்டங்களுக்கொப்பத் தாங்களே திட்டமிட்டு, தாங்களே உருவாக்கி, தாங்களே பயன்படுத்தி, பொதுநல அமைப்புகளையும் உருவாக்கிக் கொள்கிறார்கள் என்று பல வெளிநாட்டுச் சஞ்சிகைகளின் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. இது கூட்டுறவின் வெற்றியா? அல்லது மக்களாட்சி என்ற மகத்தான இலட்சியத்தின் மாசற்ற வெற்றியா? என்று பிரித்துப் பார்த்திட இயலா நிலையில், இத்தகைய ஆரோக்கியமான போட்டிகள், அங்கு மலிந்து கிடக்கின்றன.

நம் நாட்டு மக்களின் மனோபாவம், எனக்கு இதைத்தா, எங்களுக்கு இதைச் செய்து கொடு, என்று கேட்பதில்,





ஒட்டுமொத்தப் பங்களிப்பு என்பது தவிர்க்க இயலா ஒன்றாகும்.

எனவே தான், நம்முடைய முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் மக்கள் நலனை மகத்தான இலட்சியமாகக் கொண்டு அல்லும்பகலும் அயராது உழைக்கிறார். மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை உருவாக்குவதில், அவற்றைப் பேணுவதில், அரசோடு ஒத்துழைக்க வாருங்கள்; திட்டங்களில் பங்கேற்க வாருங்கள்; ஊர்கூடித் தேரிழுப்போம்; உன்னதநிலையை உருவாக்குவோம் என்று ஜனநாயக மரபில், ஒரு புதிய சிந்தாந்தமாக, ஒருவழி காட்டும் அணுகுமுறையாக, 'நமக்கு நாமே' என்ற ஒரு புதிய புரட்சிகரமான திட்டத்தை அறிவித்துச் செயல் படுத்தி வருகிறார். எனவே, 'கூட்டுறவு' என்பது தொழில் வணிகத்தை மட்டுமே மையமாகக் கொண்ட ஒரு அமைப்பாக, அது இருந்திடல் கூடாது. தேவையான அடிப்படை வசதிகளை, தெரு அளவில், குடியிருப்பளவில், ஊராட்சியளவில், பேரூராட்சி அளவில், நகராட்சி மற்றும் மாநகராட்சி அளவில், திட்ட மிடுதலில் - செயல்படுத்துதலில், அரசுக்கு நிகராக அனைவரும் அணிதிரள்வோம்! வரலாற்றுச் சாதனைகளை நாள்தோறும் நிகழ்த்திவரும் முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் வழிகாட்டுதலில், ஜனநாயகக் கடமையாற்ற ஒன்று கூடுவோம்; 'நமக்கு நாமே' என்ற இலட்சியத்தில், மக்களாட்சியின் மாண்பிற்குப் புதுப்பொருள் கண்டிடுவோம்; உழைப்பைப் பங்காக்குவோம்; எனும் தாரகமந்திரம், இலட்சிய கீதமாக ஒலிக்கட்டும். 'கூட்டுறவு' என்ற உயரிய கோட்பாட்டிற்கு, புதிய இலக்கணம் படைத்துக் கூடிவாழ்ந்து, தேடிப்பல நன்மை பெறுவோம். **'கூட்டுறவே நாட்டுயர்வாய்'** அது பரிணமிக்கும் வகையில், புத்துலகம் படைப்போம். கூட்டுறவு வாரமாகக் கொண்டாடப்படும் இத்தருணத்தில், இதுவே நமது ஒருமித்த ஓங்கிய குரலாக, திக்கெட்டும் ஒலிக்கட்டும்.

கோரிக்கைகளை வலியுறுத்துவதில் காட்டுகின்ற வேகம், அது அரசால் ஏற்கப்பட்டு, பள்ளியாக, கல்லூரியாக, குடிநீர்த் தொட்டியாக, சாலையாக, நீர்ப்பாசனக் குளமாக, வடிகால் வசதியாக மருத்துவநிலையமாக, பேருந்து செதியாக அரசின் சார்பில் செய்து முடிக்கப்பட்டாலும், அதைப் பயன்படுத்துவதுதான் எமது உரிமை; பேணிப்பாதுகாப்பதில், சீரமைத்துக் கொள்வதில், பராமரிப்பதில் ஈடுபாடு காட்டாமல் வேற்றாள் எனும் மனப்பான்மையில் விலகிச் செல்லும் செயல்தான் மேலோங்கி நிற்கிறது.

நாடு சுதந்திரமடைந்து பொன்விழாக் கொண்டாடும் இந்த ஐம்பதாண்டுகளில் தேர்தல்களில் பங்கேற்பது மட்டுமே தான் நமது ஜனநாயகக் கடமை என்ற அளவில்தான் நமதுநிலை உள்ளது; நம்முடைய சொந்த விவகாரங்களைத் தவிர்த்து, பொதுவான பிரச்சினைகள் அனைத்துமே, அது அரசாங்கத்தின் பொறுப்பு என்றுதானே, பாமரர் மட்டுமின்றி படித்தவர்களும் கருதுகின்றனர். ஆனால், 'மக்களாட்சி' என்ற இலட்சியம் முழுமையாக எய்தப்பட வேண்டுமெனில், அதில், மக்களின்

- **இரா.பரதன்**, எம்.ஏ.,

## நலிவுற்றோர் குடும்ப நல நிவாரணத் திட்டத்தின் கீழ் விதவைக்கு ரூ.7,500 நிவாரண உதவி

**சி**வகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், வலையப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அப்துல்காதர் என்பவரின் மனைவி மரியம்பீவி கடந்த ஆண்டில் தனது கணவர் இறந்தபிறகு பக்கவாத நோயினால் உழைக்க முடியாத நிலையில் மிகவும் சிரமப்பட்டு வருகிறார். மிகவும் ஏழ்மையான நிலையிலுள்ள மரியம் பீவிக்கு நலிந்தோர் குடும்ப நல நிவாரணத் திட்டத்தின் கீழ் 7,500 ரூபாய் நிதியுதவி வழங்கிட முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

10 மாவட்டங்களைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை எளியோர் 43 பேர்களுக்கு, உயிர்காக்கும் சிகிச்சைகளான இருதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள ரூ.9.05 இலட்சம் நிதியுதவி வழங்கிட முதல்வர் கலைஞர் உத்தரவிட்டார்.

# வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

மைய அரசின் உதவியுடன் செயல்படும் 'வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்' இம் மாநிலத்தில் 1973-74ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான செலவு மத்திய, மாநில அரசுகளால் 50:50 என்ற அடிப்படையில் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. தமிழகத்தின் பல பகுதிகளில் நிலவி வரும் வறட்சி நிலைமையைக் குறைக்கும் விதத்திலும், சுற்றுப்புறச் சூழல் பாதிக்காத வகையிலும், உள்ளூர் மக்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரிக்கும் விதத்திலும் இத் திட்டம் தருமபுரி, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, திண்டுக்கல், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் ஆகிய 16 மாவட்டங்களில் தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1995-96ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் புதிய வழிமுறை தொகுப்பினை (New Guidelines) ஆதாரமாகக் கொண்டு மக்களின் பங்கேற்பு கூடுதலான நிலைமையில் புதிய பொலிவுடன் செயலாக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் அடிப்படை அலகு நீர்ப்பிரி முகடு ஆகும். இத்திட்டம் மேற்படி மாவட்டங்களில் 80 வட்டாரங்களில் 297 நீர்ப்பிரி முகடுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் நான்கு ஆண்டு திட்டமாகும். ஒரு நீர்ப்பிரி முகடுக்கு நான்கு ஆண்டுகளில் ரூ.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### திட்டப் பணிகளின் நோக்கங்கள்

நீர்ப்பிரி முகடு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்கள்:



1. நேரடியாக அல்லது மறைமுகமாக, நீர்ப்பிரி முகடு பகுதியைச் சார்ந்துள்ள கிராம மக்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல் ஆகும்.

   (அ) வறட்சிப் பாதிப்புகளைத் தணிக்கக் கூடியவையும், சுற்றுப்புறச் சூழலை மேலும் மோசமடைவதைத் தடுக்கக்கூடிய வகையில் நீர்ப்பிரி முகடு பகுதியில் நிலம், நீர், தாவரங்கள் போன்ற இயற்கை ஆதாரங்களை உரிய அளவுக்குப் பயன்படுத்துதல்.

   (ஆ) சேமிப்புகளையும், ஏனைய வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளையும் மேம்படுத்தும் பொருட்டு, மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதாகும். கிராமத்தின் ஏனைய பொருளாதார ஆதாரங்களை மேம்படுத்துதல் ஆகும்.

2. சமுதாய நடவடிக்கை மற்றும் இயற்கை ஆதார வளங்களை மேலும் மேம்படுத்துதல், உள்ளூர் தொழில் நுட்ப அறிவை உபயோகப்படுத்துதல் ஆகியவை மூலமாகக் கிராம சுற்றுப்புறச் சூழல் சமநிலையாக உருவாவதை ஊக்கப்படுத்துதல்.

3. நீர்ப்பிரி முகடு பகுதி மக்களில் வருவாய் ஆதாரம் இல்லாத ஏழை எளியவர்கள், ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், சொத்தில்லா மக்கள், பெண்கள் போன்ற பின்னடைந்த பிரிவினரின் பொருளாதார சமூக நிலையை மேம்படுத்துதல்.

### திட்டச் செயலாக்க முறை

புதிய வழிமுறைத் தொகுப்புகளின்படி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்டச் செயல்பாட்டு முகமை, நீர்ப்பிரி முகடு சங்கம் மற்றும் நீர்ப்பிரி முகடுக் குழு ஆகிய பல்வேறு அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் மற்ற திட்டங்களைப் போலன்றிக் கிராம மக்களின் ஈடுபாட்டுடன் செயல்படுத்தப் படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### நீர்ப்பிரி முகடுச் சங்கம்

இச் சங்கத்தில், நீர்ப்பிரி முகடு பகுதிகளில் உள்ள அனைத்து நபர்களும் உறுப்பினர்களாக இருப்பர். இச் சங்கம் நீர்ப்பிரி முகடு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை வகுத்தல்/மேம்படுத்துதல், திட்ட முன்னேற்றத்தைக் கண் காணித்தல், ஆய்வு செய்தல், கணக்கு விவர அறிக்கைக்கு ஒப்பளித்தல், பயனாளிகள் குழுக்களை மற்றும் சுய உதவி குழுக்களை ஏற்படுத்துதல், பொது மக்களிடமிருந்து தானே முன்வந்து

வழங்கும் நன்கொடையை வசூலிப்பதற்கும் சமுதாயத் தனி உறுப்பினர்களிடமிருந்து தொகை பெறுதலுக்கும் ஒப்புதலளித்தல், திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட சொத்தினை இயக்கவும், பராமரிக்கவும், நடைமுறைபடுத்தவும், நீர்ப்பிரி முகடு பகுதி மேம்பாட்டு நிதியில் கிடைக்கும் தொகையைக் கொண்டு செய்யும் பணிகளுக்கு ஒப்புதலளித்தல் சுழல்முறை மூலம் பயனாளிகள் குழுக்கள்/சுய உதவி பெறும் குழுக்களில் இருந்து நீர்ப்பிரி முகடு பகுதி குழுவின் உறுப்பினர்களாக நியமனம் செய்தல் போன்ற ஏனைய வேலைகளை நீர்ப்பிரி முகடு சங்கம் செயற்படுத்தும்.



### நீர்ப்பிரி முகடுப் பகுதிக்குழு

நீர்ப்பிரி முகடுப் பகுதி சங்கத்தின் ஒட்டுமொத்த மேற்பார்வை, கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு உட்பட்டு, நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டத்தின் அன்றாடப் பணிகளை நீர்ப்பிரி முகடுப் பகுதிக் குழு கவனிக்கும். இது நீர்ப்பிரி முகடுச் சங்கம் ஒப்படைக்கும் பணிகளைக் கவனிக்கும். இக்குழுவில் 10-12 உறுப்பினர்கள் இருப்பர்.

### திட்ட அமலாக்க முகமைகளைச் தெரிவு செய்தல்

நீர்ப்பிரி முகடுப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத் திட்ட அமலாக்க முகமைகளின் தகுதி குறித்து முடிவு செய்வதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அதிகார மன்றமாக இருக்கும்.

### மாநில நீர்ப்பிரி முகடு பகுதித் திட்டச் செயலாக்கம் மற்றும் ஆய்வுக்குழு

அரசின் பல்வேறு துறைகள், வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள், தொண்டு நிறுவனங்கள், பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றிடையே ஒருங்கிணைப்பை உறுதி செய்ய, மாநில அளவிலான நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கம் மற்றும் ஆய்வுக்குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.

### திட்டச் சாதனை

இத்திட்டம் அரசுத் துறைகளான வேளாண்மைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வனத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, பட்டுவளர்ச்சித்துறை ஏனையவைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டாலும், 1995-96ஆம் ஆண்டு முதல் நீர்ப்பிரி முகடுப் பகுதித் திட்ட அடிப்படையில் புதிய வழிமுறைத் தொகுப்பினை ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட சாதனை விவரம் பின்வருமாறு:**

| வருடம் | சாதனை(நிதி) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1995-96 | 761.06 |
| 1996-97 | 1210.76 |
| 1997-98 | 932.76 (30.10.97 வரை) |

இத்திட்டத்தில் பெரிய தடுப்பணை, சிறிய தடுப்பணை, சமஉயர வரப்புகள், நிலம் சமப்படுத்துதல், பாசனக் கால்வாய் மற்றும் ஏரி சீரமைத்தல், சமுதாயக் கிணறு/பாசனக் கிணறு, கசிவு நீர்க்குட்டை, கால்நடைக் குட்டை, மழைநீர் சேமிப்பு அமைப்பு, தீவனப்பயிர் வளர்ப்பு, கோடை உழவு, சமூகக் காடுகள், சாலை ஓர மரங்கள், பழ மற்றும் விறகு மரங்கள் வளர்த்தல் ஆகிய பல்வேறு பயன்மிக்க பணிகள் நடைபெற்றுவருகின்றன.

இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும் பொழுது, நீர்ப்பிரி முகடு பகுதியைச் சார்ந்த மக்களின் பொருளாதார வளர்ச்சி மேம்படுவதுடன், வேலை வாய்ப்புகள் உருவாகி கிராமச் சுற்றுப்புறச் சூழல் சம நிலையாக உருவாக்கப்பட்டு ஏழை, எளிய மக்களின் சமூக நிலை மேம்படுவது திண்ணம்.

## தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கீழ் சிறு துறைமுகங்களின் வளர்ச்சி

மார்ச் '97ஆம் மாதத்தில் உருவாக்கப்பட்டு, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களது தலைமையின் கீழ் செயல்பட்டுவரும் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் நான்காவது வாரியக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் சிறு துறைமுக வளர்ச்சிப் பணிகள் குறித்து, கலந்தாலோசிக்கப்பட்டது.

தனியார் நிறுவனங்களிடமிருந்து சென்னைக்கும், கடலூருக்குமிடையே அதிவேகப் பயணிகள் படகுப் போக்குவரத்தினைச்செயல்படுத்துவதற்கான செயற் குறிப்புகளை வரவேற்று விளம்பரம் ஒன்று ஏற்கெனவே இவ்வாரியத்தால் செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர, தனியார் பங்கேற்பின் மூலம் துறைமுகங்கள் ஏற்படுத்த இவ்வாரியம் முனைந்து செயல்பட்டு வருகின்றது. துறைமுகங்கள் சார்ந்த புதிய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பெட்ரோல், எண்ணெய்த் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் தேவைகளுக்கேற்பப் புதிய துறைமுகங்களைத் தோற்றுவிப்பது இவ்வாரியக் கொள்கைகளில் ஒன்றாகும்.

# கோட்பாட்டில் கனிந்த கூட்டுறவுக் கனிகள்

### திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கம்

சென்னை மற்றும் அதன் புறநகர் வாழ்மக்கள் மத்தியில் புகழ்வாய்ந்த நிறுவனமாக விளங்குவது டி.யு.சி.எஸ்.என்றழைக்கப்படும் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கம். இச்சங்கம் 9.4.1904 அன்று திருவல்லிக்கேணியில் 14 உறுப்பினர்களைக் கொண்டு துவக்கப்பட்டது. 1942ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது அப்போதிருந்த அரசு பொதுமக்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களை விநியோகம் செய்யப் போதிய அனுபவம்பெற்ற ஒரு நிறுவனத்தைத் தேடிக்கொண்டிருந்த போது, அத்துறையில் மிகுந்த அனுபவம் பெற்ற டி.யு.சி.எஸ்.நிறுவனம் தானே முன்வந்து அப்பணியினைத் திறம்படச்செய்தது. அவ்வாறு 1942 முதல் 1945 வரை மதிப்பிடமுடியாத தன்னலமற்ற செயல்புரிந்ததைப் போற்றும்வகையில் அப்போதைய அரசு உணவுப்பொருட்களை அரசு சார்பில் விநியோகம் செய்ததில் எய்திய நிகர இலாபத்தில் 50 விழுக்காட்டினை டி.யு.சி.எஸ்.நிறுவனத்திற்கு அன்பளிப்பாக வழங்கியது. அத்தொகை ரூ.1.87 இலட்சமாகும். அத்தொகையுடன் சங்கத்தின் நிதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை உபயோகித்து ரூ.3.25 இலட்சத்தில் தலைமை அலுவலகக் கட்டடம் 1953ல் கட்டி முடிக்கப்பட்டது.

டி.யு.சி.எஸ்.ஸின் ஓர் அங்கமாக இன்று பெரும்புகழுடன் விளங்கும் காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி 1966ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ஆம் தேதி



தொடங்கப்பட்டதாகும். அனைத்துப் பொருட்களையும் பொதுமக்களுக்கு ஒரே இடத்தில் மலிவான விலையில் கிடைக்க வழிவகுக்கும் வகையில் சூப்பர் மார்க்கெட் துவக்கப்பட்டது.

டி.யு.சி.எஸ்.அதன் வைரவிழாவை 1970ஆம் ஆண்டு ஜூன் 21-ஆம் தேதி கொண்டாடியது. அப்போது 71 கிளைகளும், 1 சிறப்பங்காடியும் இருந்தது. 81,384 உறுப்பினர்கள் இருந்தார்கள். பங்குத் தொகையாக ரூ.18,94,600 வசூலிக்கப்பட்டிருந்தது. அந்த ஆண்டின் விற்பனை ரூ.3.25 கோடியாகும். தற்போது டி.யு.சி.எஸ்.ஸில் 103768 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களால் செலுத்தப்பட்ட பங்குத்தொகை ரூ.104.14 இலட்சமாகும். அதில் அரசு பங்குத்தொகைமட்டும் ரூ.94.38 இலட்சமாகும். இதில் 1074 நபர்கள், பல்வேறு நிலைகளில் பணியாற்றிவருகின்றனர். மேலும், கிளைகளின் சேவையை 2,67,440 குடும்ப அட்டைதாரர்கள் பெற்றுவருகின்றனர்.

தற்போது, டி.யு.சி.எஸ். நிர்வாகத்தின்கீழ், சிறப்பங்காடிகள் 2ம், 13 சுய சேவைப்பிரிவுகளும், 3 சிறிய சிறப்பங்காடிகளும், 215 நியாய விலைக்கடைகளும், பெட்ரோல் பங்க் ஒன்றும், நடமாடும் ஊர்தி அங்காடி ஒன்றும், 16 எரிவாயு கிளைகளும் செயல்பட்டுவருகின்றன. ஒரு சுயசேவைப்பிரிவு 14.5.97 முதல் பெரியார் நகர், புதிய வணிக வளாகக் கட்டடத்தில் புதிததாகத் திறக்கப்பட்டுள்ளது.

### எண்ணெய் ஆலை:

டி.யு.சி.எஸ்.நிறுவனத்தின் கீழ் இயங்கும் எண்ணெய் ஆலை 1932-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 9 பின்டோ செக்குகளுடன் தொடங்கப்பட்ட எண்ணெய் ஆலை தற்போது பின்டோ செக்குகள், ரோட்டரி செக்குகளாக மாற்றப்பட்டு, மாதத்திற்கு 12,200 கிலோ எண்ணெய் உற்பத்தி செய்கிறது.

மண்ணெண்ணெய் வழங்குநிலையத்தின் மூலமாக 5715 குடும்ப அட்டைதாரர்களுக்கு 51089 லிட்டர் மண்ணெண்ணெய் சரியான அளவில் சீராக விநியோகம் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

### சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி 1930-ஆம் ஆண்டு தொடங்கி, கடந்த 67 ஆண்டுகளாகத் தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னை மாநகரில் தலைசிறந்த கூட்டுறவு வங்கிகளில் ஒன்றாக செயல்பட்டு வருகின்றது.

தனது எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து பிரதம கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள், நுகர்வோர்



கூட்டுறவுப் பண்டகசாலைகள், மொத்தக் கூட்டுறவு பண்டகசாலைகள் போன்ற 537 கூட்டுறவுச் சங்கங்களின் நிதித்தேவையைப் பூர்த்தி செய்யும் மாவட்ட சங்கமாகச் செயல்பட்டு வருகின்றது. தவிர, தமிழக அரசு அவ்வப்போது அறிவிக்கும் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது.

மேலும் இவ்வங்கி 57 கிளைகளுடன் நகரில் செயல்படும் ஏனைய வர்த்தக, வெளிநாட்டு வங்கிகளின் போட்டிகளுக்கிடையே அயராத சேவை மூலம் தனி முத்திரை பதித்து மக்களின் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையும் பெற்று சிறந்து செயல்பட்டு வருகின்றது. தவிர, தென் இந்தியாவிலேயே முதன் முறையாக "நடமாடும் வங்கி"யை அறிமுகப்படுத்தி நகரில் வங்கி வசதியில்லாத பகுதியிலுள்ள மக்களுக்கும் தன்னுடைய சேவையை அளித்துவருகின்றது.

தமிழக அரசின் அத்தியாவசியப் பொருட்கள் வினியோகத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, சென்னையில் செயல்படும் மொத்த மற்றும் பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு ரூ.740.58 இலட்சங்கள் காசுக்கடனாக வழங்கியுள்ளது.

**நகைக் கடன்**

கடந்த நிதியாண்டில் பொதுமக்களின் பல்வேறு அவசரத் தேவைகளுக்காக இவ்வங்கிக் கிளைகள் மூலம் ரூ.181.42 கோடி நகை கடன்களாக வழங்கியுள்ளது.

## தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

'நிலவள வங்கிகள்' என்றாலே வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு மட்டுமே கடன்களை வழங்கும் என்ற நிலையை மாற்றி, 1991ஆம் ஆண்டு முதல் விவசாயம் சாராத சிறு தொழில்களுக்கும் கடன் வழங்கத் தொடங்கியதையொட்டி 'நிலவள வங்கிகள்' "வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்" என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளன.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகிற 181 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் தலைமை நிறுவனமாகத் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி செயல்பட்டு வருகிறது. இவ்வங்கிக்கு மாவட்ட அளவில் 20 மண்டல அலுவலகங்கள் உள்ளன.

மாநில ஊரக வளர்ச்சி வங்கியின் சொந்த நிதிவசதி ரூ.147.92 கோடி.

கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் கடன் வழங்குவதற்கான மறுநிதி உதவியை நபார்டு வங்கியிடமிருந்து சராசரியாக 86 சதவிகிதமும் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து 14 சதவிகிதமும் வங்கி பெறுகிறது.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்காக 1995-96ஆம் ஆண்டில் ரூ.188 கோடியும் 1996-97ஆம் ஆண்டில் ரூ.205 கோடியும் 1997-98ஆம் ஆண்டில் ரூ.226 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.45.85 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஆடு வளர்க்க, பால் மாடுகள் வாங்க, டயர் வண்டி மற்றும் மாடுகள், உழவு மாடுகள் ஆகிய திட்டங்களுக்குக் கடன் வழங்க ரூ.1.10 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ரூ.0.49 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சிறுபாசனத் திட்டத்தின்கீழ் கிணறு வெட்ட, ஆழ்துளைகிணறுகள் அமைக்க, கிணறு ஆழப்படுத்த, ஆயில் எஞ்சின், மின்சார மோட்டார் செட் கட்ட, புதை குழாய்ப் பாசனம், சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் ஆகிய திட்டங்களுக்குக் கடன் வழங்க ரூ.4.80 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.0.99 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சிறுபாசனம் அல்லாத திட்டத்தின்கீழ் கோழிப்பண்ணை அமைக்க, கறவை மாட்டுப் பண்ணை அமைக்க, ஆட்டுப் பண்ணை அமைக்க, மா, தென்னை, திராட்சை போன்ற



பழத்தோட்டப் பயிர்களுக்கும், காப்பி, தேயிலை, ரப்பர் போன்ற மலைத் தோட்டப் பயிர்களுக்கும், ரோஜா, மல்லிகை, கனகாம்பரம் போன்ற மலர்ச் சாகுபடித் திட்டங்களுக்கும் கடன் வழங்க ரூ.55.70 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ரூ.16.30 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**பண்ணை இயந்திரமயத் திட்டம்**

பண்ணை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் டிராக்டர், விசைக் கலப்பை, நெற்கதிரடிக்கும் இயந்திரம் ஆகிய திட்டங்களுக்காக ரூ.61 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ரூ.11.28 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**பண்ணை சாராத் திட்டம்**

பண்ணை சாராச்சிறுதொழில் வளர்ச்சிக்கான திட்டத்தின்கீழ் கைவினைப் பொருள்கள், கிராமத் தொழில்கள், தோல் பொருட்கள், மண்பாண்டங்கள், காகிதப் பொருட்கள், அச்சுத்தொழில், கண்ணாடிப் பொருட்கள், ரப்பர் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள், வேதியியல் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், பொறியியல் சார்ந்த பொருட்கள், மின் பொறியியல் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், எழுது பொருட்கள், விவசாய இடுபொருட்கள், விவசாயக் கருவிகள், உணவுப் பொருட்கள், தையல் மற்றும் ரெடிமேடு துணிகள், பட்டுநூற்பு, நார்ப்பொருட்கள், கைத்தறி, விசைத்தறி முதலான பல்வேறு சிறுதொழில் வளர்ச்சிக்கு ரூ.102.50 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ரூ.16.67 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சாதாரணக் கடன் திட்டத்தின்கீழ் பண்ணை வீடு, மாட்டுத் தொழுவம் போன்ற திட்டங்களுக்காக ரூ.0.90 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ரூ.0.13 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**வட்டி விகிதம்**

| | | |
|---|---|---|
| ரூ.25 ஆயிரம் வரை | ... | 14.5% வட்டி |
| ரூ.25 ஆயிரத்துக்கு மேல் | | |
| ரூ.2 இலட்சம் வரை | ... | 15% வட்டி |
| ரூ.2 இலட்சத்துக்கு மேல் | ... | 17.5% வட்டி |

**நகைக் கடன்**

இந்தியாவிலேயே தொடக்க ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் 1994ஆம் ஆண்டு முதல் நகைக்கடன் வழங்கும் ஒரே நிறுவனம் தமிழ்நாடு மாநில ஊரக வளர்ச்சி வங்கிதான். வங்கியின் நிதியில் நகைக்கடன் வழங்கப்படுகிறது; மறுநிதி பெறப்படுவதில்லை.

1997-98ஆம் ஆண்டுக்கு ரூ.75 கோடி நகைக்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ரூ.50.53 கோடி வழங்கப்பட்டுள்ளது. நகைக் கடனுக்கான வட்டியாக 18.5% வசூலிக்கப்படுகிறது.

மாநில ஊரக வளர்ச்சி வங்கி வைப்புத் தொகை வசூலிக்க ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது. அதையொட்டி வைப்புத் தொகை சேகரிக்கும் திட்டத்தை தீவிரப்படுத்த உள்ளது.

**கிராமப்புற மருத்துவமனை:**

மருத்துவத்தில் பட்டம் பெற்றவர்கள் கிராமப்புறங்களில் 1996-97ம் ஆண்டு 28 மருத்துவமனைகள் மற்றும் 20 மருத்துவ பரிசோதனைக் கூடம் அமைக்க ரூ.2.60 கோடி வழங்க ஆணை வெளியிட்டு ரூ.1.59 கோடி கடன் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்**

தமிழக அரசின் "குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற கொள்கையினைக் கூட்டுறவுத் துறையில் வெற்றிகரமாக செயல்படுத்திவரும் நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம். இவ்விணையம் 18.3.1959ல் பதிவு செய்யப்பட்டு 15.7.1959 முதல் செயல்பட்டு வருகிறது.



தமிழகம் முழுவதிலும் உள்ள முதன்மைச் சங்கங்களின் வழியாக இவ்விணையம் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், மாநகராட்சிப் பகுதிகளில் அடுக்குமாடி, புதிய வீடு வாங்க உயர்ந்தபட்சம் ரூ.5 இலட்சம் வரை கடன் வழங்கி வருகிறது. மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் புதிய வீடு கட்டுவதற்கு ரூ.3 இலட்சமும், ஏனைய இடங்களில் ரூ.2 இலட்சமும் கடன் வழங்கிவருகிறது. உறுப்பினரின் வயதைப் பொறுத்து 7 ஆண்டு முதல் 18 ஆண்டுகள் வரை கடன் வழங்கப்படுகிறது.

கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான வீட்டின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.14,000 ஆகும். இதில் கடனாக ரூ.10,000மும், மானியமாக ரூ.2000மும் வழங்கப்படுகிறது. பயனடைவோரின் முதலீடு ரூ.2000 ஆகும். கிராமப்புறங்களில் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு வீடு கட்ட உயர்ந்தபட்சம் ரூ.70,000மும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.1,20,000மும் கடனாக வழங்கப்படுகிறது.

நகர்ப்புறப் பகுதிகளில் 496 நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கங்களும், கிராமப்புறங்களில் 169 வட்ட வீட்டுவசதிச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் எந்த மூலை, முடுக்கில் இருக்கும் தனிநபரும் ஏதேனும் ஒரு

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கடன் பெற்று வீடுகட்ட இயலும்.

கிராமிய மற்றும் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 31.10.97 முடிய 8,65,291 வீடுகள் கட்டி முடிக்க ஏதுவாக ரூ.1,632 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே கூட்டுறவுத்துறை மூலம் ரூ.1,632 கோடிக்கு மேல் கடன் வழங்கியது இவ்விணையம் மட்டுமே.

இந்திய அளவில் வீட்டுவசதித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும் வீட்டுவசதி நிறுவனங்களுக்கு ''வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகமும் (HUDCO), தேசீய கூட்டுறவு வீட்டுவசதி இணையமும்''. ஆண்டுதோறும் விருதுகள் வழங்கிப் பாராட்டிவருகின்றன.

இவ்வகையில் தொடர்ந்து முதல் இடத்தை வகிக்கும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு "வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (HUDCO)", 1992-93, 1993-94, 1995-96 மற்றும் 1996-97 ஆகிய நான்கு ஆண்டுகளுக்கும் ''தேசிய விருதுகள்'' வழங்கிச் சிறப்பித்துள்ளது. இதேபோன்று தேசீய கூட்டுறவு வீட்டுவசதி இணையமும் 1994-95ஆம் ஆண்டு இந்திய அளவில் திறமையாக நிர்வகிக்கப்படும் இணையம் என தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தைத் தேர்வு செய்து அதற்காக ''தேசீய விருது'' வழங்கி சிறப்பித்துள்ளது. இவ்வாறாக 1992-93 முதல் 1996-97 வரை தொடர்ந்து ஐந்தாண்டுகள் தேசீய விருதைப் பெற்றுள்ளது. மேலும் குறைந்த செலவில் வீடு கட்டும் திட்டத்தின்கீழ், அகில இந்திய அளவில் நடைபெற்ற போட்டியில் இவ்விணையத்துக்கு இருமுறை முதல் பரிசும், இருமுறை இரண்டாம் பரிசும் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இலாபத்தில் இயங்கிவரும் இணையம் 1993-94ஆம் ஆண்டில் ரூ.12.30 கோடியும், 1994-95ஆம் ஆண்டில் ரூ.13.66 கோடியும் 1995-96ஆம் ஆண்டில் ரூ.7.18 கோடியும் இலாபம் ஈட்டியுள்ளது. 1994-95ஆம் ஆண்டிற்கு அதிகபட்சமாக 17% ஈவுத்தொகை வழங்கியுள்ளது.

நடப்பு ஆண்டில் நகர்ப்புற மற்றும் கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டி முடிக்கவும், பழுது பார்க்கவும், மேம்படுத்தவும் ரூ.357 கோடி அளவிற்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களிலுள்ள பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்களுக்கு அவர்களுடைய ஓலை வேயப்பட்ட வீட்டில் கூரைக்குப் பதிலாக ஓடு வேய்தல், சுவர்களை உறுதிப்படுத்துதல், சுகாதார வசதி மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற காரியங்களுக்கு, ரூ.3,080 கடனாக வழங்கப்படுகிறது. இதில் அரசின் மானியம் ரூ.500ம் அடங்கும். நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 30,000 வீடுகள் மேம்படுத்த ரூ.9.24 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பழங்குடியினர்கள் 1000 வீடுகள் கட்டிக் கொள்வதற்கு நடப்பு ஆண்டில் ரூ.3 கோடி கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மகளிர் மேம்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் நடப்பு ஆண்டில் மகளிர் வீட்டுவசதிக்கென 1,000 வீடுகளை, கட்டி முடிக்க ரூ.6 கோடி கடனாக வழங்கப்படும்.

## தமிழகத்தின் பனைத்தொழில்

தமிழ்நாட்டில், வறட்சி நிலவிவரும் பகுதி மக்களின் காமதேனுவாக, கற்பக விருட்சமாக விளங்குவது பனைத் தொழிலாகும். பனைமரத்திலிருந்து கிடைக்கப்பெறும் பதநீர், நுங்கு, ஓலை, மட்டை ஆகிய அனைத்துமே ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் வேலைவாய்ப்பை அளிக்கின்றன. அமைப்புசாரா அடிப்படையிலான இத்தொழிலை, ஒரு அமைப்புக்குள் கொண்டுவரும் வகையிலும், கடனுதவி அளிக்கும் வகையிலும் 1995 முதல் பனைத் தொழில்வாரியம் தொடங்கப்பட்டது.

இப் பனை வாரியத்தின் கீழ் 1509 தொடக்க பனை வெல்லக் கூட்டுறவு சங்கங்களும், 7 மாவட்ட சம்மேளனங்களும், ஒரு மாநில இணையமும் செயல்பட்டு வருகின்றன.

மாவட்ட அளவில் கீழ்க்கண்ட இடங்களில் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்கள் இயங்கி வருகின்றது.

1. கன்னியாகுமரி மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம், குழித்துறை.
2. திருநெல்வேலி மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம், தூத்துக்குடி.
3. இராமநாதபுரம் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம், இராமநாதபுரம்.
4. மதுரை மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம், மதுரை.
5. சேலம் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம், சேலம்.
6. கோவை-ஈரோடு மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம், குன்னத்தூர்.



7. தர்மபுரி மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம், தர்மபுரி.



மாநில அளவிலான தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த மாநில இணையத்தின் கட்டுப்பாட்டில் தமிழகம் முழுவதும் 21 கிளை நிலையங்கள் செயல்படுகின்றன.

**1996-97** நிதியாண்டில் மாநில அளவில் பதநீர், பனை வெல்லம், தூரிகைகள், பனை ஓலைப்பொருட்கள் மற்றும் இதர பனை சம்மந்தப்பட்ட உண்ணும் மற்றும் உண்ணாப் பொருட்கள் ரூ.14,200 இலட்சத்திற்கு உற்பத்தி செய்யப்பட்டு ரூ.15,200 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மாநில இணையம் பனந்தும்பை, அமெரிக்கா, இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, ரூ.118.97 இலட்சத்திற்கு அன்னியச் செலாவணி ஈட்டியுள்ளது.

மாநில இணையத்தால் உற்பத்தி செய்யப்படும் பிரஷ்களுக்கு, நல்ல விற்பனை வாய்ப்பு உள்ளது. அரசுத் துறை, போக்குவரத்து நிறுவனங்களுக்குத் தேவையான பிரஷ்கள் மற்றும் பனைநார் கொண்டு தயாரிக்கப்பட்ட ஓட்டுநர் இருக்கை, நடத்துநர் இருக்கைகள் ஆகிய பனைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

பனங்கற்கண்டு விளையும் கால அளவைக் குறைக்கவும், அதிக கற்கண்டு உற்பத்தி செய்யவும். சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பனைப்பொருள் வளர்ச்சி வாரியம், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் நலனில் அக்கறை கொண்டு பனை மரங்களைக் குட்டையாக வளரச் செய்யவும், வருடம் முழுவதும் பதநீர் கிடைக்கும் வகையிலும் கோவை விவசாயப் பல்கலைக்கழகம் மூலம் ஆராய்ச்சி நடத்தி வருகின்றது.

இதேபோன்று பனை நுங்கை நீண்ட நாட்கள் கெடாமல் பாதுகாத்து விற்பனை செய்யும் நோக்குடன் சென்னைப் பல்கலைக்கழக உயிர் வேதியல் துறையின் மூலம் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு பூர்வாங்கப் பணிகள் நிறைவேறியுள்ளன.

பனை மரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய உண்ணும் பொருளாகப் பதநீர், கருப்பட்டி, பனஞ்சீனி, நுங்கு ஆகியவை மிகவும் சத்து நிறைந்ததாகும். சுற்றுச்சூழல் மாறிவரும் இந்நாளில் மனிதனுக்கு மேற்படி இயற்கை உணவுப்பொருட்கள் ஊட்டச்சத்துடன் கூடிய மருத்துவ சக்தி இன்றியமையாதது. அவற்றை மக்களிடையே பயன்படுத்தும் பழக்கத்தைத் தூண்டுவது நமது கடமையாகும்.

**புரசைவாக்கம் கூட்டுறவு வங்கி**

சென்னை மாநகரில் பெரிய நிதி நிறுவனங்களுடன் போட்டியிட்டு முன்னேறிக் கொண்டிருக்கும் நகரக் கூட்டுறவு வங்கிகளில் சிறந்த நகரக் கூட்டுறவு வங்கியாகப் புரசைவாக்கம் கூட்டுறவு வங்கி திகழ்கிறது.

இந்த வங்கி 1924ல் ஆரம்பிக்கப்பட்டு, பவளவிழாவினை நோக்கி வெற்றி நடைபோட்டு வருகிறது. இவ்வங்கி, சென்னை நகரம் மற்றும் அதன் சுற்றுப்புற நகராட்சிகளான ஆலந்தூர், அம்பத்தூர், திருவொற்றியூர், கோயம்பேடு, நெற்குன்றம், மதுரவாயல், திருவேற்காடு, மாங்காடு போன்ற இடங்களில் மக்களின் தேவைகளுக்காகச் சிறந்த சேவை செய்து வருகிறது.

வைப்புத்தொகை வளர்ச்சி விகிதம் சராசரியாக ஆண்டுக்கு 20% சதவீதம் வளர்ந்து வருகிறது. இன்றைய தேதியில் வங்கியின் வைப்புத் தொகை ரூ.12.75 கோடி உள்ளது.

இவ்வங்கியின் நடைமுறை மூலதனம் 30.9.97ல் ரூ.16.03 கோடியை எட்டியுள்ளது.

1. சிறுதொழில் நிறுவன உரிமம் பெற்றுள்ள நிறுவனங்களுக்கு அவர்கள் வைக்கும் திட்ட அறிக்கையின் தேவைக்கேற்ப ரூ.5.00 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது.

2. ஆட்டோ ஓட்டுநர்கள், டூரிஸ்ட் வேன், டூரிஸ்ட்கார் போன்ற வாகனங்கள் வாங்கவும் கடன் வழங்கப்படுகிறது.

3. சிறுதொழில் வியாபாரம் செய்வோர்களின் தேவைக்காக நபர் ஜாமீன் பேரில் ரூ.3000 வரை வியாபாரக் கடன் வழங்கப்படுகிறது.

4. நடைபாதை வியாபாரிகளுக்கு, காய்கறி, பூ மற்றும் பழம் வியாபாரம் செய்பவர்களுக்கு ரூ.1000 வரை கடன் வழங்கப்படுகிறது.



# சிந்தனைச் சிறகுகள்

கவிஞர் ஈரோடு தமிழன்பன்

எது எழுத்தைத் தொட்டால்
இலக்கியமாகும்?
எது
ஓடையைத் தொட்டால்
கடலாகும்?
எது
மின்மினியைத் தொட்டால்
நட்சத்திரமாகும்?
அதுதான் சிந்தனை!

இங்கே
சிலரது சிந்தனைகள், கற்பிற் சிறந்தவை
எவரும் தொடுவதில்லை...

சிலரது சிந்தனைகள்
அவர் வாழும்போதே பூவோடும், பொட்டோடும்
போய்ச் சேர்ந்துவிடும்...

இன்னும் சிலருடைய சிந்தனைகள்
அவர் இறந்தவுடன்
தவறாமல் உடன்கட்டை ஏறிவிடும்.

சிந்தித்தவன் போனபின்னும்
செல்லுபடியாகும்
வாக்குமுறிச் சீட்டுகளே
பொன்னான சிந்தனைகள்!

சிந்தனை மரணித்த மூளைக்குச்
சிரசே கல்லறை

பைசா என்றால்
கோபுரமே சரிந்துவிடும்
இந்நாளில்.

சில்லறையிலிருந்து
சிந்திக்கின்றனர் சிலர்...
கல்லறையிலிருந்து சிந்திக்கின்றனர்
சிலர்!
பாட்டறையில் வைத்துப்
பாராட்டத் தக்கவர்களோ...
பட்டறையிலிருந்து சிந்திக்கின்றனர்.

எண்ணங்களை
ஏன் சிறகென்கிறோம்...
கூடுகளின் முகவரியில் அவை
குடியிருப்பதில்லை அதனால்தான்!

சிந்தனை
நதியாக ஓடிவரவேண்டும்
மனிதன்!...இல்லாவிட்டால்
சிந்தனை நதியோரம்
குடியிருக்க வேண்டும்.
அதுவும் இல்லாவிட்டால்
கல்லறை தேசத்தில்
இடம், காலியாக இருக்கிறதா என்று
பார்க்க வேண்டும்.

கன்னத்தை
ஈரமாக்கும்படி சிந்திப்பதைவிடக்
கண்களைக்
கனலாக்கும்படி சிந்திக்க வேண்டும்.







எண்ணங்களின் நிழல்களே
வெளிச்சங்கள்...
வேண்டுமானால் விளக்குகளை
விசாரித்துப் பாருங்கள்.

குனிந்து
பார்த்துக்கொண்டிருக்கும்
தெருவிளக்குகள்...
என்றாவது ஒருநாள்
சிந்திக்கும் மனிதனைப் பார்த்தால்
பெருமையில் நிமிர்ந்துவிடும்!

ஒருவகையில்,
சிந்திக்கும் மனிதன் விளக்குப்போல்
இருக்க மாட்டான்!
ஏனெனில்
இருட்டுக்குள் வாழச் சம்மதித்துவிட்டவை
இந்த விளக்குகள்!

சிந்திக்கும் மனிதனாக இருப்பது
கடவுளாய்
இருப்பதைவிட மேல்...
ஏனெனில், சிலவேளைகளில்
கடவுளுக்குச் சிந்திக்கத் தெரியாது!

இயற்கை
சிந்தித்தபோது மனிதன் பிறந்தான்.
சிந்திப்பதை
மனிதன் நிறுத்தியபோது
கடவுள்கள் பிறந்தார்கள்.

ஆயிரம் கற்றாலும்
சிந்தனை வளர்வதில்லை சிலருக்கு...
துணியை
மூட்டை மூட்டையாய்ச் சுமந்தாலும்
கழுதை
நிர்வாணமாகத்தானே போகிறது!

காடா விளக்குகள்
கல்லூரிக்குப் போய்வந்தால்
மின்சார விளக்காக வேண்டாமா?

கல்லூரிக்குப் போன
மின்விளக்குகள், அணைந்த
அகல் விளக்குகளாய்த்
திரும்பலாமா?

'நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்'
-பாரதி பாடினான்...ஆனால்

நினைவு நல்லதாய்
இருந்தால்...
நெருங்கின பொருள்
கைப்பட மாட்டேன் என்கிறது...

நெருங்கின பொருள்
கைப்படும் போது
நினைவு நல்லதாய்
இருக்கமாட்டேன் என்கிறது!
என்ன செய்ய...

தோட்டமே
தேனைத் திருடுகிறது...
பூக்கள்
எத்தனை நாள் பார்த்துக்கொண்டிருக்கும்?
தேர்தலில்-எதிர்த்து
வாக்குப் போட்டுவிடுகின்றன...

உப்பைத்
தொட்டுக்கொண்டு
ஊரைச் சாப்பிட்டவர்களுக்கு
இப்போது
ஊறுகாய் கேட்கிறார்கள்;
உலகம்
பாக்கியிருக்கிறதாம்!

ஊறுகாய் கிடைத்தால்...
உலகம்
ஒருவாய்க்குப் போதாது

அலைகளை
அடமானம் வைத்துக்
கடல்,
சாப்பிட்டால்
கரை, காரித்துப்பாமல் என்ன செய்யும்?

சிலர்
சிறகுகளை அசைக்கிறார்கள்
ஆகாயம்
அழுக்காகிறது...
எந்தச் 'சொட்டு நீலம்'
அந்த அழுக்கைப் போக்கும்!

புலியோடு
முற்றிவிட்டது பகை என்றால்-
போராட வேண்டும்
ஓடிப்போய் நரியிடம் கூட்டுச்சேர்ந்து
அறிக்கை விடலாமா?

பகலோடு-பகை என்பதற்காக,
இருளோடு
நட்சத்திர விடுதிக்கு
விருந்துக்குப் போகலாமா?

உனக்கும்
உண்மைக்கும் ஊடல் என்றால்,
பொய்யின் கன்னத்தில் போய்
முத்தமிட்டுக் கொண்டிருக்கிறாய்!

உடைபடுவதானால் கூட
உன் சிந்தனை
ஒரு மொட்டுக்குள் இருந்து
பூவாக உடைபடவேண்டும்

வெடித்து விழுவதானால்
ஒரு
வீரனின் துப்பாக்கியிலிருந்து
தோட்டாவாய்
வெடித்துச் சிதறு!

வளர்ப்பு மகன்களைக்
கைவிடுவதுபோல்
வளர்த்த சிந்தனைகளை-எவரும்
கைவிட மாட்டார்கள்!

அறிவின் நாளங்களில்
சொந்தச் சிந்தனைகள்
அலையடிக்கும்போது
ஒவ்வொருவனிலிருந்தும் பிறப்பார்
ஒரு புத்தர்; ஒரு பெரியார்!



பூமியைப் பார்க்கப்
புறப்பட்டு வரும்
சூரியன் கையில், எவரெடி விளக்கு
எதற்கு?

மூளை, இருப்பது
உயர்ந்த இடத்தில்...
சிந்திப்பதும் அப்படி இருக்கவேண்டாமா?

சக்கரத்தைச்
சிந்தித்த முதல் மனிதனுக்கு
மாலை சூட்டத்
தூரங்கள் ஓடிவந்தன;
முதலில்
நோய்க்கு மூலிகை
பிழிந்த மனிதனைப் பார்த்து
மரணத்திற்குக்
கண் எரிந்தது-

சிந்திப்பவன்
நாளை கெட்டால்,
சிந்தனை இன்றே கெடும்!

கவிதைக்கு
எய்ட்ஸ் வரும் முன்பே,
கவிஞன் இறந்துவிடுவான்!

அழுகிப்போன பாடலை
புல்லாங்குழல் கூட அனுமதிக்காது.
அனுமதித்தால்...
இசையுலக விசாரணையில்
தண்டனையிலிருந்து, தப்ப முடியாது.

மூடச் சிந்தனைக்கு
மூளை,
ஜன்னலைத் திறந்தால்
கேடுகளுக்கு
வாழ்க்கை, கதவைத் திறந்துவிடும்!

காமத்தின்
உறக்கம்கூடப் பத்துப்பேர் கற்பைச்
சூறையாடிவிடும்!

நடக்க முடியாத
பொய்கூட,
நான்கு உண்மைகளைக் கொன்று
வீழ்த்திவிடும்...

இயற்கை,
வானத்தில் இருந்து
சிறகுகளைச் சிந்திக்கிறது...

மனிதன்
மண்ணில் இருந்து
சிறைகளைச் சிந்திக்கிறான்!

இயற்கை,
பூமிக்குள் இருந்து
இரும்பைச் சிந்தித்தது
பூமிக்கு...
மேல் இருந்து மனிதன்
விலங்குகளைச் சிந்தித்தான்...

இயற்கை,
பயிர்களில் இருந்து உயிர்களின்
பசியைச் சிந்தித்தது...
மனிதன்,
பதுக்கி வைத்துக் கொள்ளையடிக்கும்
பணத்தைச் சிந்தித்தான்!



சிலர்
சிந்திக்காதபோது விலங்குகளாய்
இருக்கிறார்கள்...
அது பரவாயில்லை...ஏனெனில்
அவர்களே
சிந்திக்கும்போது விலங்குகளைவிட
கீழாய் விடுகிறார்கள்.

வெளிச்சத்தை
மறைத்துக்கொண்டு வாழ
எந்த விளக்கும் விரும்பாது...
ஏன்
எண்ணங்களை

மனிதன் மறைக்கவேண்டும்?
மறைக்க வேண்டியதை
ஏன் எண்ணவேண்டும்!

மரம்,
குடை பிடிக்கலாம்...
மழை
குடைபிடிக்குமா?

இழந்தபின்
எண்ணுவதே மனிதன் இயல்பாகிவிட்டது...

தாயைத்
தந்தையை....எண்ணுகிறான்
இழந்த பிறகு...
பிறந்த ஊரை நினைக்கிறான்

பிரிந்த பிறகு
உறவை எண்ணுகிறான்
உதறிய பிறகு
தன்னை, மனிதன்
எண்ணுவது எப்போது?

தன்னை
இழந்தபிறகு ஒருவேளை தமிழன்
தன்னை
எண்ணிப் பார்ப்பான்

இழந்தபிறகும்
தமிழன்
எண்ணிப் பார்க்காதது தாய்மொழி
தமிழ்மட்டும்தானோ?

படம்,
உறங்கும் நேரத்தில்
திரை கதை சொல்லுமா?

அறிவு
வேலை நிறுத்தம் செய்யும் நேரத்தி
அலுவல் பார்க்கச்
சிந்தனைகளை அனுப்பலாமா?
விழிமூடிய எண்ணங்கள்
விபத்து விதைகள்!

சாய்வு நாற்காலியில்
அறிவு இருக்கும் நேரத்தில்
சதுரங்கம் ஆடப் போகாதே...
வெட்டப்படுவது
காயாக இருக்காது! நீயாக இருப்பாய்!

அறிவை
உறங்க வைத்துவிட்டு
சபையேறிப் பேசவரும் ஆட்களுக்குக்
குறைவே இல்லை!
அவ்வாறே
கேட்கவருபவர் எண்ணிக்கையைக்
கேட்கவே வேண்டாம்!

சந்தேகங்கள்
சிந்தனையை வளர்க்கலாம்!
ஆனால்
சிந்தனைகள்
சந்தேகங்களை வளர்க்கக்கூடாது!
சந்தேகத்தில் சிந்தனை...
தொடங்குவது நல்ல அடையாளம்!
சந்தேகத்தில்
முடிவது...

வீடுகட்ட
அஸ்திவாரம் போடுவது
அவசியம்;
ஆனால்
வீடுகட்டுவதே அஸ்திவாரம் போடுவதற்காக
அல்ல...

செயல்களாய்
வடிவம் பெறாத சிந்தனைகளை
எந்த
ஆசிரமத்தில் கொண்டுபோய்ச்
சேர்ப்பது?
எந்த
ஆசிரமத்தில் சேர்த்தால் அவை
கற்பு அழிக்கப்படாமல் தப்பும்?

இன்னும்
சிந்தனைச் சிறகுகளை விரிக்கலாம்
என்றாலும்...
வானம் எனக்கே சொந்தமல்ல
என்பதனால்...
ஒடுங்காத என் சிறகுகளுக்குக்
கொஞ்சம்
ஓய்வு தருகிறேன்!

*...சுதந்திரத்திருநாள் பொன்விழா ஆண்டையொட்டி
சென்னை மாநகராட்சி 23.8.97 அன்று,
நடத்திய **"சிறகுகள் விரிப்போம்"**
கவியரங்கக்கவிதை.*

# மக்கள் சாசனம்

**அரசு நலத்திட்டங்கள்-நடைமுறைகள் பற்றி பொதுமக்கள் அறிந்திட உரிமையளிக்கும்**

**'மக்கள் சாசனம்' வெளியிட, முதலமைச்சர் கலைஞர் ஆணை**

பொதுமக்கள் அதிக அளவில் வருகைதரும் அரசு அலுவலகங்களில் அரசுத் திட்டங்கள், நடைமுறைகள் பற்றிய விவரங்களைக் கணிப்பொறி மூலம் தேவை உள்ளவர்களுக்கு வழங்க அரசு முடிவெடுத்து மேற் குறிப்பிட்டுள்ள ஆணையில் அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன. பொதுமக்களுக்குப் பலனளிக்கக் கூடிய திட்டங்களின் விபரத்தோடு அரசு நடைமுறைகளைப் பற்றியும் மக்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில்




தெரிவிக்கப்படவேண்டும். எடுத்துக்காட்டாக நிலம் வாங்குதல்; விற்றல் ஆகியவற்றைப் பதிவு செய்யும் முறை; வீடு கட்டுவதற்கான ஒப்புதல் நகராட்சிகளிடமிருந்து பெறுதல்; பொது விநியோக முறையின் கீழ் குடும்ப அட்டை பெறுதல்; மின்சாரம், குடிநீர் ஆகியவற்றிற்கான இணைப்பைப் பெறுதல், கட்டணத்தைச் செலுத்துதல்; வாகன ஓட்டுநர் உரிமை பெறுவது; வாகனங்களைப் பதிவு செய்தல்; வாக்காளராகப் பதிவு செய்தல் இவை போன்ற அன்றாடப் பிரச்சினைக்கான அலுவலக நடைமுறைகளை மக்கள் எளிதில், தெரிந்துகொள்ளும் வாய்ப்பை உருவாக்கவேண்டும். இத்தகைய வாய்ப்பும், வசதியும் இல்லாவிடில், மக்கள், இடைத் தரகர்கள் மூலமே தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. சென்னை மாநகரில் மக்கள் அதிக அளவில் வரும் பத்து அரசு அலுவலகங்களில் முன்னோடியாக தகவல் நிலையங்களை (Information Booths) அமைக்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது.மேலும் முதற்கட்டமாக, தகவல் பெறும் உரிமைச்சட்டத்தில் (The Tamil Nadu Right to Information Act,1997) வரையறுக்கப் பட்டுள்ளதற்கு உட்பட்டு தகவல்களை அரசுத் துறைகள் அளிக்கலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

2. அரசு நலத்திட்டங்கள் மற்றும் நடைமுறைகளை மக்களுக்குத் தெரிவிப்பதில் வரவேற்கத்தக்க புது முயற்சிகள் சில அலுவலர்களால் மேற்கொள்ளப் படுகின்றன. அவை அந்த அலுவலர்கள் பணியாற்று கின்றவரை மட்டுமே செயல்படுத்தப்படுகின்றன. ஆனால், அவர்களுக்குப் பின்வரும் அலுவலர்கள் ஆர்வமின்மையால் அவற்றைத் தொடர்ந்து செயல்படுத்துவதில்லை. மக்கள் நல்லிணக்கத்துடன் கூடிய நிர்வாகம் (Citizen Friendly Administration) வழங்க தேவையான நிர்வாக முன்னேற்ற முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும் வண்ணம் தேவையான ஒரு மரபை உருவாக்குவது அவசியமாகிறது.

3. மக்களிடம் தொடர்பு கொண்டுள்ள ஒவ்வொரு அரசுத்துறையும் ஆற்றும் பணிகளின் தரம் (Standard, quality) எப்படி இருக்கும் - பணிகளை ஆற்றி மக்களின் தேவையை நிறைவேற்ற எவ்வளவு காலம் ஆகும் என்ற விவரங்களை எல்லாம் தொகுத்து, மக்கள் சாசனம் (Citizens Charter) என்ற வகையில், வெளியிட வேண்டுமென்று அரசு விரும்புகிறது. இதுபற்றிப் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அறிவுரை வழங்கியுள்ளது. அரசுத்துறைகள் மக்கள் சாசனம் வகுத்து அதனைப் போதிய விளம்பரத்துடன் பொதுமக்களின் உபயோகத்திற்குக் கொண்டு வருவதன் மூலம், நேர்மையான - வெளிப்படையான (transparent) மற்றும் மக்கள் நல்லிணக்கம் கொண்ட நிர்வாகம் (People friendly Administration) வழங்க இயலும் என்று அரசு கருதுகிறது. அதனைச் செயல்படுத்தும் வகையில் ஒவ்வொரு துறையும் சட்டசபையின் வரவு செலவுத்திட்டக் கூட்டத்தொடரில் தத்தம் துறை கொள்கை விளக்கக்குறிப்புடன் (Policy note) மக்களுக்கு நேரடிப் பயன் அளிக்கக்கூடிய திட்டங்கள் மற்றும் பணிகள் பற்றியும், மக்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம், அதற்கான நடைமுறைகள், மற்றும் விதிமுறைகள், அப்பலன்களைப்பெறப் பயன்படுத்த வேண்டிய படிவங்கள் என்ன, அதனைப் பெற எந்த அலுவலரை அணுகவேண்டும், எவ்வளவு நாட்களுக்குள் அப்பலன்களைப் பெறமுடியும் என்பன போன்ற விவரங்களைத் தொகுத்து ஒரு கையேடாக (Hand book) சட்டப் பேரவையில் வைக்கவேண்டும் என்றும், பின் அதனைப் பொதுமக்களுக்கு அடக்க விலைக்கு விற்பனை செய்யவேண்டும் எனவும் அரசு முடிவெடுத்துள்ளது. இதன்மூலம், 'இடைத்தரகர்கள்' எவருமின்றி, பயனாளிகள் அரசுத்துறைகளை நேரடியாக அணுகிட வழிவகுக்கப்பட்டு, மக்களாட்சியின் முழுப்பயனை மக்களனைவரும் தடையின்றித் துய்த்திட ஏதுவாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ★

# முதலமைச்சர் கலைஞரின் முற்போக்குத் திட்டமாம்
## நாடுசிறக்க நலம்பல நல்கும்
# 'நமக்கு நாமே' திட்டத்தில்
## மதுரை மாவட்டத்தின் மாபெரும் வெற்றிச்சரிதம்

நாடு சுதந்திரம் பெற்று, 50 ஆண்டுகள் - பொன்விழாக்காணும் இத்தருணத்தில், மக்களாட்சியின் மாண்பிற்குப் புதியதொரு மணிமகுடமாய், நலத்திட்டப் பணிகளின் செயலாக்கத்தில், ஓர் புதிய அத்தியாயமாய், இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டும் திட்டமாக, முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் உருவாக்கப் பட்டதுதான் **'நமக்கு நாமே'** திட்டமாகும்.

ஜனநாயக அரசியலமைப்பில், இது ஒரு சராசரியான திட்டமன்று; ஒரு புதிய அணுகுமுறையாக, மக்களிடம் விழிப்புணர்ச்சியை, சுயசிந்தனையை, புதிய உத்வேகத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு வெகுஜனச் செயலாக்கமாகும்.

தங்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை, உருவாக்கித்தருவது அரசின் பாற்பட்டதே என்றில்லாமல், தாங்களே திட்டமிட்டு, அரசின் உதவி கொண்டு, தங்களின் பங்களிப் போடு, நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்பினை, வழிவகையை உருவாக்கித்தருவதுதான் இப்புதிய இலட்சியத்தின் உயரிய நோக்கமாகும். இதில், மக்களின் ஈடுபாடு விரிவாக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல; எங்கோ ஓரிடத்தில் திட்டமிடப்பட்டு, மக்களுக்கேற்ற வசதிகளை நிர்மாணிப்பதில், எது முக்கியத்துவம் வாய்ந்தது என்று பயன் பெறும் மக்களால் முன்னிலைப்படுத்திட வாய்ப்பளிக்கப்படா நிலையில், சராசரிஅரசின் வழிவழிநெறியாக இருந்த பழைமை நிலை மாற்றப்பட்டு, பயனாளிகளே தெரிவுசெய்துகொள்ளும் உரிமை, குக்கிராம எல்லைவரை பரவலாக்கப்பட்டுள்ளது; எனவே, திட்டம் எங்கு செயலாக்கம் பெறுகிறதோ, அங்கேயே, அதாவது எழில்நிலை அரசுக்கட்டட வளாகத்திலல்ல; குக்கிராமத்து வெற்றிட மைதானத்தில், காடுமேடுகளில், களத்துமேட்டில் மரநிழலில், ஆண்கள்-பெண்கள், சிறியவர், பெரியவர், கற்றோர் - கல்லாதோர், வசதிபடைத்தோர், எளியவர் என்று அனைத்துத் தரப்பினரும் ஒருங்குகூடிக் கலந்துரையாடி, வாதப் பிரதிவாதங்களை நிகழ்த்தி, எதை முன்னுரிமைப்படுத்துவது என்று வெளிப்படையான ஒருமித்த முடிவினை எய்தி, திட்டச் செயற்பாட்டில் முன்னின்று பணியாற்றும்-இது நிகழ்காலச் செயலாக்கம். ஆனால் எதிர்காலக் கட்டமைப்பின் முழுமைபெற்ற நம்பிக்கை. ஜனநாயக நோக்கில், இது ஓர் ஆரோக்கியமான, புத்துலகு படைக்கும், வெகுஜன முயற்சி. எதிர்கால மக்களாட்சிக் கோட்பாட்டில், இது ஒரு தவிர்க்க இயலாத் தனித்த வரலாறு.

எனவே, **'நமக்கு நாமே'**-இது முதலமைச்சர் **'கலைஞரின்** புதிய திட்டம்; புதிய அணுகுமுறை; ஜனநாயகப்போக்கில், இது ஓர் **முழுமையான உரிமையுடன்** கூடிய ஒரு முன்னோட்டப் பயிற்சி. நான் வேறு; அரசு என்பது ஏதோ வேறொன்று என்று காலங்காலமாகவே இருந்து வந்த 'பாராமுக' இருபக்க நிலைப்பாட்டிலும், மாற்றத்தைக் கொண்டுவரும் புதிய பரிணாமம்; தனிமனிதக் கண்ணோட்டத்தில், சமூக, பொருளாதார நிலைகளில் முகிழ்த்திருக்கும் ஒரு புதிய நம்பிக்கை.



எனவே தான், இதுகுறித்த விளக்கத்தில், ஊர்கூடிப் பேசவேண்டும்; திட்டங்களைத் தேர்வு செய்ய வேண்டும்; அரசின் உதவியோடு முழுமூச்சுடன் ஈடுபட்டு செயலாக்கத்தில் அனைவரும் பங்கேற்க முன்வர வேண்டுமெனக் **கலைஞர்** அவர்கள் இடையாறது அறிவுறுத்திவருகிறார்.

ஜனநாயகத்தில் புரட்சி பலபடைக்கவுள்ள இப்புதிய செய்தி, குக்கிராமங்களையும் எட்டியுள்ளது. மதுரை மாவட்டத்தில், தொலைதூர்க் கிராமங்களில்கூட இத்திட்டத்தின் தாக்கம் விழிப்புணர்ச்சியை உருவாக்கி யிருக்கிறது.

**பிரண்டோடி வரத்துக்கால்வாய்:**

அதனடிப்படையில், கொட்டாம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த மணப்பச்சேரி ஊராட்சியிலடங்கியுள்ள, வெள்ளினிப்பட்டி கிராமத்தில், 500 ஏக்கருக்குப் பாசன நீர் கொணரும் 3 கி.மீ. நீளமுள்ள பிரண்டோடி வரத்துக் கால்வாய், திருமணிமுத்தாறு என்னும் காட்டாற்றிலிருந்து நீர் பிரிந்து வரவேண்டும். ஆனால், வரத்துக்கால்வாய், 50, 60 ஆண்டுகளாகச் சீர்செய்து பராமரிக்கப்படாததால் முட்புதரும் மேட்டுத்திட்டுகளாகவும்மாறியது. நீர்வரத்து இல்லாததால், அதை ஒட்டியிருந்த நிலச் சொந்தக் காரர்களால் ஆக்கிரமிப்பும் செய்யப்பட்டது. இதனால், வரத்துக்கால்வாய் இருந்த இடமே தெரியாத நிலை ஏற்பட்டது; இதை நம்பியிருந்த 18 கண்மாய் விவசாயிகளின் நிலை பரிதாபத்துக்குரியதாக மாறியது.

இதை மையமாகக் கொண்ட 4 கிராமத்து மக்கள் ஒன்று திரண்டனர். ஊர்ச்சபை கூடியது; 'நமக்கு நாமே' திட்டத்தில் முயலலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது; சென்ட் ஒன்றிற்கு 2 ரூபாய் வீதம், ரூ.75,000 திரட்டப்பட்டது; அரசுப் பங்காக ரூ.2,25,000 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் ஒதுக்கப்பட்டு ரூ.3 இலட்சத்தில் திட்டம் தயாரானது. ஆக்கிரமிப்பாளர்கள், தாங்களாகவே முன்வந்து வரத்துக்கால்வாய் இடங்களை விட்டுத் தாங்களாகவே அகன்றனர். வீட்டிற்கொரு ஆள் என, முள் புதரகற்றல், கரைகளமைத்தல், சிறு பாலங்கள் சீரமைப்பு ஆகிய பணிகளில், ஒருமாத கால உடலுழைப்பைப் பங்களித்தனர். தற்பொழுது, பெய்துவரும் பெருமழையில் பிரண்டோடிவரத்துக்காலில் மழைநீர் புரண்டோடிவரும்; குளங்கள் பெருகும்; விவசாயம் செழிக்கும்; 500 விவசாயக் குடும்பங்களில் புத்தொளியேற்றப்படும்.

**வெ.புதூர் வண்டகச் சோழன்குளம் தூரெடுக்கும் பணி:**

இதே மணப்பச்சேரி ஊராட்சியின் அடுத்துள்ள கிராமம்தான் வெ.புதூர் ஆகும். இங்குள்ள வண்டகச் சோழன் குளத்தை நம்பித்தான் விவசாயம் செய்யும் நிலை; ஆனால், பல்லாண்டுகளாகத் தூர் எடுக்காமல்; முட்புதர் மண்டி மேடாய் மாறியதால் மழையால் பெருகும் தண்ணீர் 2 மாதத்திற்குத்தான் போதுமானதாக இருந்தது. எனவே, விவசாயம் முழுமைபெற, 2 முறை நீர் தேங்கியாக வேண்டிய நிலை. விவசாயம் அரைகுறை என்று அருகியது.

ஊர்மக்கள் கூடினர்; மாவட்ட ஆட்சியரை மதுரையில் சந்தித்து மனுக் கொடுத்தனர். 'நமக்கு நாமே' திட்டத்தில் முயற்சிக்க ஆலோசனை கூறப்பட்டது. மீண்டும் கூடிய கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரும் கலந்துகொண்டார். ரூ.75,000 நிதிதிரட்டி, வங்கிக் கேட்போலையாக மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்கப் பட்டது. அரசின் சார்பில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.2.25 இலட்சம் சேர்த்து ரூ.3 இலட்சத்தில் திட்டம் தயாரிக்கப்பட்டது. ஒப்பந்தக்காரர் எவருமின்றி, பொதுமக்களே, 30 நாட்கள் உடலுழைப்பையும் நல்கி, கண்மாய் தூர் எடுக்கும் பணிக்கான ரூ.3 இலட்சமும் அவர்களாலேயே செலவு செய்யப்பட்டது. முன்பிருந்த ஆழத்திற்கு மேல், கண்மாயின் மதகு மட்டத்திலிருந்து 10 அடி ஆழம், 50 அடி அகலம், 200 அடி நீளத்திற்கு 3 தொட்டிகளும் அமைக்கப்பட்டன. இதன்மூலம் மீன் வளர்க்க ஏதுவாகிறது; கோடையிலும்கூடக் கால் நடைகளுக்குக் குடிநீர் கிடைக்கும். அதோடு, ஆயக்கட்டிலுள்ள 19 கிணறுகளுக்கு நீர் ஆதாரம் கிடைக்க வாய்ப்புள்ளது. பருவத்தில் நெல் மகசூலும், கோடையில், மானாவாரிப் பயிர் செய்ய வாய்ப்பும் கிட்டியுள்ளது. இக்கிராமத்தின் பொருளாதார மாற்றத்திற்கு இதன்மூலம் வழிகாணப்பட்டுள்ளது.

**குன்னாரம்பட்டி ஊராட்சி வெ.புதூர் சமுதாயக் கிணறு அமைக்கும் பணி:**

மலை அடிவாரத்தில் அமைந்துள்ள தொலைதூரக் கிராமமிது. வானம்பார்த்த பூமியாய் புஞ்சையாய்க் கிடந்த அந்தக் குக் கிராமத்தின் நிலப்பரப்புதான் 50 குடும்பங்களுக்கு வாழ்வுதரும் அட்சயபாத்திரம்; ஆனால், மழை பொய்த்தால் பாலைவனமாகி அம்மக்களை வறுமை வாட்டும். அரசின் உதவி கேட்டு மாவட்ட ஆட்சியரை அணுகினர். கிராமத்திற்கே வருகைதந்து கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரும் கலந்து கொண்டார். சங்கம் அமைத்து, கலைஞரின் 'நமக்கு நாமே' என்னும் இலட்சிய அடிப்படையில், சமுதாயக் கிணறு தோண்ட முடிவெடுக்கப்பட்டது. மக்கள் தங்களின் பங்காக ரூ.90,000 அதோடு, அரசின் பங்காக ரூ.1.40 இலட்சம், என ரூ.2.30 இலட்சத்தில் சமுதாயக் கிணறும், டீசல் என்ஜினுடன், என்ஜின் அறையும் கட்டத் திட்டமிடப்பட்டது. தொகை முழுவதும் சங்கப் பொறுப்பிலேயே செலவிடப்பட்டு, இதன் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாய் மாற்றப்பட்டுள்ளன. அம்மக்களின் வாழ்வில் வசந்தம் வந்திடத்தான் செய்தது.

**குன்னாரம்பட்டி ஊராட்சி, மங்களாம்பட்டி, கூப்பிடாச்சேரிக் கண்மாய் ஆழப்படுத்தும் பணி:**

22.60 ஏக்கர் ஆயக்கட்டாகக் கொண்ட, கூப்பிடாச் சேரிக் கண்மாய் மழைநீரையே ஆதாரமாகக் கொண்டதாகும். 50 ஆண்டுகளுக்கு மேலாக தூர் எடுக்கப்படாமல், மேடாகி, கரைகள் பலமிழந்து கிடந்தன. ஒருவரையொருவர் கூப்பிட்டு ஒன்று சேராததாலோ என்னவோ இக்கூப்பிடாச்சேரிக் கண்மாய் பெயரை மட்டுமே தாங்கி நின்றது. ஊர்கூடி 'நமக்கு நாமே' தான் என முடிவெடுத்தனர். அரசின் உதவியை நாடினர். அவர்களின் பங்காக ரூ.10,000, அரசின் பங்கு ரூ.40,000 ஆக ரூ.50,000 அவர்கள் பொறுப்பிலேயே விடப்பட்டது. 'வீட்டிற்கொருவர்' 'நாட்டைக்காக்க அல்ல', அவர்களின் அடிப்படை ஆதாரமான குளத்தைச் செப்பனிட 20 நாட்கள் தாங்களே உழைத்தனர். பணி நிறைவெய்தியது. ஆயக்கட்டுக்கு நேரடிப்பாசனம் என்பதைவிட, 50க்கும் மேற்பட்ட கிணறுகளின் நீர் ஆதாரம் மேம்படுவது திண்ணமே; அதனால், அக் குக்கிராமம் பொருளாதார மேம்பாட்டை எய்தியே தீரும் என்பதில் ஐயமில்லை.

**திருமங்கலம் ஒன்றியம், மேலஉறப்பனூர், நீர் வரத்துக் கால்வாய் சீரமைக்கும் பணி**

6½ கிலோ மீட்டர் நீளமுள்ள மேலஉறப்பனூர் வரத்துக்கால்வாய், 4 கிராமங்களைத்தாண்டி மேல

உறப்பனூர்க் கண்மாயை வந்தடைய வேண்டும். கருமாத்தூரிலிருந்துவரும் இவ்வரத்துக்கால்வாய், அரை நூற்றாண்டுக்கு மேல் தூர்வாரிப் பராமரிக்கப்படவில்லை. வேலிக்கருவை மரக்காடாய் காட்சியளித்தது. மழை பெய்தாலும், வரத்துக்காலில் தண்ணீர் வர வழியில்லாமல், மேடு தட்டி செடியுமும், முள்ளும் நிறைந்த காடு போலாகிவிட்டது. இதனால், கண்மாயில் ஆக்கிரமிப்பும் இருந்தது.

'நமக்கு நாமே' திட்டச் செய்தியின் பயனாய், ஊர் கூடிச் சங்கம் ஒன்றை அமைத்தனர்; மாவட்ட ஆட்சியரை அணுகினார்கள். தீரவிசாரித்த மாவட்ட ஆட்சியரும், உங்கள் பங்காக சங்கத்தின் சார்பில் ரூ.50,000 கட்டுங்கள்; ரூ.4,10,000 அரசின் சார்பில் தரப்படுமென்று உறுதியளித்தார். பொதுமக்களிடம் நம்பிக்கை ஊற்றெடுத்தது. ரூ.50,000 தங்கள் சார்பில் பணமாகக் கட்டியதோடு, ஒப்பந்தக்காரர் இன்றி சங்கத்தின் மூலமாகப் பணி தொடங்கப்பட்டது. வீட்டுக்கொருவர் என்ற அடிப்படையில் 1 மாத காலம், முள் வெட்டி, செடிப்பத்தைகளை அகற்றி, குளம் அமைக்கும் பணியிலும் முழுமூச்சோடு ஈடுபட்டனர். இனிவரத்துக்காலில் நீர் செழித்துப்பாயும்; கால்வாயின் இருமருங்கிலும் உள்ள 150க்கும் மேற்பட்ட விவசாயக் கிணறுகளுக்கு நீர் ஆதாரம் ஸ்திரப்படுத்தப்படும்; 1300 ஏக்கர் ஆயக்கட்டு பாசன வசதி பெற்று, பயிர் செழித்துப் பசுஞ்சோலையாகும்.

பணி நடைபெறும்பொழுது, இங்கு வருகைதந்த வருவாய்த்துறை அமைச்சர் திரு. **நாஞ்சில் மனோகரன்** அவர்கள் கிராம சபையில் கலந்துகொண்டு பொதுமக்களைப் பாராட்டி ஊக்கப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



**இக்கிராமத்து விவசாயக் குடும்பத்துப் பெண்**
**திருமதி. முத்துப்பிள்ளை கூறுகிறார்:**

*"நமக்கு நாமே" மாதிரி கிராமங்களுக்கு நன்மை செய்யும் திட்டங்களை அரசாங்கம் நிறையச் செய்யணும். வேலையும், ஓரளவு ஏழைச் சனங்களுக்கு கூலியாகப் பணமும் கிடைத்தது. வரத்துக் காலையும், கம்மாயையும் (கண்மாய்) தூரெடுத்ததிலே, மழைத் தண்ணீர் நெறைய (நிறைய)த் தேங்கும். விவசாயத்தே நல்லா செஞ்சு 4 காசு பணம் பாக்கலாம் (காசு பணம் பார்க்கலாம்)*

### திருமங்கலம் ஒன்றியம், ஊராண்ட உறப்பனூர் ஊரணி ஆழப்படுத்தும் பணி:

ஊராண்ட உறப்பனூர், பெயரில்தான் ஊராண்டதாக இருந்தது. ஊரணி மண்மேடாகி, விவசாயம் அரைகுறை வருவாயில், அன்றாட வாழ்க்கை பிரச்சினையானது. நமக்கு நாமே திட்டம் நம்பிக்கையை ஏற்படுத்தியது. புதிய எழுச்சியோடு, நம்பிக்கையோடு ஊர்க்கூட்டம் கூடியது; சங்கம் உருவானது; வங்கியில், சங்கத்தின் பெயரால் கணக்குத் தொடங்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரை, மனுவோடும் நம்பிக்கையோடும் சென்று பார்த்தனர். முயற்சி வீணாகவில்லை; அச்சந்திப்பு உற்சாகத்தை ஏற்படுத்தியது. மாவட்ட ஆட்சியர், இச்சிறிய கிராமத்திற்கு வருகைதந்தார்; கிராம சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு மக்களோடு விவாதித்தார். ரூ.2,72,000 மதிப்பீட்டில் திட்டம் தயாரானது. கிராமத்தின் சார்பில் ரூ.50,000 பங்களிக்கப்பட்டது. எஞ்சிய தொகை ரூ.2,22,000 அரசின் பங்காகச் சங்கத்தின் பொறுப்பிலேயே தரப்பட்டது. 20 நாட்கள் நடைபெற்ற இப்பணியில் மக்களின் உற்சாகம் ஊற்றெடுத்தது; ஊரணியின் ஆழம் செல்லச் செல்ல, ஊரணி கிணற்றைப் போன்று ஊற்றுப் பீரிட்டுத் தண்ணீர் ஓடியது; ஊரணியில் தேங்கிய தண்ணீரை ஆயில் என்ஜின் மூலம் நீரிரைத்து விவசாயப் பணிகள் மழைக்கு முன்னரேயே தொடங்கப்பட்டன. 60 ஏக்கர் நிலம் பாசனம் பெறும் வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்டு மக்களின் நம்பிக்கையிலும், பொது உழைப்பிலும் உற்சாகம் பீரிட்டது.

வாழ்வதற்கு வழிவகுக்க அரசின் உதவியோடு ஊரணியை ஆழப்படுத்திய மக்கள், இறுதிப் பயணம் செய்பவர்களுக்கு இடைஞ்சலாக இருந்த முட்புதர்களை அரசின் நிதிஉதவியை எதிர்பார்க்காமலேயே, 'நமக்கு நாமே' என்ற இலட்சியத்தின் புதுப்பிரவாகமாக ½ கிலோமீட்டர் தூர இடுகாட்டுப் பாதையைத் தாங்களே சரிசெய்து கொண்டனர். இதுதானே நமக்கு நாமேயின் எதிர்கால எதிர்பார்ப்பு; நிகழ்காலமே சான்றாகி விட்டது என்பது பாராட்டுக்குரியதன்றோ!

### கள்ளிக்குடி ஒன்றியம், உவரி நீர்வரத்துக் கால்வாய் சீரமைப்புப்பணி:

கள்ளிக்குடி ஒன்றியத்தைச் சார்ந்த, வில்லூர் ஊராட்சியிலுள்ள ஒரு குக்கிராமம்தான் உவரியாகும். ஆதிதிராவிட இனத்துமக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஓர் ஏழைக்குக்கிராமமது; உவரிக் கண்மாய்க்கு நீர் கொணரும், வரத்துக்கால்வாய் 25 ஆண்டுகளுக்கு மேல் பராமரிப்பு இல்லை; நீர்வரத்துக் கால்வாய் இருந்த இடம் தெரியாமல், மேடுதட்டிப் போனது; விளைவு, ஆக்கிரமிப்பாளர்கள் பொது இடத்தை வளைத்துப் போட்டனர். உவரிக் கண்மாய், மழைபெய்தும் நிறையா நிலை. நிலமிருந்தும், குளமிருந்தும் விவசாயம் செழிக்கவில்லை; அன்றாட வயிற்றுப்பாட்டிற்கே அல்லாடிய அம்மக்கள் 'பிழைப்புக்கு வழி தேடிப் பிற ஊர்கள் செல்லும் நிலை. சீண்டுவார் யாருமில்லை; பேணுவார் எவருமில்லை; என்ற சுய பச்சாதாபத்தில் விரக்தியின் விளிம்பில் நின்ற அவ் ஏழை மக்களுக்கு, நம்பிக்கையின் விடிவெள்ளியாய், புதிய உதயமாகப் புத்தொளியாய் வந்த செய்திதான்', 'நமக்கு நாமே'. உதவிக்கரம் நீட்டக் கலைஞரின் தலைமையிலான அரசு தயார்தான் என்றாலும், அவநம்பிக்கையிலேயே ஊறிப்போன அம்மக்கள், மிகுந்த தயக்கத்துடனேயே மாவட்ட ஆட்சியரை அணுகினர் 'உழைக்க எங்களிடம் கரங்கள்தான் உள்ளன; பங்கிற்கு உழைக்கிறோம்; ஆனால், பங்குப் பணமாகப் பெரியதொகை, அவ்வளவாக, 'எங்களால் இயலாதென அச்சத்துடனேயே கூறினார்'; 'அச்சப்படவேண்டாம்'; 'இயன்றதை முயலுங்களேன்' என்ற மாவட்ட ஆட்சியரின் ஆறுதல் மொழி, அவர்களுக்குப் புதிய நம்பிக்கையைத் தந்தது. இயன்றவரை முயன்றனர்; அதிகபட்சமாக ரூ.19,000 தேறியது. ஆனால், 2.1 கிலோமீட்டர் தூரத்தைத் தூர்வாரிச்

செப்பனிட, மேலும் 1,28,000 தேவை; வாக்களித்தபடி, அரசின் சார்பாக இத்தொகை ஆட்சியரால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

உழைப்புக்கு அஞ்சா அம்மக்கள் ஊரோடு ஒரணியாய் தூர்வாரப் புறப்பட்டதும், ஆக்கிரமிப்புத் தடைகள், சொல்லாமல், கொள்ளாமலே விடைபெற்றன. பணி நிறைவெய்தியது; சிறு விவசாயிகளான உவரிச் சிற்றூரின் அந்த ஆதிதிராவிட மக்களின் உள்ளத்தில், குளம்பெருகும், விவசாயம் செழிக்கும் என்ற பெரிய நம்பிக்கையில், நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். அதோ வானம் கருக்கிறது; நாடு செழிக்கவொரு நல்ல மழை பெய்யத்தான் செய்யும். 'நம்பியோர் கெடுவதில்லை' அந்த உழைப்பாளி மக்களின் நிலை உயரும். உன்னதமாகும்.



**சின்ன கணேசன் என்ற ஆதிதிராவிடப் பெரியவர் பகருகிறார்: 'கண்மாய்க்கு வரும் வரத்துக்கால்வாய் மேடு தட்டிப்போனது; ஆக்கிரமிப்பால் இருந்த இடம் தெரியாமப் போச்சு எங்க ஊரு வரத்துக்காலு; ஆச்சு வருஷம் 25; அழிந்துபோன வரத்துக்காலில் தண்ணீர் வர, நமக்கு நாமே எங்களுக்குக் கை கொடுத்துச்சு. மழை வரும்; கம்மாய் பெருகும்; விவசாயம் செழிக்கும். சுருங்கிப் போன எங்கள் கும்பிக்குப் பால் வார்த்த திட்டமிது' என்று சொல்லும்பொழுது அவரது வாயெல்லாம் பல்; ஆம் நம்பிக்கையின் தாக்கம் அவரை வாய் மலரச் சிரிக்க வைத்தது.**

### செல்லம்பட்டி ஒன்றியம்: கொடிக்குளம் பெரிய கண்மாய் தூரெடுத்தல், நீர்வரத்துக்கால்வாய் சீரமைத்தல்.

மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரில் பருவத்தில் பெய்யும் மழை. 1½ கிலோமீட்டர் தூரம் ஓடிவந்து, கொடிக் குளத்திலுள்ள சுமார் 116 ஏக்கருக்கு மேல் பரப்பளவைக் கொண்ட பெரிய கண்மாய்க்கு வந்து சேரவேண்டும்; மேற்குத் தொடர்ச்சி மலையில் பருவந் தவறாமல் மழை பெய்யத்தான் செய்தது; ஆனால் கொடிக்குளம் பெரிய கண்மாய் பெருகி ஆண்டுகள் பலவாகி விட்டன. காரணம் வரத்துக்கால் சீரமைப்பின்றி மேடானது பாதி; ஆக்கிரமிப்பு மீதி. வரத்துக்கால் தென்னை மரத்தோப்பாய், விவசாய நிலமாய் மாறியது. ஆனால் பாசனத்தை நம்பியிருந்த 106 ஏக்கர் நிலம் பாலையாக மாறும் நிலை. நமக்கு நாமே கைகொடுத்தது. ஊர்ப்பங்கு ரூபாய் ஒரு இலட்சம்; அரசுப் பங்கு 3.66 இலட்சத்தையும் சேர்த்து ரூ.4.66 இலட்சம் பொதுமக்களாலேயே செலவிடப்பட்டு பெரிய கண்மாய் ஆழப்படுத்தப்பட்டது. ஊர் கூடியதுகண்டு ஆக்கிரமிப்புகள் தாமாகவே விலகின. வரத்துக்காலில் செழுமையாய் வளர்ந்த தென்னைகளைக்கூட அவர்களாகவே வெட்டி வழிதந்தனர். 'ஒப்பந்தக்காரரின்றி நாங்களே இப்பணிகளைச் செய்தோம்; எனவே, வேலையின் தரத்துக்கு நாங்களே சாட்சியென்று' அவ்வூர் மக்கள் பெருமையுடன் பிரகடனப்படுத்தினர்.

### ஜோதில் மாணிக்கம் கண்மாய் தூரெடுக்கும் பணி:

இதே கொடிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ளது ஜோதில் மாணிக்கம் கண்மாய். கண்மாயைச் சீரமைத்து, வரத்துக்கால் சரிசெய்ய, ரூ.4 இலட்சத்தில் திட்டமிடப்பட்டது. அரசின் சார்பில் ரூ.3 இலட்சமும், பொதுமக்களின் சார்பில் ரூபாய் ஒரு இலட்சமும் ஆக மொத்தம் ரூ.4 இலட்சமும் கிராம சபையிடம் வழங்கப்பட்டது. 178 ஏக்கர் பரப்பிலான இக்கண்மாயும், 2¼ கிலோமீட்டர் தூர வரத்துக்கால்வாயும் சரிசெய்யப்பட்டன. சுமார் 200 ஏக்கர் ஆயக்கட்டு நிலம் 'நமக்கு நாமே' மூலம் 20 ஆண்டுகளுக்குப்பிறகு பாசனவசதி ஸ்திரபடுத்தப்பட்டுள்ளது. இதனால் விவசாயம் பெருகும்; அக்கிராம மக்களின் பொருளாதார நிலையும் உறுதியாக உயர்ந்துதானாகும்.

### உசிலம்பட்டி ஒன்றியம், புதுக்கோட்டை, திம்மநத்தம் வரத்துக்கால் சீரமைக்கும் பணி:

உசிலம்பட்டி ஒன்றியத்தின் மிகப் பின்தங்கிய பகுதியான திம்மநத்தம் ஒரு தொலைதூரக் கிராமமாகும். ஆண்டிப்பட்டி மலைத்தொடரில் பெய்யும் மழை, 1½ கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஓடையின் வழியாக, 3 கிலோமீட்டர் நீளம் கொண்ட மிகப்பெரிய கண்மாய்க்கு வந்து சேர வேண்டும். ஆனால் பராமரிப்பின்றி மழைநீர் முழுவதுமாகத் தேங்கவில்லை; இதையே நம்பியிருந்த விவசாய மக்களின் வாழ்க்கைநிலை கேள்விக்குறியானது. 'நமக்கு நாமே' திட்டமறிந்து, அரசை அணுகினர். 10,000 ரூபாய் வசூலித்து அரசிடமிருந்து ரூ.1,10,000 பெற்று, அவர்களே முன்னின்று பணியைச் செவ்வனே செய்து முடித்தனர். இதனால், அதிகத் தண்ணீரைச் சேமித்து விவசாயம் செழித்தோங்கும்; குடிநீர்ப் பற்றாக்குறையும் என்றே இப்பகுதி மக்கள் மனநிறைவடைந்துள்ளனர்.

### செல்லம்பட்டி ஒன்றியம், நாட்டார் மங்களம், கண்மாய் மராமத்து, வரத்துக்கால் சீரமைப்பு:

பெரியார் பாசனம் திருமங்கலம் பிரதானக் கால்வாயிலிருந்து நாட்டார் மங்களம் கண்மாய்க்கு 5.4 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து தண்ணீர் வரவேண்டும். ஆனால், வரத்துக்கால்வாய் தூர் எடுக்கப்படாததால், கண்மாய் நிரம்பி ஆண்டுகள் பல ஆகிவிட்டன. விவசாயம், கண்மாய் நீரை ஆதாரமாகக் கொண்டநிலையில், விவசாயம் மிகுந்த பாதிப்புகுள்ளானது. இப்பகுதி மக்கள், 'நமக்கு நாமே' திட்டத்தில் செயல்படுத்தக்கோரி மாவட்ட ஆட்சியரை அணுகினர். வரத்துக்கால்வாய் சீரமைப்பிற்கு, ரூ.4,29,000 நாட்டார்மங்களம் கண்மாய் பழுதுபார்க்க ரூ.3,69,000 ஆகமொத்தம் ரூ.7,98,000-ல் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. இதில், அரசின் சார்பில் ரூ.5,98,000 ஒதுக்கப்பட்டு மக்களின் பங்காக ரூ.2,00,000 அளிக்கப்பட்டது. ஒப்பந்தக்கார முறை ஏதுமின்றி, கிராமத்து விவசாயப் பெருங்குடி மக்கள் நேரடியாகப் பங்கு கொண்டு பணிகள் சிறப்பாக முடிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது, மழைநீராலும் திருமங்கலம் பிரதானக் கால்வாயின் நீர்வரத்தைக் கொண்டும் கண்மாயில் அதிக அளவு தண்ணீர் தேக்கிவைக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. எனவே, இப்பகுதி விவசாயம் செழிக்கும்; மக்களின்

வாழ்வும் சிறக்கும்; அதோடு, அருகிலுள்ள வாகைக்குளம் கிராம விவசாயிகள் பயனடைய, நாட்டார்மங்களத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் வாய்ப்பும் உருவாகியுள்ளது.



"இந்தியாவை நகரங்களில் அல்ல. அதன் கிராமங்களில்தான் காண வேண்டும் என்று நான் நம்புகிறேன். அதையே எண்ணற்ற தடவைகள் திரும்பத்திரும்பக் கூறி வந்திருக்கிறேன். இன்னலின்றி வாழக்கூடிய இந்தியக்கிராமங்களை உருவாக்குவதே நாட்டை நேசிக்கும் ஒவ்வொரு வருக்கும் உள்ள பணி".

-அண்ணல் காந்தி

முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் 'அண்ணா மறுமலர்ச்சித்திட்டமாக', 'நமக்கு நாமே' திட்டமாக, தமிழகக் கிராமங்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டை வலுப்படுத்தும் இத்தகைய திட்டங்கள் விரைந்து செயலாக்கப்படுவதன் வாயிலாக, அண்ணல் காந்தியடிகளின் அந்தக் கனவுகள் இன்று நனவாகின்றன.

தொகுப்பு : **எம்.விஸ்வநாதன்,பி.எஸ்ஸி.,**
இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)
ஊரக வளர்ச்சித்துறை.

கட்டுரையாக்கம் : **சௌமியன் இளவல்**

# உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்குவது குறித்து ஆராயக் குழு அமைத்து

## முதல்வர் கலைஞர் ஆணை

தமிழகத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மாநிலத் திட்டக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று, பல்வேறு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்கி, தமிழக அரசினால் ஆணைகள் இடப்பட்டுள்ளன.

அந்த ஆணைகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள பல்வேறு அதிகாரங்களுடன் மேலும் என்னென்ன அதிகாரங்களையும், பொறுப்புகளையும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து ஆராய்வதற்காக, தமிழகச் சட்டப்பேரவையில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும் பின்வரும் சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர் களாகவும் கொண்ட குழு ஒன்றை அமைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

1. மாண்புமிகு திரு.கோ.சி.மணி — அமைப்பாளர்
   ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
2. திரு.பெ.சு.திருவேங்கடம், — உறுப்பினர்
   சட்டமன்ற உறுப்பினர், தி.மு.க.
3. திரு.பரமத்தி சண்முகம் — "
   கரூர் மாவட்ட தி.மு.க.செயலாளர்
4. திரு.என்.ஆர்.அழகிரி, — "
   சட்டமன்ற உறுப்பினர், த.மா.கா.
5. திரு.என்.ஆர்.அழகர்ராஜா, — "
   சட்டமன்ற உறுப்பினர், த.மா.கா.
6. திரு.எம்.அப்துல் லத்திப், — "
   சட்டமன்ற உறுப்பினர், இ.தே.லீக்
7. திரு.பி.கருப்பசாமி, — "
   சட்டமன்ற உறுப்பினர், அ.இ.அ.தி.மு.க.
8. திரு.ஏ.இராசேந்திரன் என்ற தீரன் — உறுப்பினர்
   சட்டமன்ற உறுப்பினர், பா.ம.க.
9. திரு.இலா.சந்தானம், — "
   சட்டமன்ற உறுப்பினர், அ.இ.பா.பிளாக்
10. திரு.ஜி.இராமகிருஷ்ணன் — "
    மாநிலச் செயற்குழு உறுப்பினர்,
    இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
11. திரு.ஏ.எம்.கோபு, — "
    மாநிலச் செயற்குழு உறுப்பினர்
    இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
12. திரு.பி.அய்யாக்கண்ணு, தலைவர் — "
    திருச்சி புறநகர் மாவட்ட ஜனதாதளம்
13. டாக்டர் வ.மைத்ரேயன் — "
    மாநில பொதுச்செயலாளர்
    பாரதீய ஜனதா கட்சி

சட்டமன்றத்திலுள்ள இதரக்கட்சிகள், தங்கள் கட்சிகளின் சார்பாக உறுப்பினர்களை நியமிக்க இதுவரையில் எந்தப் பரிந்துரையையும் செய்யவில்லை.

மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளுக்கு இதுவரை வழங்கியுள்ள அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பல்வேறு திட்டங்களைக் கண்காணிக்கும் பணிகள் ஆகியவற்றை ஆய்வு செய்து, மேலும் எத்தகைய மாற்றங்களைச் செய்யலாம் மற்றும் எத்தகைய உரிமைகளையும் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் அளிக்கலாம் என்பது பற்றியும் அரசுக்குப் பரிந்துரை செய்தல் இக்குழுவின் ஆய்வு வரம்புகளாகும்.

இக்குழு ஒரு முதல்நிலைக் குழுவாக இருக்கும். தனது அறிக்கையினை ஆறுமாத காலத்துக்குள் அரசுக்கு வழங்கும். ★



# புயல்

**போ**ர் என்றாலே மக்களுக்கு ஓர் நடுக்கம். ஆனால் அந்தப் படையையே நடுங்கவைக்க கூடியது புயல். தமிழகத்துக்கும், கிழக்கு கரையோர மாநிலங்களுக்கும், இது புயல் வரும் காலம். நவம்பர் முதல் வாரத்தில் பருவ மழை துவங்கி முதல் மூன்று வாரங்களில், குறைந்த காற்றழுத்த மண்டலத்தினால் ஏற்பட்ட பெரும் மழையின் காரணமாக, இதுவரை 150க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இதுவே ஒரு புயலாக இருப்பின், நினைத்துப் பார்க்கவே ஓர் அச்சமாக உள்ளது. கடந்த 105 ஆண்டுகளில் அதாவது 1891 முதல் 1996 வரை, 56 புயல்கள் தமிழ்நாட்டைத் தாக்கி, உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பெரும் சேதம் ஏற்படுத்தியுள்ளன.

1943-ஆம் ஆண்டில் மே மாதம் சரியான வேனிற் காலத்தில் திடீர் என்று உருவான புயல் காரணமாக கடலூரில் 57 செண்டிமீட்டர் மழை பெய்தது. புயலைக் கண்டு அஞ்சினாலும், இப்போது நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வானிலை ஆய்வுத்துறை உதவுகிறது. செயற்கைக்கோள்கள் மூலமாகவும் ராடார்கள் மூலமாகவும் புயலின் தோற்றத்திலும், நகரும் திசையையும், அதனுடைய தீவிரத்தையும் துல்லியமாக அறிந்து, இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை மூலமாகவும், கடலோர பகுதியினருக்கு அறிவிப்புகள் மூலமாகவும், பொதுமக்களுக்கு முன்எச்சரிக்கை செய்கிறது. இதனால் அரசாங்கமும் மக்களும் முன்எச்சரிக்கையாக நடந்து கொள்ள முடிகிறது.

**தமிழில் புயல், சூறாவளிக் காற்று என்றும் ஆங்கிலத்தில் சைக்கிளோன், டைப்பூன், ஹரிக்கேன் என்றும் கூறப்படும் புயல் எப்படி உருவாகிறது ?**

காற்று மண்டலத்தில் ஏற்படும் கடும் சுழற்காற்று ஆழ்கடல் பகுதியிலிருந்து கடலோரப் பகுதிகளை நோக்கி புயலாக வீசுகிறது. காற்று மண்டலத்தில் 150-லிருந்து 180 கி.மீ.குறுக்களவுக்கும், 10 முதல் 17 கி.மீ.உயரத்திற்கும் ஏற்படும் பெரும் சுழற்காற்று புயலெனப்படும். இது மையப்புள்ளி ஒன்றைச் சுற்றிச் சுழன்று கொண்டும், கடலுக்கு மேலாக ஒரு நாளைக்கு 300-லிருந்து 500 கி.மீ. வேகத்தில் நகர்ந்து கொண்டும் இருக்கும். சூறாவளிப் புயலின் மையப்பகுதியிலிருந்து 50-லிருந்து 100 கி.மீ. தூரத்திற்கும் உள்ள பகுதியில் காற்றின் வேகம் மணிக்கு 150 கி.மீட்டராகவே - 200 கி.மீ. மற்றும் அதற்கும் அதிகமாகவோ இருக்கக்கூடும். சூறாவளிப் புயல் வீசுகையில் கனத்த மழையும் கடல் அலைகளின் கொந்தளிப்பும் இருக்கும்.

புயலை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். கண் அல்லது மையப்பகுதி. 10 முதல் 20 கி.மீ. விட்டமுள்ள அமைதியான மையப்பகுதி. இங்கு அமைதியான அல்லது லேசான காற்றும், வானம் ஓரளவு மப்புடனும் இருக்கும்.

இரண்டாவது கண் அல்லது மையப் பகுதியின் சுவர் போன்ற உள்வளையப் பகுதி. இங்கு 100-லிருந்து 200 கி.மீ. வேகத்தில் சுழற்காற்று வீசும். இப்பகுதியில் அகலம் 50 முதல் 100 கி.மீட்டராக இருக்கும். இங்கு கடுமையான கனத்த மழையும் உண்டாகும்.

இதற்கு அடுத்ததாக அமைந்துள்ள, வெளிப்புயல் பகுதியில் கண் சுவரிலிருந்து வீசும் காற்றின் வேகம் சற்று குறைந்திருக்கும். சில இடங்களில் மழையோ, கனமழையோ பெய்யலாம். நான்காவதாக உள்ளது வலுவற்ற காற்றோட்டமுள்ள புறப்பகுதி.

புயலின் 'கண்' கடக்கும் பகுதிகளில் இருமுறை கடுமையான காற்று இருக்கும். லேசான காற்றுடன் கூடிய 'கண்' பகுதி கடக்கும் முன்னதாக ஒரு முறையும், கடந்த பின் ஒரு முறையும் நிகழும். அப்போது 'கண்' நகரும் திசையின் எதிர்த்திசையில் இருந்து பலமான காற்று வீசும். புயலின் 'கண்' ஒரு இடத்தைக் கடக்க ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் ஆகலாம். புயலின் 'கண்' கடப்பதற்கு முன்னும் பின்னும் வீசும் காற்றும், விடாத அடை மழையும் ஆறு முதல் எட்டு மணி வரை நீடிக்கும்.

புயல்கள் உருவானதை கண்டுபிடிக்க உயர்சக்தி ராடார்கள் பயனுள்ள சாதனங்களாக இருக்கின்றன. புயல் உருவானதைக் கண்டுபிடித்து மக்களுக்கு அவ்வப்போது சொல்ல, இந்திய வானிலை நிலையம் இன்றியமையாப் பணிகளைச்செய்து வருகிறது. கடந்த 100 ஆண்டுகளாக இந்த நிலையம் செயல்பட்டு வருகிறது.

இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் புயல் எச்சரிக்கை நிலையங்கள் புயல்கள் பற்றிய எச்சிரிக்கை-முக்கியமாக துறைமுகங்கள், மீன்பிடிப்பு தொழில், ரெயில்வே, தபால்தந்தி, பாசனம், பொதுப்பணி முதலிய துறைகளைச் சேர்ந்தோருக்கு முதலில் அனுப்புகின்றன. கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக எச்சரிக்கைச் செய்திகள் அனுப்பப்படுகின்றன. துறைமுகங்களில் எச்சரிக்கை



எண்ணுடன் கூடிய கொடி ஏற்றிவைக்கப்படுகின்றது.

இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு, ஆந்திர கடற்பகுதிகளில் புயல் எச்சரிக்கை அறிவிப்பு முறையின் கீழ், முதல் கட்டமாக 100 புயல் எச்சரிக்கை அறிவிப்பு அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இரண்டாவது கட்டத்தின் கீழ், மேற்குவங்காளம், ஒரிஸா, ஆந்திர மாநிலத்தின் வடக்குப்பகுதி, குஜராத் ஆகிய பகுதிகளில் 50 எச்சரிக்கை அறிவிப்பு அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது கட்டமாக தென் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், மஹாராஷ்டிரம், கோவா, டாமன், தியூ கடற்கரைப் பகுதிகளில் மேலும் 100 புயல் எச்சரிக்கை அறிவிப்பு அமைப்புகளை அமைக்கும் பணியும், அவற்றின் திறனை மேம்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கு கடலோரப்பகுதிகளில், அரசு புயல் பாதுகாப்பு மையங்களை அமைத்துள்ளது. இத்துடன் மக்களை, புயலுக்குப்பின் ஏற்படும் பல்வேறு பிணிகளில் இருந்து காக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**எடுக்கவேண்டிய எச்சரிக்கை நடவடிக்கைகள்**

ரேடியோவைத் திருப்பி வானிலை பற்றிய கடைசிநேர எச்சரிக்கைச் செய்திகளைக் கேளுங்கள். வதந்திகளை நம்பாதீர்கள், ரேடியோ மூலம் நீங்கள் அறிந்த அதிகார பூர்வமான செய்தியைப் பிறருக்கும் கூறுங்கள். மண்ணெண்ணெய் நிரப்பிய லாந்தர் விளக்கு ஒன்றையும், டார்ச் லைட் ஒன்றையும் போதிய அளவில் பாட்டரிகளையும் வைத்திருங்கள். தாழ்வான பகுதியிலுள்ள மக்களையும், ஆடு மாடுகள், இதர கால்நடைகள் ஆகியவற்றையும் அப்புறப்படுத்துங்கள். உங்களுடைய வழியில் தாழ்வான பகுதிகள் இருப்பின் நீரால் சூழப்பட்டு அவதியுறுவதைத் தவிர்க்க முன்னதாகவே புறப்பட்டு விடுங்கள். படகுகள் தோணி போன்றவற்றைப் பாதுகாப்பான இடங்களில் கட்டி வையுங்கள். கண்ணாடிக் கதவுகள், ஜன்னல்கள், பாதிக்கப்படக்கூடிய வீட்டின் பிற பகுதிகள் ஆகியவற்றை உறுதியான பலகைகள் வைத்தோ, இறுக அடைத்தோ பாதுகாப்புச் செய்யுங்கள். திறந்த வெளியில் இருக்கும் நாற்காலிகள், சாமான்கள், தகரக் குவளைகள் போன்றவையும், கூரை மீதிருக்கும் உதிரிப் பொருள்களும் பலத்த காற்றில் பறந்து போய் நாசம் விளைவிக்கக்கூடும். அவற்றை வீட்டுக்கு உள்ளே எடுத்துச் சென்று வலுவுள்ள ஆதாரமான பொருள்களுடன் சேர்த்து இறுகக் கட்டிவையுங்கள். சரியான கூரையும், உறுதியான அடித்தளமும் இல்லாமையால் உங்கள் வீடு கடுமையான காற்றைத் தாங்காது எனக் கருதினாலோ, தாழ்வான பகுதிகளில் உங்கள் வீடு இருந்தாலோ பாதுகாப்புடன் கூடிய வேறு இடத்திற்குச் செல்லுங்கள். கெட்டுப் போகாமல் இருக்கும்வகையில் நல்ல குடிநீரையும் உணவையும் பத்திரப்படுத்துங்கள். புயல் வீசுகையில் வெளியே போகாதீர்கள். புயல் சற்று ஓயும்போது அவசரத் தேவைக்காக வெளியே போக வேண்டியிருந்தால், பாதுகாப்பான இடத்திற்கு அண்மையிலேயே இருங்கள், திடீரென எதிர்த் திசையிலிருந்து கடும் காற்று மீண்டும் வீசலாம். எந்த நேரத்திலும் அமைதியாக இருங்கள். நெருக்கடியைத் திறமையுடன் நீங்கள் சமாளித்தால் அது மற்றவர்களுக்கு ஊக்கமளிப்பதாக உதவுவதாக இருக்கும். இருப்பினும், புயலுக்குப்பின் அமைதி எப்போது என்று அரசும் மக்களும் ஆவலாக நோக்குகிறார்கள். புயலின் போது போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகளை அரசு தொடங்குவதால் புயலும் ஓர் போர் போலத்தான் ஆகிறது.

- நன்றி:

*பத்திரிகைத் தகவல் அலுவலகம்,*
*இந்திய அரசு.*

*ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.*
*சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.*
*தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906*


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA.7556.95



தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



"கூட்டுறவு என்பது, காகங்கள் கூடி இருப்பதைப் பகிர்ந்து கொண்டு போவது அல்ல. கூடுவது, காகங்கள் கூடுவதைப் போல இருக்கக்கூடாது. கூட்டுறவு, மேகங்கள் கூடுவதைப் போல இருக்கவேண்டும். மேகங்கள் கூடுவது, மழையைத் தருவதற்காக, மக்களுக்கு நன்மைகளைக் கொடுப்ப தற்காகக் கூட்டுறவு இருக்க வேண்டும்".

மாண்புமிகு முதலமைச்சர்

**கலைஞர்**

